# ஜகன்மோகினி

1-3-'50 மாசிமீ அணா நான்கு.

7



3L
ஈவா.N12253
N50.27'3

27-வது ஆண்டு

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# மகாத்மாஜி ஸேவா சங்கம், திருவல்லிக்கேணி

## திருப்பாவை

சங்கத்தில் பண்டித திருவாலி ராமானுஜாசாரியரால் திருப்பாவை பாசுரங்கள் முப்பது தினங்களும் முறையே வெகு அத்புதமாக உபன்யாஸம் நடைபெற்று, சனிக்கிழமை சங்கராந்தியன்று வெகு விமரிசையாய் சாற்றுமுறையும் ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணமும் நடைபெற்றன.

## ஸ்ரீ த்யாகராஜ கீர்த்தனைப் போட்டியும், விழாவும்

ஸ்ரீ த்யாகராஜ கீர்த்தனைப்போட்டி சங்கத்தில் 17-1-50உ வைக்கப்பட்டது. சுமார் 20 பேர்கள் கலந்துகொண்டார்கள். அந்தப் போட்டிக்கு ஸ்ரீமதிகள் பிச்சம்மாள், வஸுமதி ராமஸ்வாமி, டாக்டர் அங்குளி மூவரும் நீதிபதிகளாக இருந்து திறமையுடன்நடத்தினார்கள். பெரியவர்கள் போட்டியில் ஸ்ரீமதி N. ஸீதாபாய் முதல் பரிசு S. மீனாக்ஷி இரண்டாம் பரிசு N. ராஜி மூன்றாம் பரிசு வாங்கினார்கள். சிறுவர்கள் போட்டியில் G. P. கமலா முதல் பரிசு R. ரமணி இரண்டாம் பரிசு, N. ஜெயலட்சுமி மூன்றாம் பரிசு பெற்றார்கள். 7 வயது சிறுமிகள் குமாரி ஹேமாவும், குமாரி அரவிந்தாவும் வெகு அத்புதமாகப் பாடி எல்லோரையும் ப்ரமிக்கச்செய்து ப்ரத்யேக பரிசுகளைப் பெற்றார்கள்.

18-ந் தேதி மாலை ஸ்ரீமதி M. O. ஜானகி அம்மாள் தலைமையில் த்யாகராஜர் தினம் கொண்டாடப்பட்டது. பாடியவர்களுக்கு ஸ்ரீமதி டாக்டர் அங்குளி வெகு அன்புடன் தனது சொந்த செலவில் பரிசுகளை வாங்கி மகிழ்ச்சியுடன் வழங்கி சங்கத்திற்கு மஹோபகாரம் செய்தார்கள். இதை எல்லோரும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். ஸ்ரீமதி A. ஸரோஜாபாய், ஸ்ரீமதி அலமேலு வெங்கட்ராமய்யர் முதலியவர்களும் தலைவியும் வெகு அருமையாய்ப் பேசிக் கூட்டத்தை நடத்தினர்.

## பண்டிதரின் ஷஷ்டிபூர்த்தி விழா

19-ந் தேதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீமான் காரப்பங்காடு வெங்கடாசார் ஸ்வாமி தலைமையில் பண்டித திருவாலி ராமானுஜாசாரியருடைய ஷஷ்டிபூர்த்தி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான்கள் ஆளவந்தாரய்யா, ஆசான் சேஷாசாரியர், V. S. சின்னஸ்வாமி ஐயங்கார் P. R. திருமலைஐயங்கார் முதலியவர்கள் பண்டிதரின் ஸேவைகளையும் அன்னாரின் குண ப்ரபாவத்தையும் பாண்டித்யத்தின் உயர்வையும் பாராட்டிப் பேசினார்கள். தலைவர் வெகு அத்புதமாகப் பேசினார். பண்டிதர் தமது சந்தோஷத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்துப் பேசினார். ஷஷ்டிபூர்த்தி தம்பதிகளுக்கு மாலைகள் சூட்டி பரிசுகள் கொடுக்கப்பட்டன. பலர் காணிக்கை சமர்ப்பித்து கௌரவித்தார்கள்.

## பாலிகா கழக வருஷ விழா

20-ந்தேதி தைமாதம் முதல்வெள்ளிக்கிழமைதினம் பாலிகா கழகத்துச் சிறுமிகள் வெகு அழகாகத் தமது வருஷ விழாவை நடத்தினார்கள். M. C. குந்தலாதேவி தலைமை வகித்தார். பாலிகா கழகத்துக் காரியதரிசி G. P. கமலா முதலில் வரவேற்புக் கூறினாள். பாலிகாகழகத்துச் சிறுமியர் ஆண்டாள் திருக்கல்யாணத்தை நாடகமாய் மிகவும் திறமையுடன் நடித்தார்கள். இதில் ஸ்ரீமதி நீலா பாலசுப்ரமண்யம் பெரும்பாகம் உழைத்து வெற்றிபெறச் செய்தது குறிப்பிடத்தக்கது. M. O ஜானகியம்மாள் இந்த விழா நடக்க தமது வீட்டில் இடம் உதவி பல வசதிகளைச் செய்து கொடுத்தார். பாலிகா கழகத் தலைவி அகிலா வந்தனோபசாரம் கூறினார். தலைமைவகித்த குந்தலா அழகாகப் பேசினார்கள். பாலிகா கழகமே அன்று விழாவுக்குத் தாம்பூலம் கொடுத்து கைங்கர்யம் செய்தது.

(தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்.)

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
– திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
– வீரராகவ கவி

விரோதி ௵ மாசி ௴ | Vol. 27 No. 3. | March. 1950.

MADRAS

## குரலோசை

(வை. மு. ஸ்ரீ.)

"ஹலோ! அப்துல்லாவா? என் குரல் தெரியரதோல்லியோ......ஜய் ஹிந்த்!" என்று ஆசியாவின் குரல் 2-12-1947 உ டில்லியிலிருந்து ஜம்முவின் ஜனப்பிரதிநிதியின் செவியில் ஒலித்தது. இந்தியா—காஷ்மீர் நேரிடையான ட்ரங்க் டெலிபோன் ஸர்வீஸை ஆரம்பித்துவைத்து ஆசியாவின் குரலும் காஷ்மீரின் குரலும் குசலப்ரச்னம் செய்துகொண்டன.

காஷ்மீர் இந்தியாவின் தலையில் ஒரு மகுடமா அல்லது சங்கடமா என்று அன்றிருந்த நிலை, இன்றும், (1950 மார்ச்சிலும்) அப்படியேயிருப்பதானது ஐக்யநாடுகள் சங்கத்துக்கும் பந்தோபஸ்துக் கௌன்ஸிலுக்கும் காஷ்மீர் கமிஷனுக்கும் எப்பேர்ப்பட்ட நற்சாட்சிப் பத்திரம்!

இரண்டு வருடங்களுக்கு முன்பு பந்தோபஸ்து கௌன்ஸிலில் 29-1-48 உ இந்தியப்பிரதிநிதியின் குரல் ஒலித்தது!......"காஷ்மீர் எரிந்துகொண்டிருக்கையில் இங்கு நாம் பிடில் வாசித்துக் கொண்டிருக்கிறோம்!...முக்கிய தீர்மானங்களைச் சீக்கிரமாய்ச்செய்து காரியாம்சத்தில் நிறைவேற்றி வைப்பதற்குப் பதிலாக வீண் விவாதத்திலும் வாய்ப்பேச்சிலும் பொழுதைக் கழித்துக்கொண்டிருக்கிறோம்......" இவ்வளவு காரஸாரமாக ஸ்ரீ கோபாலஸ்வாமி ஐயங்கார் கர்ஜித்தார். ஆனால்? இரண்டாண்டுகள் உருண்டோடியும் பலன் ஒன்றையும் காணவில்லை.

ஐ. நா. கமிஷன் விஷயம் ஒரு நாடகம் போலாயிற்று. அட்லி—ட்ருமன் தலையிடும் பிரயோஜனப்படவில்லை, ஏனெனில் ஒருபக்கம் சாய்ந்தனர். இந்தியாவின் குரலை—நியாயத்தை, நேர்மையை—கேட்கவில்லை. மக்நாட்டன் சமரசயாதாஸ்து ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள் என்பது போலாயிற்றேயொழிய வேறில்லை.

சில தினங்களுக்கு முன் காஷ்மீரின் குரலோசை சென்னையை அதிரச் செய்தது. இந்தியா-பாகிஸ்தான் மனஸ்தாபங்களை எப்படி வெளிநாடுகள் ஸ்வப்ரயோஜனத்திற்கு உபயோகப்படுத்தப் பார்க்கின்றனவென்றும், எப்படி அவை பாகிஸ்தானின் அக்ரமங்களை மூடி, மெழுகி, காஷ்மீரை வைத்துச் சதுரங்கம் ஆடப்பார்க்கின்றன வென்றும், போர்க்கனலை பாகிஸ்தான் மூட்டுவதனால் காஷ்மீரோ இந்தியாவோ கடுகளவும் அஞ்சாவென்பதையும் பொது மக்கள் நன்கு அறியலானார்கள். நம் சுதந்தரச்சிற்பி அஹிம்ஸா மூர்த்தி மஹாத்மாஜியின் குரலோசை ("உண்மையே கடவுள், ஸத்தியமே ஜயிக்கும்") பொய்யாமொழியாகும்.

# ஆகாரத்தில் அனுபவமும் ஹாஸ்யமும்

— பழமொழிப் பிரியன் —

## உபதேச மாகாத்மியம்

சீடர்களுடன் ஒரு குருமூர்த்தி யாத்திரைசெய்துகொண்டிருந்தார். சீடர்களில் சிலர், 'குருநாதர் ஒரு பெரிய சித்தபுருஷர்' என்றும், அரிய பெரிய மந்திரங்களை அநாயாசமாக உபதேசிக்க வல்லவர் என்றும் நம்பினார்கள். ஆனால் 'எப்போது உள்ளம் இளகுமோ? கடாட்சம் ஏற்படப்போகிறதோ? யார்மீது கடைக்கண் அருள் நோக்கம் விழப்போகிறதோ!' என்று ஏங்கியிருந்தார்கள்.

வழியிலே ஓர் ஆற்றங்கரைக்கு வந்துசேர்ந்ததும் குருமூர்த்திக்குக் கருணையும் ஆறாக ஓடியது. ஒரு சீடனைத் தாமே வலுவில் அணுகி, 'உனக்கே ஒரு பெரிய அரிய மந்திரோபதேசத்தை உரியதாக்கப்போகிறேன்' என்றார். அவன் அந்த மந்திரத்தால் கைகூடும் சித்தி இன்னதென்றும் தெரிந்துகொண்டான். ஏற்கெனவே தடியன் அதிசய ஆனந்தத்தாலும் பூரித்துப்போனான், 'என்ன பாக்கியம், பெற்றேன்!' என்று. அவன் பெற்ற பாக்கியம் எல்லாம், குருநாதர் தன் தோளில் சவாரிசெய்யப்பெற்றதுதான்.

குரு உபதேசிப்பதாக வாக்களித்த மந்திரம்தான் என்ன? பழமொழி தெரிவிக்கிறது:

ஆகாசத்திலே பறக்க உபதேசம் சொல்லுகிறேன்;
என்னை ஆற்றுக்கப்பால் தூக்கிவிடு.

ஆற்றைக்கடந்துசெல்லவேண்டுமல்லவா? அந்த ஆறோ பலவிடங்களிலும் சேறுயிருந்தது இவருடைய கருணைபோலே. சிரமப்படாமல், காலை நனைத்துக்கொள்ளாமல் இந்தப் பிரமஜ்ஞி, அக்கரைக்கு மூடச்சீடன் தடித்தோளில் ஜம்மென்று சவாரிசெய்வதை மந்திரோபதேசத்திற்கு முன்கூட்டியே தட்சிணையாகப் பெற்றுக்கொண்டார்!

* * * * *

## பொருளே பரம்பொருள்

ஒரு கிராமத்திலுள்ள மகாஜனங்கள் ஸ்ரீ சங்கராசாரியாரின் பாதபூஜைக்காகவும் செலவுசெய்வதில்லை; ஸ்ரீ வைஷ்ணவ ஜீயர் ஸ்வாமிகளின் ஸ்ரீ பாததீர்த்தத்திற்காகவும் செலவுசெய்வதில்லை; சைவமடாதிபதிகளை முன்னிட்டும் செலவு செய்வதில்லை. அவர்கள் எல்லாரும் இந்துக்கள். அந்தக் கிராமத்தின் வழியாக மேலே சொன்ன மடாதிபதிகள் அடிக்கடி யாத்திரைசெய்வதுண்டு. அந்தக் கிராமவாசிகளின் பக்திக்கும் பஞ்சம் இல்லை; சக்திக்கும் குறைவில்லை. சிவபக்தியும் உண்டு, விஷ்ணு பக்தியும் உண்டு, சமரஸ புத்தியும் உண்டு.

எனினும் எப்படி அந்தக் கிராமவாசிகள் பொருளையும் பரம்பொருளையும் ஒருங்கே போற்றினார்கள்? பழமொழி சொல்லுகிறது:

ஆண்டியைக் கண்டால் லிங்கன் என்றார்;
தாதனைக் கண்டால் ரேங்கன் என்றார்.

18159

### அரைவைத்தியம், முழுப்பைத்தியம்

எத்தனையோ மூலிகை வேர்களைச் சேகரித்துச் சேகரித்து வைத்தியம்செய்துபார்த்துத்தான், ஆயுர்வேதமும் சித்தவைத்தியமும் நீண்டகாலமாக வளர்ந்துவந்திருக்கிறது. மூலிகைகளை நன்றாகத் தெரிந்துகொள்ளாதவன், சிற்சில கொல்லைப்பச்சிலைகளையே தெரிந்திருப்பவன், நல்ல வைத்தியனாக இருந்திருக்க முடியாது. இப்படியாகத்தானே யமனோடு போர் தொடுத்தார்கள்! அது ஒரு காலம். பழமொழி சொல்லிற்று:

ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.

இத்தகைய வைத்தியத்தொழிலில் சோம்பேறிகள் தோன்றினர்; பேராசைக்காரர் பிரவேசித்தனர். சுலபமாய்ப் பணஞ்சேர்க்க வழி தேடினர். நோயைக்கொல்ல அபாயகரமான மருந்துகளைத் தக்க ஆராய்ச்சி முறையில் சோதித்துப் பாராமலே பிரயோகிக்கத் தொடங்கினர். 'சின்னத்தம்பி மாத்திரை சிவலோக யாத்திரை' என்ற ரீதியில் மாத்திரைகளை உபயோகித்தனர். நோயைக்கொல்லும் மாத்திரை நோய்க்கே இடமில்லாமல் செய்துவிட்டது! மேலே சொன்ன பழமொழி சற்றுமாறிச் சொல்லுகிறது:

ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்!

அப்படியானால் முழு வைத்தியனாக விளங்குவதற்கு இரண்டாயிரம் ஆசாமிகளையல்லவோ பைசல்செய்யவேண்டியிருக்கிறது? யமனுடன் போர்தொடுத்தவர்கள் யமனுடன் சேர்ந்தே போரை நடத்தலானார்கள்!

* * * * *

### இஷ்டமே பட்டம்

வக்கீல் ஒருவர் வங்காளத்திலுள்ள ஒரு நீதிமன்றத்தில் ஏராளமான பட்டங்களுடன் ஆஜரானார். 'இந்த மனுஷனுக்கு இத்தனை பட்டங்கள் எப்படிக் கிடைத்தனவோ?' என்று அதிசயித்த நீதிபதி, 'வழக்கறிஞரே, யார் சூட்டியது இந்தப் பட்டங்களையெல்லாம் உமக்கு?' என்று கேட்டார். 'யார் சூட்டவேணும் எனக்கு? யுவர் ஆனர்! நானே சூட்டிக்கொண்டேன்!' என்று சிரிக்காமல் சொன்னாராம். இது சில ஆண்டுகளுக்குமுன் நடந்த நிகழ்ச்சி. இதே மாதிரி ஆசாமிகள் தற்காலத்தில்தான் உண்டு என்பதில்லை. பழைய நவாபு-காலங்களிலும் இருந்திருக்கவேண்டும். அதனால்தான் ஒரு கர்நாடகப் பழமொழி சொல்லுகிறது.

ஆரடா கட்டியது பட்டம்?
அடியேன் இட்டமே பட்டம்!

183159

* * * *

### வீரதீரசூர ஸாம்ராஜ்யம்

சதாவதானி சாம்பசிவ சர்மா எப்படிச் சதாவதானியானார்? நூறு விஷயங்களை ஏககாலத்தில் கவனிப்பதல்லவா சதாவதானம்? இந்தச் சதாவதானி நூறு ஊர்களில் ஏககாலத்திலே சதாவதானம் நடத்துவதாக அறிக்கைகளை அங்கங்கே வெளியிட்டிருந்தார்.

குறித்த தினம் கழிந்தபின் அச்சிட்ட அறிக்கைகள் எல்லாம் எல்லா ஊர்களிலும் பரவலாயின. ஒவ்வொரு ஊர்க்காரரும் 'வேறு எங்கெங்கேயோ சர்மா சதாவதானம் செய்திருக்கவேண்டும்; பாவம், நம்முடைய ஊருக்குவர இயலவில்லை. நம்முடைய பாவம் தான்!' என்று நம்பினார்கள். சர்மாவோ சதாவதானம் பரிபூர்ண வெற்றி பெற்றுவிட்டதாகவே பறைசாற்றுவாராயினர்.

உண்மையில், இவர் சதாவதானம் செய்த இடத்தில் யாருமே இல்லை! இப்படியே பழைய காலத்தில் அசுவமேதயாகம் செய்த அரசர்களும் உண்டு.

அசுவமேதயாகம் என்றால், ஓர் அரசன் ஒரு கம்பீரமான குதிரையைப் பந்தோபஸ்துடன் அதன் இஷ்டப்படி எல்லா ஊர்களிலும் செல்லவிட்டு, அக்குதிரையைப் பிடித்துவைத்துக்கொள்ளும் நெஞ்சுத்துணிவுடைய அன்னிய அரசர்களுடன் போர்புரிந்து வெற்றிபெற்று அரசர்பிரானாகி 'வீர ஸம்ராட்' பட்டத்துடன் வேள்வி செய்வது. யாரோ ஒரு ராஜா அசுவத்தை எங்கேயோ அரசர் இல்லாத இடங்களைப் பார்த்துச்செலுத்திவிட்டு 'வீரதீரகோர ஸம்ராட்' பட்டத்துடன் அசுவமேதயாகம் செய்ய ஆரம்பித்தானாம்'

இதுதான் சதாவதான வீர சூர தீர ஸம்ராட் சாம்பசிவ சர்மாவின் நிலையும். பழமொழி சொல்லுகிறது:

ஆரும் இல்லாத ஊரிலே அசுவமேத யாகம் செய்வான்.

* * * * *

## நாணலும் ஆடும்

ஆற்றை மேடாக்குவதற்கு எவ்வளவு மண்ணையோ மணலையோ வாரிக் கொட்டினாலும் பயன்படாது. வெள்ளம் அடித்துக் கொண்டுபோய்விடும். ஆகவே சில இடங்களில் ஆற்றை மேடாக்க விரும்பியவர்கள் என்ன யுக்தி செய்தார்கள் தெரியுமா? அந்த அந்த இடங்களில் சமயம்பார்த்து நாணலை முளைக்கவிட்டார்கள்.

அப்படியே காடுகெடுத்து நாடாக்க விரும்பியவர்கள் என்ன செய்தார்களாம் தெரியுமா? காட்டைவெட்டித் தள்ளியிருப்பார்கள், அல்லது சுட்டெரித்திருப்பார்கள், கண்ணனும் அர்ச்சுனனும் காண்டவதகனம் செய்தது போலே. இப்படித்தானே நினைக்கிறீர்கள்? அவசரமாகவும் வெகு அவசரமாகவும் காட்டை அழிப்பதற்கு இப்படிச் செய்திருக்கலாம். ஆனால் நிதானமாய் ஆடுகளை மேயவிட்டுக்கொண்டேபோனால் போதுமாம், காடுகள் அழிந்து போவதற்கு.

மேலே சொன்ன இரட்டை அனுபவமும் ஒரு பழமொழியாகப் பேசுகிறது.

ஆறுகெட நாணல் இடு; காடுகெட ஆடு விடு.

இந்தப் பழமொழிக்கு ஒரு குறிப்புப் பொருளும் உண்டு. ஆறுகெட நாணல் இடுவதுபோலவும், காடுகெட ஆடு விடுவது போலவும்தான், நாடுகெட நாட்டார் ரெண்டுபட்டு அன்னியனை ஊடே நுழையவிடுவதும். இப்புதைபொருள் இந்திய சரித்திரப் பிரசித்தம்—இல்லையா?

* * *

### வழக்கும் கிழக்கும்

பழைய காலத்திலே தர்மமே ராஜாதிராஜா. தர்மச்சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நிர்வாக அதிகாரிதான் அரசன். எனினும் இடையிடையே கொடுங்கோலர்களும் தோன்றித் கூத்தாடினார்கள். அவர்கள் 'நாங்கள் இட்டதே சட்டம்; எங்கள் கருமமே தருமம்!' என்றார்கள். இப்பேர்ப்பட்ட அரசர், 'பாறாங்கல்லிலே பச்சைக் கொடி படருது பார்!' என்று சொன்னால், அமைச்சர், 'கோத்தாயிரம், குலை ஆயிரம்' என்று ஒப்பம்போடுவாராம்.

ஒரு நவாப் அபின்-மயக்கத்திலே பட்டப் பகலை நட்ட நடுநிசியென்று சொல்லிவிட்டான்! உடனே அவனுடைய மந்திரிமார்களும் பிரபுக்களும் எரிக்கும் வெயிலில் வேர்க்கவேர்க்க நின்றுகொண்டு, 'ஆமாம், அரசே, என்ன பால்-நிலா! சந்திரனும் நட்சத்திரங்களும்—ஆஹா!—எவ்வளவு அழகு!' என்று வியந்தவண்ணமாயிருந்தார்களாம்.

இத்தகைய அரசனைக் குறித்துப் பேசுகிறது பழமொழி:

ஆறு போவதே கிழக்கு; அரசன் சொன்னதே வழக்கு!

மேற்கு மலைகளில் உற்பத்தியாகிக் கிழக்கே சமுத்திரத்தில் சங்கமிக்கும் ஆறுகளை அறிந்திருக்கும் தமிழர்கள், கொடுங்கோல் அரசனையும் அறிந்து பரிகசித்துத் தங்கள் அனுபவத்தை நகைச்சுவையுடன் பழமொழியில் பொதிந்துவிட்டிருக்கிறார்கள்.

* * * *

### மண்ணா, தண்ணீரா?

தெனாலிராமன் செட்டியாரை நோக்கி, அவர் நிறையப் பரப்பி வைத்திருந்த வெள்ளைச்சர்க்கரையையும் (சீனியையும்) நோக்கினான். 'ஐயரே, அது வெள்ளை மண்' என்றார் செட்டியார். சர்க்கரையென்றால் விகடகவி கண்ணைப்போட்டு வாய்க்குள்ளும் போட்டுக்கொள்வானே என்று பயம். தெனாலிராமன் அதை அப்படியே நம்பிவிட்டவன்போல் சற்று மௌனமாக இருந்தான். பிறகு விரைந்து வீட்டுக்குப்போய்த் திரும்பிவந்தான்.

வீட்டிலே தன் மகனை நோக்கி, 'அடே செல்லம், நான் செட்டியார் கடைக்குப் போகிறேன். நீ அங்கே வந்து நமது எருமைக் கன்று செத்துப்போய்விட்டதென்று சொல்லு' என்று சொல்லி வைத்தான். 'சாகவில்லையே அப்பா, சௌக்கியமாய்த்தானே இருக்கிறது!' என்று ஆச்சரியப்பட்டான் பையன். 'தெரியுமடா; நான் சொன்னபடியே வந்துசொல்லு; சொன்னவாய்க்கு...தெரியுமா?' என்று ஆசைகாட்டி, அப்படியே கடைக்கு வந்துவிட்டான் தெனாலிராமன்.

செட்டியாருடன் தெனாலிராமன் பேசிக்கொண்டிருக்கிறான். அருமைப்பிள்ளை, 'எருமைக்கன்று செத்துப்போச்சு' என்கிறான். செட்டியாரின் 'வெள்ளைமண்' பரப்பியபடியே நிறையக்கிடக்கிறது. அதில் ஒரு பிடி எடுத்துத் தன் மகன் வாய்க்குள் திணித்து, தன் வாயிலும் ஒரு பிடி தள்ளிவிட்டு, 'ஐயோ, அருமை, எருமைக் கன்றா? என் வாயிலே மண், உன் வாயிலே மண்!' என்றான்.

அடிக்கடி 'என் வாயிலே மண்!' என்று சொல்லும்போதெல்லாம் பிடிபிடியாகச் சர்க்கரை காலியாகி வருவதைக்கண்ட மளிகைச்செட்டியாரின் மனம் என்னபாடுபட்டிருக்கும்? 'என்ன ஐயரே, தண்ணீர்பட்ட பாடு படுகிறதே நம்ம கடைச்சர்க்கரை!' என்று கண்ணீர் வடிக்கலானார்.

இந்த மாதிரி அனுபவத்தை ஆற்றுத் தண்ணீரிலேயே ஓர் உபதேசமாகக் காட்டுகிறது பழமொழி:

ஆற்றிலே போகிற தண்ணீரை அப்பா, குடி ஐயா குடி!

* * * * *

பெரிய பெரிய பரிசு

நவாபுக்குக் கோபம் பிறந்துவிட்டது பெரிய வீட்டு முதலியார் மீது. ஆனால் உள்ளடக்கிக்கொண்டே சாதுரியமாக, 'பெரிய முதலியாரே, உமக்கு ஒரு பெரிய பெரிய பரிசு அளிக்கப் போகிறேன்' என்றான். பிறகு ஒரு பெரிய யானையைக் கொண்டுபோய் அவர் வீட்டு வாசலில் கட்டிவைக்கும்படி கட்டளையிட்டான். நவாபின் உத்தியோகஸ்தர்கள் முதலியாரிடம் வந்து, 'மன்னர் பிரானின் மகத்தான பரிசாகிய யானை இளைத்துப் பூனையாகக்கூடாது; நன்றாகப் போஷிக்கவேண்டும், இன்னும் பெரிதாகவேண்டும் என்று எச்சரித்தார்கள்.

யானை இளைக்கவில்லைதான்; ஆனால் பெரிய முதலியார் இளைத்துப் பூனையானார்! அவருடைய குடும்பம் ஆனைத் தீனிக்காக உணவுச்செட்டை—பிறகு உபவாசத்தை—மேற்கொண்டது. பழமொழி எழுந்தது:

ஆனைக்குத் தீனி இடும் வீட்டில்
அருமைப் பிள்ளைக்கும் ஆகாரப் பஞ்சமாம்.

பிறகு நவாபு, 'ஆனை அசைந்து தின்றது, வீடு அசையாமல் தின்றதையெல்லாம்!' என்று சொல்லி யானையைக் கொண்டுபோய் விட்டார். முதலியாரோ 'ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்' என்று காலம் பார்த்திருந்தார்.

---

ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி — வனிதா மண்டலம்

# வாயும், கையும்!

"வா, வா கலா! இன்று நிலாச்சாப்பாட்டிற்கு நீ வாராமல் இருந்துவிடுவாயோவென்று நினைத்தேன். பர்வதம்தான் இன்னும் வரவில்லை. அதோ அவளும் வந்துவிட்டாள். ஆயுள் நூறுதான்!"

"என்ன பர்வதம், ஒருமாதிரியாக இருக்கிறாய்? உடம்பு சரியாக இல்லையா? அல்லது மனவியாதியா?" என்றாள் கமலா.

"பர்வதத்தை என் கிண்டல் செய்கிறாய்? வீட்டு வேலைகளின் அலுப்பாயிருக்கும். வரும்போதே பேசிச்சிரிக்கணுமென்கிறாயா!"

"இல்லை மாமி! பர்வதம் வந்தால், 'யானைவரும் பின்னே மணி ஓசைகேட்கும் முன்னே' என்றிருக்குமே. இன்று வழக்கத்திற்கு விரோதமாகயிருக்கிறதே யென்று கேட்டேன்!"

"நமக்குள் பரவாயில்லை. ஆனால் ஒரு வீட்டிற்குள் நுழையும் பொழுது வாசல்படியிலிருந்தே கத்தி பேசிக்கொண்டு போவது நாகரீகக்குறைவுதான். வந்தபிறகு பேசாமல் பஸவன்மாதிரி முகத்தோடு உட்கார்ந்திருப்பது அதைவிட தவறு. அடிக்கடி சந்திப்பவர்களிடம் சில விஷயங்களைச் சாதாரணமாகப் பேசலாம். எப்பவோ பார்ப்பவர்களானால் சமய சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பேசணும்."

"ஆமாம் கலா நீ சொல்வது சரிதான். வாய்ப் பேச்சினால் என்னவென்று சொல்லமுடியாத அநேக நன்மை தீமைகள் உலகத்தில் சம்பவிக்கின்றன" என்றார் சாவித்திரி மாமி.

"ஆமாம்! மனிதவர்க்கத்தில் பேசுவது என்ற வாய்ப்பு இருக்கிறதே அது மகா அற்புதம். வாய் நன்மையில் எவ்வளவோ புண்பட்ட மனத்திற்கு ஆறுதல் உண்டாக்கலாம். அணுக்குண்டைக் கண்டுபிடித்த விஞ்ஞானி பின்னால் அதன் உபயோகத்தின் பலனைக் கண்டு மனமுடைந்துபோனாராம். அணுக்குண்டை தோற்கடிக்கும் சிலர் வாய்வீச்சுகளால் இல்லாத விஷயங்களைச்சொல்லி படுகுழியில் தள்ளுவதையும் பார்த்து பிரும்மதேவன் கூட மனிதவர்க்கத்திற்கு பேச்சை ஏன் கொடுத்தோமென்று நிச்சியமாகத்தான் வருந்துகிறார்! எவ்வளவு சக்திவாய்ந்த செயலானாலும் அதை துர்விநியோகப்படுத்தினால் அதன் மகிமை போய்விடுகிறது."

"சாவித்திரிமாமி! கலாவைத் தூண்டிவிட்டீர்களே ஆடச் சொல்லி அரைக்காசு கொடுத்து, ஓயச்சொல்லி ஒருகாசு கொடுத்த கதைதான்! தவிரவும் விதவிதமான சாப்பாடு வகைகளைத் தயாரித்துவிட்டு கலாவிடம் பேச ஆரம்பித்துவிட்டால் ருசிபார்த்துச் சாப்பிடவிடமாட்டாளே!......ஆனாலும் கலா! சிலசமயம் நானே உன் பேச்சில் லயித்துவிடுகிறேன்" என்றாள் பர்வதம்

"அன்று டாக்டர் ராமநாத் மனைவி சுந்தரி வந்தாள். படித்து பட்டம் பெற்றவளாம். அன்றுபார்த்து என் கணவருக்கு உடம்பு அசௌக்கியம். வெண்கலக்கடையில் யானை புகுந்தமாதிரி கத்தினாள். அவள் வீட்டிற்குப்போன பிறகு சுந்தரி போட்ட சத்தத்தில் என் கணவருக்கு தலைவலி அதிகரித்தது. அவள் வரும்போதே என்பிள்ளை, மணி "அம்மா கிராமபோன் வருகிறது" என்று சிரிப்பான். ஏன் கலா! சிலர் பேசினால் கேட்க ஆசைப்படுகிறோம். சிலரைக் கண்டாலே ஓடி ஒளிந்துகொள்கிறோமே?"

"ஆம், கமலா! அதில் எவ்வளவோ விதம். விஷயம் கொஞ்சமாகத்தெரிந்தவர்களானாலுங் கூட அதிகப்பேச்சின்றி இருப்பவர்களைத் தெரிந்தவர்களாகவே நினைக்கிறார்கள் சிலர். ஆனால் பலர் அவர்களை கர்வியென்று கருதுகிறார்கள். இன்னும் கொஞ்சப்பேர் வாயைத் திறந்து பேசக்கூட தெரியாமல் பொம்மைமாதிரி, இடித்த புளிமாதிரி இருக்கிறாள் என்றெல்லாம் சொல்லி வர்ணனையில் இறங்குகிறார்கள். அதிகமாய்ப் பேசினாலோ புளியங்கொட்டை (chatter-box) என்று பரிகசிக்கிறார்கள். அவர்கள் உடம்பு சக்தியை இழந்து வாயை வலிக்க பிறருக்கும் கேலியாக பேசப்படுபவர்களாய் விடுகிறார்கள்!"

"என்னவோ கலா! பேசினாலும் தவறு. பேசாவிட்டாலும் தவறு! உலகமே குற்றம் சொல்லத்தான் முன் வருகிறது!"

"அப்படி சொல்வதற்கில்லை பர்வதம்! மக்கள் பகுத்தறிவுக்குக் குறைவேயில்லை. பேசுவது இன்றியமையாதது. ஒருவருக்கொருவர் அன்பு செய்வது, ஆதரவு சொல்வது, அறிவுக்கு போதிப்பது இவைகளுக்கு இணையற்ற சாதனம் பேச்சுத்தான். ஆனால் கொடூரம், குற்றம், இகழ்ச்சி, பொறாமை, துடுக்கு இம்மாதிரி 'துருதுருக்கள்' நாக்கை பீடிக்காமல் வைத்துக்கொள்வது பேச்சின்பெருமை. ஒருவருக்கொருவர் பேசவும் வேணும். அதேசமயம் அதிகப்பிரசங்கம் மேற்சொன்ன கெடுதலின்றி பேசினால் அவர் பேச்சு ரஞ்சகமாகவும், ஆனந்தமாகவுமிருக்கிறது. அந்த பேச்சென்ற பாலம் எவ்வளவோ மேடுபள்ளங்களை சமப்படுத்துகிறது. வாக்கு சாதுர்யம் பெற்றவர்கள் எவ்வளவோ அரசாங்க விஷயங்களில் சமரசமும் ஏற்படுத்தி யுத்தப்பேயைவிரட்டி மகத்தான செயல்களுக்குப் பாத்திரமாகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேல் சமய சந்தர்ப்பத்துக்குகந்தபடியும், அவரவர்களுக்கு பிடித்தமானவற்றையும் பேசவேண்டும்."

"காக்காய் பிடிக்கச் சொல்லுகிறாயா? அதை நான் ஒப்பவில்லை. வெட்டொன்று துண்டிரண்டுமாகத்தான் பேசுவேன்."

"காக்காய் பிடிக்கச்சொல்லவில்லை பர்வதம். காக்காய் பிடிப்பதென்றால் அவர்கள் முகத்துக்கெதிரேயே தன்காரியமாக ஸ்துதி செய்வது. அவர்களுக்கு இல்லாத குணத்தைச்சொல்லிப் பிரமாதப்படுத்துவது. அது அவர்களுக்கே பிடிக்காமலிருக்கும். அது நிலைக்காது. சமூகத்தில் அவர்களுக்கு கௌரவமான ஸ்தானம் கிடைக்காது. நான் சொல்லுவது அதில்லை. காக்காய் பிடிப்பது வம்புபேசுவது இரண்டையும் விட்டு நான்கு விஷயங்களை தெரிந்துகொண்டு அன்புடன் பேசுவதே ஓர் கலை. அதனால் மற்றவர்கள் மனம் வசீகரப்படுகிறது."

"கோடிவீட்டு கோமதி நீ சொல்லுவதுபோல் துடுக்கு பொல்லாத்தனம் ஒன்றுமில்லாமல் கலகலப்பாய்த்தான் சேசுகிறாள். ஆனாலும் அவள் பேசினால் அலுப்பு வந்துவிடுகிறது. எப்பொழுதும் தன் பெருமையேதான். ஒரேசம்பவத்தைப்பலவிதமாகச்சொல்லுகிறாள்."

"ஆமாம் கமலா! அப்பாவி மனுஷி அவளுக்கு ஜலப்பிரளயமாய்ப் பொய்சொல்லிப் பழகிவிட்டதால் அவள் பொய்யை அவளே உண்மையாக நம்புகிறாள். நம் க்ஷேமத்தைப்பற்றி ஒரு வார்த்தை கேட்கமாட்டாள்!"

"ஆமாம் கலா, நீ சொல்லுவதுபோல் பேசுவது ஓர் அரிய கலைதான். என் பேசுவது ஓர் கலையென்று நம் சங்கத்தில் ஒரு சொற்பொழிவு நடத்திவிட்டேன். நீங்களெல்லோரும் பேச்சு சுவாரஸ்யத்தில் சாப்பிடவே யில்லையா!"

"நன்றாய்ச் சொல்லிவிட்டீர்கள் மாமி. எங்களுக்கு வாய்க்கு மேல் கை! இலையைப் பாருங்கள்!"

"இருங்களம்மா தாம்பூலம் பெற்றுக்கொண்டு போகலாம்."

# அபூர்வ ராமாயணம்.

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

### கஃ தர்மஜ்ஞஃ ?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மேலே யெடுத்துக்காட்டிய கம்பர் செய்யுளில் "தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை" என்றது ஸ்ரீராமாயணக்கடலில் மிக முக்யமாகக் கொள்ளத்தக்க மஹாரத்னம்போன்றவொரு சம்பிரதாயப்பொருளை யுணர்த்துகின்றது. அதைச் சிறிது விவரிப்போ மிங்கு.

கீதாசார்யன் பகவத்கீதையில் தன்னுடைய அவதார ப்ரயோஜனத்தை அருளிச்செய்யுமிடத்து *பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்* என்கிறான். ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதும் துஷ்டர்களைத் தொலைப்பதுமாகிய செயல்களை அவதாரத்திற்குப் பயனாகக் கூறியுள்ளான். இவ்விரண்டு செயல்களும் ஸ்ரீராமாவதாரத்தில் விசேஷமாக நடைபெற்றிருப்பதை நாம் ஸ்ரீராமாயணமுகத்தினால் அறிகிறோம்.

இதில் அரிய பெரிய விசேஷமொன்றும் தெரியவருகிறது. அது யாதெனில்; சீதாபிராட்டி இராகவனோடு கூடியிருக்குங்காலத்தில் எப்படிப்பட்ட அபராதிகளுக்கும் விநாசம் ப்ராப்தமாகிறதில்லை; பெருமாள் அவளைவிட்டுப் பிரிந்திருக்கிற காலத்தில்தான் அபராதத்தில் குறையநின்றவர்களையும் கண்ணற்றுக் கொலைசெய்து தொலைக்கிறார் என்பதேயாம். இது ஸ்ரீராமாயணத்தில் ஆதியோடந்தமாகவுள்ள கதைகளினால் நன்கு தெரிகின்றது.

இராமன் முதன்முதலாகச் செய்தது தாடகையினுடையவும் ஸுபாஹு முதலிய அரக்கர்களினுடையவும் வதம். முதன்முதலாகப் பெண்கொலை புரிந்தாரென்னு மபவாதம் இற்றைக்கும் அழிந்ததில்லை. அப்படிப்பட்ட கொலைத்தொழில் செய்த காலத்தில் பெருமாளுக்குப் பிராட்டியின் ஸம்பந்தமுண்டாகவேயில்லை. பிரமசாரியாயிருக்கும்போதுதானே மாமுனி வேள்வியைக் காத்தது. அப்போது பிராட்டி அருகேயிருந்திருந்தால் தாடகாவதம் நேர்ந்தேயிராது. அவள் அருகே யில்லாததைப் பற்றியே பெருமாள் பெண்கொலையென்றும் பாராமல் தாடகாவதம் பண்ண நேரிட்டது.

பிறகு மிதிலாபுரிக்குச் சென்று பிராட்டியை மணம் புணர்ந்தார். அது முதலாகப் பிராட்டியோடு கூடியிருக்கிறவரையில் ஒரு கொலைத்தொழிலும் நடந்ததில்லை. தீவ்ரமான அபராதம் செய்தவர்களுக்கும் ரக்ஷணம் நேர்ந்திருக்கின்றதேயன்றி, கொலையென்பது ஒருவர்க்கும் கிடையாது. இதன்மேல் சிலர் சொல்லக்கூடிய ஆக்ஷேபங்களையும் ப்ரசங்கித்துப் பரிஹரிக்கிறோம்.



1—3—1950

விராதனென்னும் அரக்கனை, வதம் செய்தது பெருமாளும் பிராட்டியும் கூடியிருந்த காலத்தில்தானே; கரன் தூஷணன் முதலிய பதினாலாயிரமரக்கர்களின் வதமும் பிராட்டியோடு கூடியிருக்கும்போதுதானே நடைபெற்றிருக்கிறது. ஆகவே, பிராட்டியருகேயிருக்கும்போது பெருமாள் ஒருவரையும் வதஞ் செய்வதே கிடையாதென்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? என்று சிலர் கேட்கக் கூடும். அவர்களுக்குச் சொல்லுகிறோம்: விராதனுடைய பிரஸ்தாவம் ஆரணியகாண்டத்தில் இரண்டாவது ஸர்க்கத்தில் வருகிறது. அங்கே கதைப்போக்கு உள்ள விதத்தை நன்கு கவனிக்கவேணும்.

விராதன் வந்ததும் பிராட்டியைக் கொள்ளை கொள்கிறான். பிறகு அவளை விட்டுவிட்டு இராமனையும் இலக்குமணனையும் தூக்கிக் கொண்டு வேறொரு வனத்தில் நுழைகிறான். அப்போது பிராட்டி தான் தனித்து நின்றுபோனதைக் குறித்துப் புலம்புகிறாள். இவ்விஷயம், ஆரணியகாண்டம் மூன்றாவது ஸர்க்கத்தின் முடிவிலும் நான்காவது ஸர்க்கத்தின் முதலிலும் ஸ்பஷ்டமாகவுள்ளது. ஸீதை தன்னைத் தனியாக விட்டிட்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்களை விராதன் வேறொரு காட்டுக்குத் தூக்கிச் சென்றபோது 'ஓ அரக்கனே! இனி என்னைச் செந்நாய்களும் புலிகளும் சிறுத்தைகளும் கொன்று தின்றுவிடுமே; அவ்விருவரையும் விட்டு என்னைக் கொண்டுபோகலாகாதா?' என்று கதறுகின்றாள். இதனால் விராதவதம் செய்யப்படுகிற காலத்திலும் இடத்திலும் பிராட்டியின் ஸன்னிதானமில்லையென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது.

இங்கு மற்றொரு விஷயம் முக்யமாகக் கவனிக்கத்தக்கதுண்டு; ராமலக்ஷ்மணர்கள் விராதனை எவ்வளவு நலிந்தும் அவன் மரணமடையவேயில்லை. இதை வான்மீகிமுனிவரே கூறுகின்றார்—

*ஸ வித்தோ பஹுபிர் பாணை: கட்காப்யாஞ்ச பரிக்ஷத:,
நிஷ்பிஷ்டோ பஹுதா பூமௌ ந மமார ஸ ராக்ஷஸ:* என்றார்.

பல அம்புகளைப் பிரயோகித்தும், இருவரும் இரண்டு கத்திகளினால் வெட்டியும் தரையில் தள்ளிப் பலவாறு உதைத்துங்கூட அவ்வரக்கன் மரணமடையவேயில்லை—என்பது மேற்குறித்த சுலோகத்தின் கருத்து.

பிறகு அவன் எவ்வாறு மரணமடைந்தானென்னில்; அவன் தனது வரலாறுகளைத் தானே சொல்லிக்கொண்டு 'இராமா! இப்பொழுது உன்னால் நான் ஒரு சாபத்தினின்று விடுபட்டவனாயினேன்; என்னைப் பள்ளம்வெட்டிப் புதைத்துவிடு' என்றான். பிறகு அவ்விதமே செய்யப்பட்டிருக்கிறது. இதனால், விராதன் தன் வதையைத் தானே வேண்டிச் செய்வித்துக்கொண்டானென்பது விளங்குகின்றது. இதுவும் பிராட்டியின் முன்னிலையில் நடைபெறவில்லையென்றும் தெரிகின்றது. ஆகவே, விராதவதச் செய்தியையெடுத்துக்கொண்டு செய்யும் ஆட்சேபம், வலியற்றதென்று காட்டப்பட்டதாயிற்று.

இனி, பிராட்டியின் முன்னிலையிலேயே கரதூஷணாதிகளின் வதம் நடந்திருக்கின்றதேயென்கிற ஆக்ஷேபத்திற்குப் பரிஹாரம்

கேண்மின்: ஜனஸ்தானத்து ராக்ஷசப் பெருஞ் சேனைகள் இராமனைக் கிட்டிவந்தபோது இராமன் லக்ஷ்மணனை நோக்கிக் கூறியதாவது—'லக்ஷ்மணா! நீ வில்லையும் அம்புகளையுங் கொண்டு ஸீதையுடன் அப்பால் போய்விடு; அதோ மரங்களால் மறைக்கப்பட்டு நுழையக் கூடாமலிருக்கின்ற குகைக்குள் ஸீதையையு மழைத்துக் கொண்டு சென்று அவளைக் காத்துக் கொண்டிரு; தாமதம் செய்யாமல் விரைந்து செல். இத்தனை ராக்ஷஸர்களையும் நீயே வதைக்க வல்லையாயினும் இப்பொழுது நானே இவர்களை யெல்லாம் கொலை செய்யக் கருதியிருக்கின்றேனாதலால் நீ ஸீதையுடன் இவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய்விடு' என்று.

இக்கட்டளையைச் சிரமேற் கொண்ட லக்ஷ்மணன் ஸீதையுடன் சென்று குகைக்குள் நுழைந்த பின்பே இராமன் கவசங்களைத் தரித்து வில்லையும் அம்புகளையுமெடுத்துக்கொண்டு போர்புரிய எழுந்தனன் என்று ஆரணியகாண்டத்து இருபத்தினான்காவது ஸர்க்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. *தஸ்மாத் க்ருஹீத்வா வைதேஹீம் சரபாணிர் தநுர்தர:, குஹாமாச்ரய சைலஸ்ய துர்க்காம் பாதபஸங்குலாம், ப்ரதிகூலிதுமிச்சாமி ந ஹி வாக்யமிதம் த்வயா, சாபிதோ மம பாதாப்யாம் கம்யதாம் வத்ஸ மா சிரம்,... தஸ்மிந் ப்ரவிஷ்டே து குஹாம் லக்ஷ்மணே ஸஹ ஸீதயா* என்கிற (வான்மீகி) ச்லோகங்கள் காணத்தக்கன. இதுகொண்டே வேதாந்த தேசிகர் ரகுவீரகத்யத்தில் கரவதத்தைக் கூறும்பிரகாணத்தில்* அஸஹாய சூர!* என்றது. ஆகவே, பிராட்டியின் ஸன்னிதானமில்லாதவிடத்தே தான் கரதூஷணாதிகளின் வதம் நடந்ததென்பது விளங்கிற்று.

இதற்கடுத்தபடியாக மாரீசவதம் நடந்திருக்கிறது. அப்போது பிராட்டியைவிட்டுப் பெருமாள் (மாரீசன்பின்னே) நெடுந்தூரமெழுந்தருளியிருக்கிறாரென்பது அனைவருமறிந்த விஷயம். அவனை வதைக்கவேண்டியிருந்தபடியாலும், பிராட்டி அருகேயிருந்தால் அவன் வதம்பெறமாட்டானாகையாலும், இதற்காகவே அவனை வெகுதூரம் கொண்டுபோனார் பெருமாள் என்கிற மருமமும் இங்கு உணரத்தக்கது.

விராதவதத்திற்கும் கரதூஷணாதிவதத்திற்குமிடையில் சூர்ப்பணகாபங்கம் நடந்திருக்கின்றது. பெருமாள் தாடகையை வதஞ் செய்ததுபோல் சூர்ப்பணகையையும் வதஞ்செய்து முடித்திருக்கலாம். அப்படிச் செய்திருக்குமளவில், மேலே பெருந்தீங்கு விளையாமலுமிருக்கும். அவளை அங்கபங்கஞ்செய்து உயிரோடு விட்டதனாலன்றோ அவள் இலங்கையிற்சென்று முறையிட்டுச் ஸீதையின் அபஹாரத்திற்குக் காரணமாயினள். அவளைப் பஞ்சவடியிலேயே குழி வெட்டிப் புதைத்திருந்தால் மிகவும் நலமாயிருக்குமே. ஸமர்த்தரானபெருமாள் ஏன் அது செய்யவில்லையென்று கேட்கில், பிராட்டி அருகேயிருந்ததுதான் இதற்கு இடையூறாயிற்றென்பது முக்கியமாகச் சொல்லத்தக்கது.

'முக்கியமாகச் சொல்லத்தக்கது' என்கையாலே அமுக்கியமாகச் சொல்லத்தக்கது மொன்றுண்டென்று தெரியவருமே;

அதுவென் என்னில்; தாடகாவதத்தை விச்வாமித்திர முனிவர் கட்டளையிட்டபடியாலே செய்தார்; அங்ஙனம் சூர்ப்பணகையின் வதத்தைக் கட்டளையிட யாருமில்லாமையினால் அது நடைபெற வில்லை என்பதேயாம். இதுவுமொரு ஸமாதானமெனினும் பிராட்டி அருகேயிருந்ததுதான் வதஞ் செய்யாமைக்கு முக்கிய காரணமென்று கொள்ளத்தக்கது.

பிராட்டி பெருமாளைவிட்டுப் பிரிந்து இலங்கை புக்கபின்பு, வாலிவத மென்கிற மிகப் பெரிய காரியம் நடந்திருக்கின்றது. இது நியாயமா; அநியாயமா? என்கிற விசாரணை இற்றைக்கும் அறுது நிகழ்ந்துவருகின்றது. வேதாந்ததேசிகர் ஸங்கல்ப ஸூர் யோதயத்தில் *நிரவதிகுணக்ராமே! ராமே* என்னும் சுலோகத்தில் இதைச் சுட்டிக்காட்டியுமிருக்கிறார். வாலிவதம் நியாயமானதே என்று பண்டிதர்கள் எவ்வளவு பொருத்தமான ஸமாதானங்கள் சொன்னாலுங்கூட, அதை ஏற்றுக்கொள்வது மேட்டுமடையாகவே காண்கிறது.

"என்னை எப்படி நீ கொன்றாய்!" என்று வலிதாக ஆட்சேபித்த வாலிதானே தன்னை வதம் செய்ததற்குப் பொருத்தமான காரணமிருப்பதைக் கண்டுபிடித்துத் தானே கூறிவிட்டதாகக் கம்பர் எழுதிவைத்துள்ளார்; *தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனைபோலுஞ் செய்கை* என்பதே அது. 'இராமா! இப்போது பிராட்டி அருகேயிருந்தாளாகில் அநீதியான இவ்வதத்தை நீ செய்திருக்கமாட்டாய்; அவள் அருகிலில்லாதது காரணமாகவே இது செய்யத்துணிந்தாய்' என்று வாலி கூறின விதமிகப் பொருத்தமாகவே யுள்ளதன்றோ! இதுவொரு சமத்காரமான வார்த்தை போலும் என்று நினைக்காமல், இதுதான் பரமார்த்தம் என்றே நினைக்கத்தக்கதன்றோ. (தொடரும்)

---

ஸ்ரீமதி A. ஸரோஜா பதில் எழுதவும்

# ஒரு கேள்வி.

கேள்வி என்றவுடன், "அடாடா! பரீக்ஷைகளில் விடை கண்டு பிடிக்கக் கஷ்டப்படுவது போதாதென்று இங்கேயும் வந்துவிட்டதா!" என்று நினைக்கிறீர்களா? அப்படி மூளையைக் குழப்பிக் கொள்ளும் கேள்வியும் அல்ல. மூளை உபயோகிக்காமல் கிடைக்கக்கூடியதும் அல்ல.

ஒரு கம்பெனி மானேஜர் தன் வீட்டிலிருந்து கம்பெனிக்கு வர வேண்டுமென்றால் ரயிலில்தான் வரவேண்டும். தினம் காலையில் வருவதும் இரவு 9 மணி ரயிலுக்கு வீட்டுக்குத் திரும்புவதும் வழக்கம். இரவில் அவர் கம்பெனிக்குக் காவல் இருக்க ஒரு ஆளை நியமித்து இருந்தார்.

இப்படியே இவர் போவதும் வருவதுமாக இருக்கும்போது, ஒருநாள் அந்தக் காவலாளி இவரைக் கூப்பிட்டு, "தாங்கள் இன்று இரவு வீட்டிற்குப் போகவேண்டாம். நேற்றுராத்திரி என் கனவில், இன்று புறப்படும் 9 மணி வண்டி வழியில் விழுந்துவிடும் என்று சொப்பனம் கண்டேன்; அதனால் இன்று இங்கேயே படுத்துக்கொள்ளுங்கள்" என்று நிறுத்தினான்.

நாச்சியார்கோயில் K. ஜெயலக்ஷ்மி

சிறுகதை

# பிறந்தநாள் பரிசு

குமுதம், அவள் கணவன் ரகுவின் வரவை எதிர்பார்த்து, வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடந்து நடந்து, அவளுடைய கால்களும் ஓய்ந்து மனதும் சலித்துவிட்டது. வழக்கமாய் மாலை 6 மணிக்கே வீடு திரும்பிவிடும் ரகு அன்று குமுதத்தின் பொறுமையைச் சோதிக்கவேண்டுமென்றுதான் மணி 7-க்கு மேலாகியும் வீடு திரும்பவில்லையோ என்று எண்ணும்படி இருந்தது. ரகு வருவதற்கு நேரமான ஒவ்வொரு நிமிஷமும் குமுதத்திற்கு ஒவ்வொரு வருஷமாகத் தோன்றியது.

அன்று மாலைமுதல் எவ்வளவுக்கெவ்வளவு ஆவலுடன் சீக்கிரமாய் ரகுவின் வரவை எதிர்பார்த்தாளோ அவ்வளவுக்கவ்வளவு ரகு வீடு திரும்புவதற்கு நேரமாயிற்று. வாசலில் இருந்த சிறிய திண்ணையிலேயே அமர்ந்து ரகு வரும் வழிமீதே விழிகளை உடையவளாக இருந்தாள். தினத்தையும்விட குமுதம் இன்று இவ்வளவு ஆவலுடன் கணவன் வரவை எதிர்பார்ப்பதற்குக்காரணமும் இருந்தது.

எதிர்வீட்டிலிருந்த குமுதத்தின் சிநேகிதி கமலம் சங்கராந்தியின்போது ஒரு புடவை வாங்கிக்கொண்டாள். மாம்பழக்கலர், உடலில் இரட்டை ருத்ராக்ஷ சரிகைபேட்டுகளுக்குமேல் கறுப்புநிற தாழம்பூ ரேக் போட்ட 6 கெஜம் பட்டுப்புடவை; நல்ல வழவழப்பும், அழுத்தமும் உடைய அந்தப் புடவையை சொந்தத் தறிகாரர்களிடமிருந்தே வாங்கியபடியால்,75 ரூபாய்தான் அதன் விலை. குமுதத்திற்கு அந்தப் புடவை மிகவும் பிடித்திருந்தது. புடவையை ரகுவினிடம் காண்பித்து அந்தமாதிரி தனக்கும் ஒன்று வாங்கிக்கொள்வதாக ஆசையுடன் கேட்டாள்.

ரகுவின் தாய்தந்தை கிராமத்திலிருந்து இங்குவந்து 4,5 மாதங்களாகத் தங்கியிருந்ததினாலும், இன்னும் எதிர்பாராத நேர்ந்த சில குடும்பச்செலவுகள் காரணமாகவும்,ரகுவுக்கு அப்போது வெளியில் கொஞ்சம் கடன்தொல்லைகள் ஏற்பட்டிருந்தபடியால், "புடவை இப்பொழுது வாங்கமுடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். குமுதத்திற்கு மிகவும் வருத்தமாகவும், ஏமாற்றமாகவும் இருந்தது. கல்யாணமாகி 1 வருடகாலத்தில் குமுதம் இருந்

---

அவரும் அதற்கு ஒப்புக்கொண்டு அன்று இரவு கம்பெனியிலேயே தங்கிவிட்டார். மறுநாள் எழுந்ததும் அந்தக் காவலாளி சொல்லியது போலவே இரவு 9 மணிக்குப் புறப்பட்ட ரயில் விழுந்து ரொம்ப ஜனங்கள் இறந்துவிட்டதாகச் செய்தியறிந்து, ஆச்சர்யத்துடன் காவலாளியைக் கூப்பிட்டு அவனுக்குத் தன் உயிரைக் காப்பாற்றியதற்காக 100 ரூபாய் கொடுத்து, அவனை வேலையிலிருந்து துரத்திவிட்டார்! அவரைக் காப்பாற்றிய அவனை வேலையிலிருந்து எடுக்கவேண்டிய காரணம் என்ன? இதுதான்முதலில் குறிப்பிட்ட கேள்வி!

ஜகன்மோகினி அன்பர்கள் தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவிக்கவும். விடையும் அடுத்த இதழில் கிடைக்கும். வாசகர்களிடமிருந்து வரும் பதில்களில் ரஸமான சிலவற்றின் குறிப்புகளும் வெளியிடப்படும்.

திருந்த ஆசையுடன் கேட்ட ஒன்றேஒன்றைத் தான் வாங்கிக் கொடுத்து அவளைத் திருப்திபடுத்தவதற்கில்லையே என்று ரகுவிற்கும் குறையாகத்தான் இருந்தது. ஆனாலும், அவனுடைய அப்போதிய நிலைமை அவனை அவ்விதம் சொல்லச்செய்தது. அதற்குப் பிறகும் அவனால் வாங்கிக்கொடுக்க முடியவில்லை. குமுதமும் 2,3 முறை கேட்டுப்பார்த்து அலுத்துப்போனவளாய்க் கோபத்துடன் மறுபடியும் புடவைப்பேச்சையே எடுக்கவில்லை.

குமுதத்திற்கு அன்று பிறந்தநாள். காலையில் சாப்பாடு முடிந்ததுமே ரகு வழக்கம்போல் ஆபீஸிற்குப் போய்விட்டான். குமுதத்தின் அத்தைபெண் அடுத்த தெருவில் குடியிருந்தாள். பெண்ணைப் பார்ப்பதற்காக குமுதத்தின் அத்தை,தந்தை இருந்த ஊரிலிருந்து அன்று காலைவண்டியில்தான் வந்தாள். அத்தையிடம் குமுதத்தின் தகப்பனார் பெண்ணின் பிறந்தநாளுக்காக 60 ரூபாயும், கடிதமும் அனுப்பியிருந்தார். குமுதத்தின் தந்தைக்கு ஆஸ்திக்கொரு பிள்ளையும், ஆசைக்கொரு பெண்ணும் இருந்தபடியால், குழந்தைகளை ரொம்பவும் அருமையாக வளர்த்துவந்தார். வருஷந்தோறும் பெண்ணினுடைய, பிள்ளையினுடைய பிறந்தநாளை ஒரு பெரிய பண்டிகையைப்போல் கொண்டாடுவார். வழக்கம்போல இந்த வருடமும், கொண்டாடுவதற்குப் பணத்தை அனுப்பிவிட்டார்.

தந்தையிடமிருந்து பணம் வந்தது குமுதத்திற்கு மிகவும் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருந்தது. தான்கேட்டு,கணவன் வாங்கித்தரமுடியாத என்ற அதேபுடவையை, பிறந்தகத்திலிருந்து வந்த பணத்தில் தானே வாங்கிக்கொண்டுவந்து கணவனிடம் காட்டவேண்டும் என்ற ஆத்திரமும் ஆவலும் உண்டாயிற்று. அப்பா அனுப்பிய பணத்துடன், தன் கையிலிருந்த ரூ. 15-ம் எடுத்துக்கொண்டு, உடனேயே அத்தையுடன் புறப்பட்டுக் கடைத்தெருவிற்குச் சென்றாள். அத்தை, ஏதோ வெள்ளிப்பாத்திரம் வாங்குவதற்காக, வழியிலிருந்த வெள்ளிப்பாத்திரங்கள், தங்க நகைகள் வைத்திருக்கும் ஷாப்பிற்குள் புகுந்தார்கள். அத்தை, வெள்ளிப் பாத்திர பேரம் செய்துகொண்டிருக்கும்போது, குமுதம், அங்கு வைக்கப்பட்டிருந்த ரெடிமேட் நகைகள் பாத்திரங்களைப்பார்த்துக் கொண்டேவரும்போது தற்செயலாக ஒரு கண்ணாடிப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த அழகிய வேலைப்பாட்டுடன்கூடிய ஒரு மோதிரத்தைப் பார்த்தாள்.

இருபக்கமும் புது வைரங்களும், நடுவில் நல்ல அழகான கருநீலக்கல்லும் பதித்த அந்த மோதிரத்தின் வேலைப்பாடு, புதுமோஸ்தராகவும் நன்றாகவும் இருந்தது. குமுதத்தின் கண்களையும் மனதையும் கவர்ந்தது. அவளுடைய மனம் சிந்தனையிலாழ்ந்தது.

ரகுவிற்கு ஆடி ஆறுமாதத்திற்காக வேட்டகத்தில் மோதிரம் செய்துகொடுத்திருந்தார்கள். ஏற்கெனவே அவனிடமும் ஒரு மோதிரம் இருந்தது. பழையமோதிரம் கையைப் பிடித்ததால், குமுதம் ஏதோ நகைசெய்துகொள்ளும்போது அதையும் அழித்து விட்டாள். வேட்டகத்தில் செய்துபோட்ட மோதிரத்தைத்தான்,

கையைவிட்டுக் கழற்றாமல் போட்டுக்கொண்டிருந்தான். அதையும் கொஞ்சநாள்கூட போட்டுக்கொண்டிருக்கவில்லை. யாரோ சிநேகிதன் ஒருவன் கல்யாணத்திற்குப் போவதற்காக மோதிரத்தை இரவல் வாங்கிப் போட்டுக்கொண்டுபோய்க் கெட்டுப்போக்கி விட்டான். ரகுவிற்கு ஆப்த சிநேகிதனானதால் கண்டித்து நஷ்ட ஈடும் கேட்க முடியவில்லை. அவனே மனம்வைத்து, ஒன்றுக்குப் பாதியாகக் கொடுத்தபணம், குடும்பத்தில் அடிபட்டுச் செலவழிந்து விட்டதால், மறுபடி மோதிரம் வாங்கமுடியவில்லை. கடைசியில் "தாட்சண்யம் தனநாசம்" என்று முடிந்தது.

புடவை நன்றாக இருப்பதால் வாங்கவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்றே தவிர இல்லாததற்காக வாங்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. 4, 5 புடவைகளுக்குமேலேயே இருந்தது. இந்தக் காலத்தில் புடவை விலையும், பவுன் விலையும் ஒன்றுதான். எது வாங்கினால் தானென்ன, எல்லாம் ஒன்றுதான். ஆனால், எவ்வளவு ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டாலும், புடவைஎன்றால் 4, 5 வருஷத்திற்குள் கிழிய ஆரம்பித்துவிடும். நகையானால் அப்படி இல்லை. ஜாக்கிரதையாகமட்டும் வைத்துக்கொண்டால், எவ்வளவு வருஷங்களானாலும் அழிவில்லாமல் உருப்படியாக இருக்கும். அன்றியும் புடவை அடியோடு இல்லாவிட்டாலும் வாங்கவேண்டியது தான். அப்படியுமில்லை. இருக்கிறதையே மேன்மேலும், வாங்கிச் சேர்ப்பதைவிட, இல்லாததொன்றை வாங்குவது சிரேஷ்டமல்லவா! தந்தை அனுப்பிய பணத்தில் தானே புடவை வாங்கிக்கொள்வதை விட, இந்த மோதிரத்தை வாங்கிப்போய் ரகு கொஞ்சமும் எதிர்பாராதபடி "பிறந்தநாள் பரிசாய்" கொடுத்தால் எவ்வளவு ஆச்சரியமும், சந்தோஷமும் அடைவான்! இந்த சந்தர்ப்பத்தை விட்டு விட்டால், மறுபடி எப்பொழுது வாங்க முடியுமோ! யார் கண்டது?...

இவ்வாறு சிந்தனையிலாழ்ந்திருந்த குமுதத்தை, "என்ன குமுதா! மணியாகவில்லையா? கிளம்பு போவோம்" என்று அத்தையின் குரல் தட்டி எழுப்பிற்று.

புடவை வாங்கும் எண்ணத்தைக் கைவிட்ட குமுதம், "இரு, அத்தை! இந்த மோதிரத்தையும் வாங்கிக்கொண்டுபோகலாம்" என்றாள்.

மோதிரத்தை நிறுத்து விலைதீர்த்து வாங்கிக்கொண்டு இருவரும் கிளம்பினார்கள். புடவை வாங்கவேண்டுமென்று கடைத் தெருவிற்குப்போய் மோதிரம் வாங்கிக்கொண்டு வீடு திரும்பிய குமுதத்தின் மனமாறுதல் அத்தைக்கு விசித்திரமாக இருந்தது. அத்தை தன் பெண்வீட்டிற்குப் போய்விட்டாள்.

குமுதம், ரகுவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு, வாசலில் உட்கார்ந்திருந்தாள்; மணி 8 ஆகிவிட்டது. ஒருவாறாக ரகுவும் வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

ரகு தன் கையிலிருந்த பையிலிருந்து ஒரு சிறிய காகிதப்பையை எடுத்து குமுதத்தினிடம் கொடுத்து "குமுதம்! 'பிறந்தநாள் பரிசு' இந்தா!" என்றான்.

குமுதம், ஒன்றும் புரியாமல் திகைப்பும் வியப்பும் அடைந்தவளாய்ப் பரபரப்புடன், பையைப் பிரித்தாள்.

என்ன ஆச்சரியம்! கொஞ்சமும் எதிர்பாராதவிதமாய் அந்தப் பைக்குள் கறுப்பு, தாழம்பூ ரேக், ருத்திராக்ஷபேட்டுகளுடன்கூடிய (குமுதம் விரும்பிய அதே) மாம்பழக் கலர் புடவைதான் இருந்தது. குமுதத்திற்குண்டான வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் எல்லேயேயில்லை.

"இன்று நீங்கள் வாங்கிவருவதாகக் காலையில்கூட சொல்லவில்லையே. இப்போது எப்படி வாங்கினீர்கள்?" என்றாள்.

"இன்று உன்னுடைய பிறந்ததினம் என்று நேற்று சொன்னையல்லவா? இன்று அந்தப் புடவையை வாங்கிப் பரிசாக வழங்கிவிடுவதென்று நேற்றே தீர்மானித்துக்கொண்டேன். சங்கராந்தியின்போதே கேட்டவுடன் வாங்கவில்லை என்று தேவிக்கு அபாரகோபம் வந்ததே. அதற்கு தண்டனையாகத்தான் இன்று வாங்கிவரும்வரை உன்னிடம் சொல்லக்கூடாதென்று இருந்தேன். இனிமேல் தேவிக்குக் கோபம் வராதே, திருப்திதானே!" என்றான் ரகு.

"அது இருக்கட்டும்! என் பிறந்தநாளுக்காக நான்தான் உங்களுக்கு ஒரு பரிசு தரப்போவதாக எண்ணினேன். ஆனல், எதிர்பாராத விதமாய் நீங்கள் முந்திக்கொண்டீர்கள்" என்றாள் குமுதம்.

ரகு:—(ஆச்சர்யத்துடன்) "என்ன! எனக்குப் பரிசுதரப்போகிருயா! என்ன பரிசு?—என்றான்.

குமுதம் அன்று மத்யானம் வாங்கிவந்த மோதிரத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

ரகு வியப்படைந்தவனாக "இது ஏது குமுதா? எப்பொழுது வாங்கினாய், பணம் ஏது உன்னிடம்?" என்றான்.


பிறந்தநாளுக்காக தகப்பனார் அத்தையிடம் பணமும் கடிதமும் அனுப்பியதையும், உடனே அத்தையுடன்தான் கடைத்தெருவிற்குப் போய் வாங்கிவந்ததையும் கூறினாள் குமுதம்.

"ஏது தேவிக்குக்கூட என்னிடம் இவ்வளவு கரிசனம் ஏற்பட்டுவிட்டதே!" என்று ரகு கேலி செய்தான்.

குமுதம் கையில் புடைவையுடன் மறைந்தாள். மறுகணமே தங்கச்சிலைபோல, அந்த மாம்பழக்கலர் புடைவையை உடுத்திக்கொண்டு தோன்றினாள். சுவாமியை வணங்கிவிட்டு ரகுவையும் நமஸ்கரித்தாள்.

"குமுதா! நாம் முன்னால் சொல்லிக்கொள்ளாமல் தெய்வாதீனமாக ஒரே சமயத்தில் ஒருவர் விரும்பியதை ஒருவர் வாங்கிக் கொடுத்துக்கொண்டதின்மூலம் நம்முடைய பரஸ்பர அன்பு வெளியாகிறதல்லவா?" என்று சொல்லி ரகு குமுதத்தின் மிருதுவான அழகிய சிவந்த கன்னத்தில் செல்லமாகத் தட்டினான். இயற்கையிலேயே சிவந்திருந்த அவளுடைய கன்னத்தில் மகிழ்ச்சிகலந்த நாணத்தினால் பட்டுரோஜாவைப்போன்ற சிவப்பேறியது.

அவர்களுடைய அன்பை ஆமோதித்து ஆசீர்வதிப்பதேபோல அங்கு மாட்டப்பட்டிருந்த "ராஜராஜேச்வரி" அம்பாள் படத்தில் சாத்தப்பட்டிருந்த மல்லிகை மாலையிலிருந்து மலர்கள் உதிர்ந்தன.



# ஆத்ம சோதனை

★

கவியோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

## 35. ஆசிரியர் உலகம்—(தொடர்ச்சி)

### 13. ஸார் ! காணும் உலகம் மாயமே !

பூகோள ஆசிரியர் நல்ல வேதாந்தி. நான் அந்தப்பாடத்தில் முதல். பூகோளப் படங்கள் வரைவது எனது பொழுதுபோக்கு. என்னைக்கொண்டே ஆசிரியர் பல படங்கள் எழுதி இன்ஸ்பெக்டர் திருக்கண் படும்படி வகுப்பில் மாட்டிவைப்பார். இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். ஆசிரியர் பூகோளப்படங்களைக் காட்டி மும்முரமாக உலகை வாயால் அளக்கிறார். இடையே "பூகோளசாஸ்திரத்தின் கருத்தென்ன?" என்று கேள்விபோட்டார்... "பரீட்சை தேறுவதுதான் ஸார்" என்றான் ஒருமாணவன். "அப்படியில்லையடா! உலகையறிந்தால் நாம் பலநாடுகளுக்குச் செல்லலாம்; வியாபாரம் நடத்தலாம்; அறிவை வளர்க்கலாம். காணும் உலகின் அற்புதங்களை அறியலாம்" என்றார் ஆசிரியர். இன்ஸ்பெக்டர் சென்றபிறகு, வேதாந்த விசாரணை பலமாக நடந்தது. "ஸார்! காணும்உலகம் மாயமே. இந்தப்பாடமும் பள்ளிக்கூடத்தைவிட்டால் மறந்து போகும் மாயமே. பேசாமல் ஆத்ம விசாரம் செய்வதைவிட்டு, உலகவிசாரத்தில் காலம் கழிப்பானேன்!" என்றேன். ஆசிரியர் "அதுவும் சரிதான்; ஞானிகளுக்கு உலகம் மாயையே..." என்றார். நான் "ஐயா! நாம் இருக்குமட்டும் உலகம் உண்மையே. அது முன்னே இருந்தது. பின்னும் இருக்கும். எல்லாம் மாயைதானே என்று மாணவன் படிக்காதிருப்பதா? மனிதன்வேலை செய்து பிழைக்காதிருப்பதா? தோட்டத்தில் உள்ளவரை அதைப் பண்படுத்தவேண்டியதும் அவசியம், உண்டு இல்லைஎன்ற சண்டை வன்?...உள்ளவரையில் உண்மையாகப் பாடுபடுவோம்" என்றேன். "அதுவும் சரிதான்... அப்படி நினைத்தாலே நமது பாடமும் நடக்கும்" என்றார் ஆசிரியர்.

### 14. எல்லாம் வெளிமயக்கே இறைவா!

சித்திரவகுப்பில் ஏகச்சத்தம்; ஆசிரியசாகெபு ஒரு பூனை முகமோ எலி முகமோ போட்டுவிட்டு 'எழுதுங்கள்' என்று

தமது கடைக்கணக்கைப் பார்த்துக்கொண்டிருப்பார். பேனா ரப்பர் கலர்பெட்டி டிராயிங் நோட்டு வியாபாரத்தைப் பற்றியே அவர் கவலை. ஐந்து நிமிஷத்தில் கோடிழுத்துவிட்டுப் பையன்கள் சேட்டைசெய்யத் தொடங்குவார்கள். ஆபாசப்படங்கள் போடுவார்கள். நான்மட்டும் தனியாக சரஸ்வதி கண்ணன் நடராசா உருவங்களைப் போட்டுப்போட்டு மகிழ்வேன். இதனால் ஏகாக்ரம் வரும். ஒருநாள் குழலூதும் கண்ணன் படம்போட்டு, அடியில் ஒரு கவியும் எழுதினேன். சாகெபு பார்த்தார். "நான் பூனை போடச்சொன்னால் இதை ஏன்போட்டாய்?"...என்று வினவினார். நான்பூனைப்படமும் காட்டி "ஐயா! நேரம் வீணாகாமல் கண்ணனைப் போட்டு தியானிக்கிறேன்" என்றேன். "நீ நாயும் பூனையும் எலியுந்தான் போடவேண்டும். இன்றேல் டிராயிங் பரீட்சை தேறாது" என்றார். பிறகு எப்படியோ எனக்கும் அவருக்கும் நேசமுண்டாகி என்னைக்கொண்டு சில அரியபடங்களை எழுதி, இன்ஸ்பெக்டர் கண்ணையும் மகிழ்வித்தார். எல்லாம் வெளிமயக்கே இறைவா!...

## 15. டிரில் வகுப்பில் வேடிக்கைகள்

டிரில் வகுப்பை தைதா தகிங்கிணதோம் என்போம். இன்ஸ்பெக்டர் வரும் பருவத்திலேதான் டிரில் ஒத்திகை நடக்கும். அன்றுதான் அவர் முறுக்காக மிலிடரி உடுப்புடன் வருவார். மற்ற நாட்களில் ஏனோ தானோ என்றுதான் டிரில் நடக்கும். பணக்காரப்பிள்ளைகள் தலைவலி கால்வலி என்று போய்விடுவார்கள். இரண்டணா தந்தால் தலைவலி லீவ் அமிர்தாஞ்சனம் இல்லாமலே கிடைத்துவிடும். கைகாலை நீட்டிமடக்கி, அரைமணிநேரம் பாவைக்கூத்தாட்டிவிடுவார் வஸ்தாது. சிலசமயம் எங்களைக் குனியவைத்துவிட்டு அவர் வெற்றிலைபோட்டுக்கொண்டிருப்பார். எங்களுக்குக் கால் கடுக்கும் இடுப்பு வலிக்கும். இப்படி ஒருநாள் மூன்று நிமிஷம் குனியவைத்தார்...என்னால் பொறுக்கமுடியவில்லை. எனது கோஷ்டிக்குக் கண்காட்டி நிமிர் என்றேன் எல்லாரும் நிமிர்ந்தனர். உட்கார் என்றேன்; உட்கார்ந்தனர். வஸ்தாத் "டே அதிகப்ரசங்கி! நீதான் நானோ?" என்று மிரட்டினார். "நீர் நானானால் இப்படி இடுப்பு வலிக்கக் குனியவைக்கமாட்டேன் ஸார்" என்றேன். "எல்லாரும் குனியும்போது உனக்கென்னடா?" என்றார். கேளுங்கோ சார் இவனை...என்று பெத்தன்னாவைச் சுட்டிக் காட்டினேன். அவன் "அப்பா, காலும் இடுப்பும் கடுக்கக் கடுக்க!" என்று ஆரம்பித்தான். ஆசிரியர் மறுநாள்முதல் கவனமாயிருந்தார். நான் காற்பந்து மட்டைப்பந்து, கட்டைப்பந்து எறிபந்துகள் விளையாடினேன். இவற்றைவிடத் தோட்டவேலை, நீச்சு, பிராணாயாமம், ஆஸனங்களிலேயே எனக்கு நல்ல தேகப் பயிற்சி கிடைத்தது. மூச்சை வீணாக்கும் படாடோபங்களில் நான் ஈடுபடுவதில்லை. என் மூச்சு யோகத்திலும் அருட்பணியிலுமே செல்லவேண்டும்.

## 16. ஐயர் என்னைக் குட்டித் திலகர் என்பார்

மற்றவர்கள் ஒருமாதிரி; எனக்கு மிகவும் பிடித்தவர் கலாசாலைத் தலைவர். சி. ம. நாராயணசாமி ஐயரே. எடுப்பான ஆள்; மத்யூ ஆர்னல்ட் ரக்பி சாபலில் வர்ணிக்கும் டாக்டர் ஆர்னல்டின் நினைவுவரும். நல்ல உயரம். பருமன், சுத்தமான ஆடை, அடக்கமான பேச்சு, இனிய நடை. அறிவு, ஆற்றல், நிர்வாகத் திறமை எல்லாம் அவரிடம் சேர்ந்து விளங்கும். நன்றாகப் படிக்கும் மாணவருக்கு அவர் வேண்டிய உதவிசெய்வார். நான் வகுப்புகளில் இனாம் வாங்கும்போதெல்லாம் அரிய இலக்கியங்களைத் தேர்ந்து அளிப்பார். அவர் ஆங்கிலம் தெள்ளிய நீரோடைபோலிருக்கும்.மரபறிந்து மொழிவார். கட்டுச்செட்டாகப் பேசுவார். அரைமணி என்றால் அதற்குள் எடுத்த விஷயத்தைக் கச்சிதமாக முடிப்பார். அவரே அரசர் கலாசாலையாயிருந்தார். பிறவகுப்புகளில் ஆசிரியர் வராவிட்டால், தாமேவந்து போதிப்பார். அவர் வந்தால் மாணவருக்குக் கொண்டாட்டம். நான் அவர் முன்னிலைக்கு வணக்கமுடன் செல்வேன். அவர்சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் என் உள்ளத்தில் ஒலிப்பதிவாகும். எங்களுக்கு ஆங்கிலப்பேராசிரியரின் இலக்கியக்கோவைகள் பாடம். ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, பிரௌனிங், பைரன், கார்லைல், லாம்ப், அடிஸன், பர்க், நியூமன், ஸ்டீல், டிக்வன்ஸி, ரஸ்கின் முதலிய பேராசிரியர் திருவாக்குகளை அவர் விளக்கும்போது அரிய மேற்கோள்களைச் சொல்வார். நான் குறித்துக்கொண்டு பாடம்செய்வேன். ஸ்காட்டின் ஐவான்ஹோ,டாம்ப்ரௌன்பள்ளிச்சேட்டை, இராமாயணம், கின்கெயடின் கிரேக்கக் கதைகள், உலகவீரர் கதைகள் இவை எங்களுக்குப் பாடம். ஐயர் இவற்றை இனிமையாகப் பாடம் சொல்லுவார். அவர் பிரமஞானி, பெசண்டம்மையின் சீடர். அரசியலில் கோகலே-நேசர். இருவர் கொள்கைகளையும் எங்களுக்குச் சொல்லுவார். நான் திலகர்-அரவிந்தர் கட்சி. தீவிரவாதம் பேசுவேன்; அவர் அதையும் வெறுக்காமல், காலத்திற்கு ஏற்ற சீர்திருத்தம் பேசுவார். மாணவர் கூட்டங்களில் நான் தைரியமாக பூரண சுதந்தரம் பேசுவேன். ஐயர் என்னைக் குட்டித் திலகர் என்பார்.

## 17. என்னுள்ளத்தைக் கவர்ந்த பேராசிரியர்கள்

இவரைப்போல் என் உள்ளத்தைக் கவர்ந்த கல்லூரிப் பேராசிரியர் சிலரே. கல்லூரிகளில் அந்தக்காலம் அதிக கலாட்டா கிடையாது. பள்ளிச்சேட்டைகளெல்லாம் கீழ்வகுப்புகளிலே தான் விநோதமாக நடக்கும். கல்லூரிகளில் மாணவருக்கும் பொறுப்புணர்ச்சி ஏற்படுகிறது. புலவரும் தமது கடமையும் தாமுமாயிருப்பர். மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைவர் ஜம்ப்ரோ எளிய நடையும் அன்புள்ளமும், அரிய போதனா சக்தியும் நிர்வாகத் திறமையும் உடைய மேதாவி. மதுரைக் கல்லூரித் தலைவர் ராஜாராம் மில்டன்-புலவர். மில்டன் காவியத்தை ராகம் போட்டுப் படித்து விளக்குவார். ஷேக்பியரை அவர் படிப்பதே நடிப்பதுபோலிருக்கும். ரைடாங்கிள் கணபதி ஐயர் கணக்குப்

புலி. தெருவில் நடக்கும்போதுகூட அவர் மூளை ஏதாவது கணக்குப்போடும். சின்னசாமி ஐயர் பெரும் ஆங்கிலப்புலவர். புத்தகமும் கையுமாயிருப்பார்...நன்றாகப் பிரசங்கம்செய்வார்...தமிழ் கோபாலகிருஷ்ணையர் பெரிய மேதாவி. விவேகானந்தரைப் பார்த்தவர். பாஸ்கர சேதுபதியின் நண்பர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அவர் அரிய பணிகள்செய்தார். அவரிடம் பாடம்கேட்பதே இன்பம். கம்பன் என்றால் ஷேக்ஸ்பியரையும் சேர்த்து ஆராய்வார். அவர் ஒரு கலாநிதி. திருச்சி எஸ். பி. ஜி கல்லூரி கார்டினர் மகா மேதாவி. ஷேக்ஸ்பியரில் பெரும் புலமையும் திறமையும் பெற்றவர்; ஸீ. ஆர் ஸ்ரீநிவாசையங்கார் ஆரியம் ஆங்கிலம் தமிழ் ஆகிய மும்மொழிப்புலவர். இசைப்புலவர், கீர்த்தனாசாரியார், கீதைக்கும் ராமாயணத்திற்கும் அஷ்டபதிக்கும் விளக்கம் எழுதிய உரையாசிரியர். அவர் எனது பாடல்களையும் கேட்டு ஊக்கமளித்தார். தமிழ் நாட்டின் கலைமணிகளில் அவர் ஒரு ஜீவரத்னம். பி. டி. சீனிவாசையங்கார் சரித்திரத்திலும் ஆங்கிலத்திலும் பெரும்புலவர். அவரைப் பிறகு சந்திப்போம். பெட்ராம் அன்பும் அறிவும் திருவும் செறிந்த புலவர்மணி...இப்படிப் பல புலவர்களை நான் அறிந்து பயன்பெற்றேன். அதனால் என் ஆங்கில அறிவு சாணையேறிப் பொலிந்தது. இனித் தமிழுக்கு வருகிறேன்.

## 36. பயப்படாதிரு மனமே

பாடபுத்தகம் அர்த்தபுத்தகம் இரண்டும் ஜோடிகள்—இரண்டையும் இணைப்பவர் ஆசிரியர். "போடு பொட்டைப்பாடம்; ஒப்பி ஒருபக்கம்" என்று ஸார் உத்தரவு போட்டால் யார் மீறமுடியும்? ஏனெனில் அவருக்கே அர்த்தபுத்தகம் பார்த்தாலே பாட்டு விளங்கும். இதுதான் அந்தக்காலத் தமிழின் நிலைமை. உயர் வகுப்புகளுக்குப் பண்டிதர் இருப்பார். கீழ்வகுப்புகளில் அடிப்படை சரியாயிராது ஆதலால் தமிழனுக்குத்தமிழ் தடவலாகவேயிருக்கும். இதை நான் நான்காம் வகுப்பிலேயே கண்டேன். தமிழைத் தனிமுயற்சியால் வளர்த்தேன். எனது கவிப்புலமைக்குப் பல இலக்கிய ஊட்டங்கொடுத்தேன். அர்த்தபுத்தகம் பார்த்து என் சகாக்கள் படிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. குருட்டுப்பாடத்தால் மொழியறிவு வளரவில்லை, 'நற்றாமரைக்கயத்து நல்லன்னம் சேர்ந்தாப்போல்' என்ற பாட்டில் தாமரைக்கயத்து என்பதற்கு தாம்புகயிறு என்றொருபையன் பொருள்சொல்லி கைவீங்க அடிபட்டான். காமுறு என்பதற்கு முருங்கைக்காய் என்றொரு சிறவன் பெஞ்சுமேல் நின்றான். பழைய தமிழ் தற்காலத்தமிழருக்கு கிரீக் லத்தீன் போலிருக்கிறது. நான் ஒரு புதிய சூழ்ச்சி செய்தேன். பழைய பாக்களை எளியநடையில் புதியதாக எழுதி என் சகாக்களுக்கும் பாடம்பண்ணி வைத்தேன். உதாரணங்கள்:

தண்ணீர் விட்டால் இளநீர் காய்க்கும்
நல்லது செய்தால் நல்லது விளையும்
நல்லவர்க் குதவி கல்மேல் எழுத்து
பொல்லார்க் குதவி புனலில் எழுத்து

மண்குடம் உடைந்தால் மண்ணுக்கும் உதவாது
பொன்குடம் உடைந்தால் பொன்னே யாகும்.
நீரளவு தாமரை; நூலளவு நுண்ணறிவு
வான்கோழி ஆடினால் வனமயி லாகுமா?
போலிகள் பாடினால் புலவரா வாரா?

இப்படி ஒருவகைப் பாடல். சுயமாகப் பல பாடல்கள். மாந்தர் இயல்பு பற்றிய கவிதைகள் —எல்லாம் எனது சங்கீத சாகரத்தில் எழுதியெழுதி வைத்திருந்தேன். நான் எங்கே போனாலும் சாகரமும் கையிலிருக்கும். அதைத் தலையணைக்கீழ் வைத்துக்கொண்டே உறங்குவேன். ஒருநாள் நான் பாஞ்சாலி சபதம் பார்த்துவந்து கவி எழுத உட்கார்ந்தேன். பள்ளிப்பாடம் படிக்கவில்லை. "சந்தனமென் குறடு" என்ற பாட்டு உருத்தள்ளவேண்டும். ஆசிரியர் "எங்கே ஒப்பி" என்றார்...நான் அதன் பொருளைவைத்துப் புதுக்கவிபுனைந்து பாடினேன்...சங்கராபரணத்தில் நீள இழுத்தேன்:

சந்தனக் கட்டை தனைஅறைத்துத் தேய்ந்தாலும்
கந்தம்எப் போதும் கமகமக்கும்—சோந்தத்
தனங்கேட்டுப் போனாலும் தருமமிகு வேந்தர்
மனங்கேட்டுப் போகார் மதி.

"கமகமவா...தரையே! ஏறு பெஞ்சுமேலே! கமகம" என்று ஆசிரியர் கன்னத்தைக் கிள்ளி, திருப்பிரம்பால் தீட்டி,'எழுது ஐந்து தரம்'என்றார். நான் என் புதுக்கவியை எழுதிக்கொண்டிருந்தேன். இதென்ன....என்று பறித்துப் பார்த்தார்...சங்கீதசாகரமா...தன் ஞானப்பாட்டா...வாவா?" என்று என் அண்ணாவிடம் சொல்லி விட்டார். "இப்படிவிட்டால் இந்தப்பயல் நாடகத்தில் சேர்ந்து கெட்டுப்போவான்" என்று அப்பா கிட்டக் கோளேற்றினார். ஒருநாள் காலையில் கவியெழுதத் தலையணையைத் தூக்கிப்பார்த்தேன்.. சங்கீதசாகரம் காணவில்லை. தயங்கினேன், மயங்கினேன், மணியிழந்த நாகம்போல் தேடினேன், ஓடினேன், அழுதேன், தொழுதேன், அலறினேன்; அண்ணா மனம் இளகவில்லை. "உன் கவி வென்னீரடுப்புக்கே லாயக்கு" என்றுமட்டும் சிரித்தான். தெரிந்துகொண்டேன். மறுநாட்காலையில் கொல்லைக் குப்பையிலிருந்து ஒரு துணுக்குக்கிடைத்தது. அதில் பயப்படாதிரு மனமே என்ற பல்லவியிருந்தது; சங்கீதசாகரத்தில் மிச்சம் அதுதான். அதைப் பூர்த்திபண்ணி, அன்றுமுதல் சுத்த சக்தியருளால் ஏராளமான பாடல்கள் எழுதிவந்தேன். ஆயினும் அங்கங்கே கொடுத்து மறைந்தவை பல. மிச்சந்தான் இப்போது வெளிவருவது. திருவருளே எனக்கு அபயமளித்துக் காத்தது. இன்றேல் மனிதவுலகின் கொடுமையால் என் கலைப்பயிர் வாடி வடிவற்றுப்போயிருக்கும். அத்திருவருளே எனக்குச் சமயசஞ்சீவியான பெரியாரையும் தந்து வழிகாட்டியது.

## 37. புலவர் சிகாமணி

பழையதமிழ் படிக்க ஒரு ஆசிரியர்வேண்டும்; அன்பான ஆசிரியர் வந்தார்—தெய்வசிகாமணிப்புலவர். இவரை நான் வட்ட

மிட்டுத் திரிந்தேன். இவர் எங்கே பாடம் சொன்னாலும் அங்கே ஒண்டியிருந்து கேட்டேன். ஒருநாள் செட்டி ஊருணி கிணற்றில் குளித்து, அனுமார் தரிசனம் செய்துகொண்டு வந்தேன். ஐயர் "வா அம்பி!" என்று காப்பிக் கடைக்குள் அழைத்துச்சென்று இரண்டு இட்டலி தந்தார். தமிழ்வாணியின் பிரசாதம் என்று உண்டேன். பிறகு அவர் பின்சென்றேன். ஒற்றைத் தெருவிலிருந்த அவர் வீட்டுக்குச் சென்றதும் திண்ணையில் அமர்த்தி, உள்ளேசென்று திருக்குறளும் கம்பனும் கொண்டுவந்தார்.

புலவர்:—சரி, நீ ஏன் என் பின்னாலேயே வருகிறாய்...ஒற்றன் போல்?

நான்:—நானா வருகிறேன்? தமிழ்க்காந்தம் இழுக்கிறது.

புலவர்:—கம்பனும் திருக்குறளுமே உலகை வசீகரிக்கும் தமிழ்க்காந்தம்! படி....இந்தா குறள் ஒன்று படி....

நூலைப் பிரித்தேன்:

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியர் கண்ணும் உள.

என்ற குறள் வந்தது. ஐயர் தெளிவாக விளக்கி, "நீ அருட்செல்வமே தேடு"....என்றார். பிறகு குறள் முதல் அதிகாரம் படித்தேன். பிறகு கம்பனில் "உலகம் யாவையும்" நடந்தது.

"இனித் தினம் ஐந்தரைமணிக்குத் தாமரைக் குளத்திற்கு வா, படிக்கலாம்" என்றார். சென்றேன், பயின்றேன், பயனடைந்தேன்.

தமிழ்க் காதலால் நான் பல அரிய தொல்லிலக்கியங்களைப்படித்தேன். விளங்காத இடங்களைக் குறித்துவைத்துப் புலவரிடம் கேட்டேன். நானே இயற்கையமைதியில் தனியாகப் படிப்பது இன்பம் அளித்தது. கம்பன் முழுதும் அப்படியே படித்தேன். நாட்டரசங் கோட்டை கம்பர் சமாதியிலிருந்தும் சில நாட்கள் படித்ததுண்டு. திருக்குறளைப் பாராயணம் செய்தேன். கீதையும், தாயுமானாரும், குறளும் எப்போதும் என்னுடன் இருக்கும். சங்க இலக்கியங் களும் படித்தேன். ஆனால் சும்மா தலைவன் தலைவி காதல் வர்ணனையே படிப்பது பிடிக்கவில்லை. அகப்பொருளைவிட அருட்பாவையே நான் ரசித்தேன். பக்திநூல்களே எனக்கு விருப்பம். ஆங்கிலக் கவிதைகளையே நான் மிகவும் படித்து ரசித்தேன். என்னுடன் சுவைக்க வக்கீல் திருப்பதி சேஷையா காலையில் தாமரைக்குளத்திற்கு வருவதுண்டு. அங்கே கிழக்கே கண்மாய்க்கரையிலிருந்த அரசமரத்தடியே எனது தவப்பள்ளி. தியானமும் கல்வியும் அங்கே தழைத்தன. சுற்றியுள்ள பசு வயல்களைக் கண்டாலே இன்பமுண்டாகும். படிக்கும்போது என்னுள் யாரோ விளக்குவதுபோல் உணர்வேன். படித்துத் தியானிக்கும்போது கவிதை மலரும். கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் உள்ளே உறவுகோலும் பக்தி மின்சாரமே கவிதை. நான் கடவுளுக்கே பாடினேன். தாயிடம் சேய்போல் கடவுளிடம் கவிதையால் பேசினேன். உலகம் அதை அறிந்து மெச்சவிரும்பியதில்லை. இன்று உலகம் என்னை அறிந்ததும் இறைவன் இச்சையே. ஒருநாள் சந்தியாமடச் சுவரில்

தெய்வ ஒளிதனையே தேடு; பிறவெல்லாம்
கைநழுவும் காலத்திற் காண்.

என்று எழுதினேன். தெய்வசிகாமணி பார்த்தார். "நன்றாயிருக்கிறதே; கொண்டா நீ எழுதியதெல்லாம்" என்றார். "எல்லாம் நடராஜா சந்நிதியில் படித்துக் கிழித்து எறிந்தேன்" என்றேன். "இனி அப்படிச்செய்யாதே; பாடியதும் எனக்குக் காட்டு; எல்லாம் சேர்த்துவை...பிற்காலம் பயனாகும்" என்றார் புலவர். அவர் மெச்சிய கவிகள் சில பாரதசக்தி சிவகிரிப்படலத்தில் உள்ளன. இந்தக் கவிதை அவர் போற்றினார்:

கலையென்றும் காட்சி என்றும் கனதன போகம் என்றும்
புலையுடல் இன்பம் தேடிப் பொய்யிலேவாழ்ந்து, மாதர்
வலையிலே வீழ்ந்து, வஞ்ச மனமழியாது, தூய
நிலையிலே நின்று தெய்வ நிலைபெறச் செய்எந் தாயே.

கணபதியாபிள்ளை இவர் சீடர். அவரிடமும் நான் தமிழ்படித்தேன். அவர் எனது கவிதைகளையும் நாடகங்களையும் பார்வையிட்டார். இவர் நல்ல புலமையும், அருவிபோல் பேச்சும் அழகான தோற்றமும் உடைய அறிஞர். இவரைப் பார்க்க யாழ்ப்பாணம் கதிரைவேற் புலவர் வந்தார். அவரே எனக்கு ஆறுமுக நாவலரைப் பற்றி விரிவாகச்சொன்னவர். நாவலர்பெருமான் வரலாற்றை எழுத அன்று கேட்டதெல்லாம் உதவின. அருட்பா மருட்பா வாதம்பற்றி எங்களிடையே விவாதம் நடந்தது....நான் "நாவலர்நாவலர், பாவலர் பாவலர்; அவர் சிவத்தைப் பாடினார்; இவர் பேசினார்; இதையறிந்தால் சண்டையில்லை" என்றேன். அகராதிப் புலவர் அதுவுஞ்சரி என்றார். அவர் நீர்வீழ்ச்சிபோலத் தமிழ் பேசினார்.

எங்களூருக்குச் சசிராமபாகவதர் வந்தார். தெய்வசிகாமணி ஐயரே பிரசங்கம்வைத்தார். செட்டிசத்தரத்தில் இருபது நாட்கள் ஆவேசமாக ஞானமிர்தம் பொழிந்தார் பாகவதர். ஆசு கவிகள் தடதடத்தன. வேதாந்தக் கருத்துக்கள் சலசலத்தன. அவர் சொற்பொழிவு எனக்குப் புதிய வாக்குத்திறனைத் தந்தது. அந்த வேகத்தில் நான் ஆங்கிலமும் பேசப் பயின்றேன். சசி சென்றதும் விலக்ஷணனந்தர் வந்தார். அப்போது எங்கள் தெருக்கோடியில் இராமகிருஷ்ணமடம் எழுந்தது. அதில் சுவாமிகள் ஒருமாதம் தங்கினார். அங்கே ஞானவாசிட்டம் படித்தோம், கீதை ஆராய்ந்தோம், தியானித்தோம். அக்காலம் நான் அரசியலில் ஈடுபட்டதால், சுவாமிகளுடன் இந்திய சுதந்திரம்பற்றிப் பேசினேன். "நம் சுதந்தரம் நாட்டின் சுதந்திரம்" என்பார் சுவாமிகள். அறிஞர் கோதண்டராமர், எஞ்சினியர் குப்புசாமி, பாகவதர் சுந்தரமூர்த்தி, நரசிம்மம், தெய்வசிகாமணிப் புலவர் ஆகிய பக்தர்கள் மடத்தில் கூடி நன்னூல்களைப் படிப்போம். கோதண்டராமர் விவேகானந்தர் வாக்குகளை மொழிபெயர்த்து விடுவிடாகத் தந்து மடத்திற்குப் பொருள்திரட்டுவார். அவருடன் நானும்சென்று சேவைசெய்வேன். குப்புசாமி ஐயர் நல்ல புதிய ராட்டினங்கள் செய்து, எங்களை

தூற்கச்செய்தார். அங்கே கூடினவர் எல்லாரும் ஆத்ம விசாரிகளே. யாருக்கும் விட்டுக்கவலை கிடையாது. விலக்ஷணானந்தர் எங்களை நிர்விசார கோஷ்டி என்பார்.

## 38. உரிமை உள்ளே

விலக்ஷணானந்தரும் நானும் ஆசுகவிகள் புனைவதுண்டு. அவர் எளிதாகப் படுவார். ஒருநாள் தேசசுதந்தரத்தைப்பற்றிப் பேசிய பிறகு, நான் இந்தப் பாட்டைப் பாடினேன் :

அடிமைச் சங்கிலியை—மனமே
அணியெனப் பூண்டாய்
கொடிய வெஞ்சிறையை—செல்வக்
கோட்டையென நினைத்தாய்.
கரடிக் குட்டியினை—மனமே
கம்பளி என்றெடுத்தாய்
சரடெனப்பூண்டாய்—மனமே
சாரப் பாம்பினையே.
அன்னிய மாயத்தினை—மனமே
அழகெனக் கொண்டாய்
மின்னிய கண்ணாடிச்சில்—வைரமென்று
விலை கொடுத்துவிட்டாய்.
உண்ண மனையிருக்க—மனமே
ஓட்டலைத் தேடுகின்றாய்
எண்ணவுள் ளின்பிருக்க—மனமே
எங்கே நீ தேடுகின்றாய்!

இதைப் பாடும்போதே ஒரு பேர்வழி மெல்ல உள்ளே வந்தான் சுவாமிகள் சட்டென்று அப்புறம் சென்றார். பேர்வழி "சாமி இங்கே என்ன செய்யுது?" என்று பேசும்போதே ஒற்றநரி என்றறிந்தேன். ஏனெனில் உள்ளூர் மாஜிஸ்ட்ரேட் மாப்பிள்ளை என் நண்பர்...அவரும் ஒற்றிலாகா ஊழியர். என்னிடம் எல்லாம் சொல்லியிருக்கிறார். நான் பேர்வழியைத் தனியே அழைத்துச் சென்று "எத்தனை நாளாகச் சாமியைச் சுற்றுகிறாய்...விஷயமென்ன?" என்று வினவினேன். "அவரை நல்லாத்தெரியுமே. அனுமந்தக்குடி ஸ்ரீநிவாச ஐயங்கார். ஒரு பெண் உண்டு...தேவாரம் அதிகாரப்பட்டி அனுமந்தக்குடி எல்லாம் தேடி இங்கே வந்தேன்... இவர் அரசியல் சாமி" என்றான்.

இரவில் விலக்ஷணானந்தர் என்னை அழைத்துக்கொண்டு மேலூர் பக்கம் சென்றார். அங்கொரு போக்குவண்டியில் ஏற்றிவிட்டேன். அப்போது "திலகர் பேசினார்; காந்தி செய்வார். நாமும் தேச சேவை ஆத்மசக்தியுடன் செய்வோம்...நீயும் செய்" என்று தட்டிக் கொடுத்துச் சென்றார். பிறகு விலக்ஷணானந்தரைக் குளித்தலையில் கண்டேன்...அவர் மேல்மாயில் அடங்கிய செய்தி எட்டியது... மிகவும் விசனித்தேன். தமிழ்நாட்டு ரத்னம் விலக்ஷணர். அவர் ராமதீர்த்தர் போன்ற துறவி, ஞானி... (தொடரும்)

# தானியங்களின் மகாநாடு

வை.மு.கோ.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"...நான் எவ்வளவு ப்ரதானமாயிருப்பினும் என்னைச் சிந்துவார்கள் உண்டா இம் மகாநாட்டில்? நான் இல்லாவிட்டால் ஜனங்கள் வாழமுடியுமா? கற்கண்டும் மிளகும் இல்லாமல் என் ஒருவனால் உலகத்தில் மக்கள் ஜீவித்திருக்கமுடியும். அதை அடியோடு மறந்து பேசுகிறதைப் பார்க்கும்போது எனக்கு ஒரு தத்வ ஞானம் உதயமாகிறது.

உலகத்தில் தற்போது மக்களின் வாழ்வு எப்படி இருக்கிறது தெரியுமா? உலகத்தையே தன் குட்சியில் அடக்கி ஆளும் ஸர்வ லோக ரட்சகனை மதியாமல் தான்தோன்றிகளாகத் திரியும் மக்களின் கதியும் மனோபாவமும் எப்படி இருக்கிறதோ அதே போலத்தான் இதிலும் இருப்பதை நான் உணர்ந்தேன். நம்மை ரட்சிக்கும் ரட்சகனை மறந்து ரட்சகமல்லாத சாமான்யர்களைப் பூஜித்தால் என்ன பலன்கிடைக்குமோ அப்படித்தான் இந்த விஷயத்திலும். உலகம் பலவிதமல்லவா!"...என்றது இதைக்கேட்ட மற்ற தானியங்கள் ஆமோதித்து ஆரவாரம் செய்தன.

மொச்சைக்கோட்டையார் மெல்ல கனைத்துக்கொண்டு "நெல்லுப் பெரியாரே! நான் நினைத்துப் பேசவிருந்த விஷயத்தை நீரே பேசிவிட்டீர். எனக்கு உள்ளம் கொதிக்கிறகொதிப்பில் என் தோல் தானே உரிந்துவிடும் போலஇருக்கிறது. உலகம் நாளுக்கு நாள் தலைகால் தெரியாமல் உருளுகிறது. எந்த இடத்தில் மதிப்பு வைக்கவேண்டுமோ அந்த இடத்தில் அவமதிப்புதான் வைக்கப் படுகிறது. எத்தகைய நித்ய தரித்திரனாக இருப்பினும் சரி, பெரிய கோடி ஐச்வர்யக்காரனாக இருப்பினும் சரி,ஒருபிடி அரிசி நொய்யும் ஒரு சிறிது உப்பும் இருந்தால்போதும், கூழ்காய்ச்சிக் குடித்து வயிறார உயிருடன் வாழுவார்கள். சக்கரையும், கற்கண்டும், பாதாம்கொட்டையும் காணும் இல்லாவிடில் உயிர் போய்விடாது. உலகமும் இருண்டுவிடாது. அரிசி இல்லை என்றால், ஜீவிக்க முடியுமா? பணக்காரர்களாயின் மற்ற பழவகைகள், இதர பதார்த்தங்கள் முதலியவைகளால் சிலகாலம் ஜீவிக்கலாம். மூலாதாரம் அரிசிதானே ஐயா! எந்த ஒரு பொருள் இல்லாவிட்டால் மக்கள் உயிர்வாழ முடியாதோ அந்த பொருளுக்கல்லவா கண்ணியமும் மதிப்பும் வைத்து கவுரவிக்கவேண்டும். அதைவிடுத்து ஒரு தலைவர் தேர்தலிலேயே காலதாமதமும் சண்டையும் அபிப்ராய பேதமும் இருந்தால் எப்படி ஐயா மகாநாடு நடப்பது? உபயோக மற்ற சொத்தை மனிதர்கள் பணக்காரர்களாக இருந்துவிட்டால் அவர்களையே மனித சமூகத்தில் தேர்ந்தெடுத்து தலைமை வகிக்கவும் ஏதாவதொரு குப்பைத்தொட்டியையாவது திறப்பதற்கும் அழைக்கிறார்களே; அதுபோல் நீங்களும் செய்வது சரியல்ல. யோக்யதையை ஒட்டித்தான் நாம் காரியம் செய்யவேண்டும்" என்று பெரிய கூப்பாடுபோட்டுப் பேசினார்.



183159
1-8-1950

இதைக் கேட்ட புளிமோத்தை மெல்ல உருண்டு உருண்டு சபையின் நடுவில் வந்து "சபையோர்களே! நான் ஏதோ இந்தக் கூட்டத்தில் சம்மந்தப்பட்ட நபராயிற்றே என்று கூட்டத்திற்கு வந்து உட்கார்ந்தேனேயன்றி, பேசும் எண்ணத்துடன் வரவில்லை; இருப்பினும் இப்போது இங்கு நடக்கும் விவகாரத்தைப் பார்த்து என்னால் பேசாமலிருக்கமுடியவில்லை. மொச்சைக்கொட்டைத் தம்பி சொல்லியது மிகவும் சரியானது. அறிவுகெட்ட மூடமனிதன் மிகவும் பணக்காரனாக இருந்தால் ஜனசமூகம் அவனை மதித்துவிடுகிறது. அதுபோல் நாமும் செய்வதா? பரம தரித்திரனானாலும் பொதுஜன உபகாரியாய் சத்யசந்தனாய் இருப்பவனைத்தான் மதிக்கவேண்டும். கர்வமற்ற நிலைமையில் கடமை என்று எண்ணி வேலைசெய்வான்.


'அரிசிகூட எங்களுக்கு லக்ஷ்யம் இல்லை. நாங்கள் பாலும் பழமும் சாப்பிடுகிறோம்' என்று சில பணக்காரர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். மூன்று காலமும் பழவகைகள் சாப்பிட்டாலும் ஒரு வேளைக்கு அரிசியினால் செய்த தோசை, இட்லி, உப்புமாவு முதலியவைகளை நன்றாக நகத்துகிறார்கள். இது எந்த அம்சத்தில் சேர்ந்தது? ஆகையால், நெல்லுப் பெரியாரைத்தான் தலைமை வகிக்கத் தேர்ந்தெடுக்கவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் எல்லோரும் கூட்டத்தைவிட்டு வெளியேறிவிடுவோம். ஒரு பணக்காரனைப் பார்ப்பதா? பல ஏழைகளைப் பார்ப்பதா?" என்று கூப்பாடு போட்டது.

இதற்கும் எல்லோரும் பேராரவாரம் செய்தார்கள். உடனே உப்பு படபடவென்று துள்ளிக்குதித்து ஓடிவந்து, "உம்! காலக்கொடுமையின் கூத்துதான் இந்தக் கலவரத்திற்குக் காரணம். பல இடங்களில் நான் ப்ரத்யட்சமாகப் பார்த்திருக்கிறேன். பொதுஜன ஸேவை செய்வதாயும் ப்ரமாதமான காரியத்தைச் சாதிக்கிறதாயும் சிலர் சரியானபடி வேஷம்போட்டு 'கம்புக்கும் களைவெட்டித் தம்பிக்கும் பெண் பார்த்த' பழமொழியைப்போல் தனக்கும் ஏராளமான செல்வத்தைத் தேடிக்கொண்டு ஊரை எல்லாம் உறிஞ்சி பணம் திரட்டிப் பொதுக்காரியத்தையும் சாதித்ததுபோல் காட்டி நடிக்கும் பெரிய மனிதர்களின் புகழ்தான் ஓங்கி நிற்குமேயன்றி, தன்னலமற்ற பேருபகாரியை உலகம் மதிக்கின்றதா? அதுபோலத்தானே இங்கேயும் நடக்கிறது. மக்களின் சமூகத்தில் பூரா பூரா பலவிதத்திலும் உதவி புரிகிற உண்மையான பெரியவர் நெல்லுப் பிள்ளையார்தான். அவரில்லாவிட்டால் ஒருவிதமான ரஸமும் இல்லை. ஆகையால் அவரைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். ஜம்பமாய் கல்யாணங்களில் தலைகாட்டிவிட்டுப்போகும் கற்கண்டு வள்ளலுக்கு இந்த ஸ்தானம் சரிப்படாது.

இதைக்கேட்ட சகல தானிய வகைகளும் உணவுப்பொருள்களும் ஒன்றுகூடி "இதுதான் சரி! இதுதான சரி! நெல்லுப்பெரியார்தான் தகுதி உள்ளவர். அவர்தான் சரியானவர்" என்று ஒரே முகமாகக் கர்ஜனை செய்தன.

நெல்லுப்பெரியார் மிக்க அமைதியுடன் எழுந்து "அன்பர்களே! உங்கள் ஆரவாரத்திற்கும் அன்பிற்கும் மெச்சுகிறேன். இருப்பினும் நான் ஏதோ தலைமைப்பதவிக்கு லாயக்குள்ளவன் என்றும், நான் அதை விரும்புவதாயும் யாரும் நினைக்கக்கூடாது. எந்த ஒரு முக்ய ப்ராணாதாரம் இல்லாவிட்டால் உலகமே அழிந்துவிடுமோ அந்த மூலப்பொருளைப்பற்றி நீங்கள் எவருமே சிந்திக்கவில்லை. நான் இல்லாவிட்டால் கட்டாயம் ஜனங்கள் ஜீவிக்கமுடியும். ஆனால், ஒருவாய் தண்ணீர் இல்லாவிட்டால் உலகமே அழிந்துவிடும். ஜலம் இல்லாவிட்டால் நான் தலை எடுப்பதேது? ஒருவாய்த் தண்ணீரைக் குடித்து மக்கள் வாழலாம். அதிலும் ஜலத்தினுடைய பெருமையை நீங்கள் முக்யமாக அலசிப்பார்க்கவேண்டும். பாபத்தைப் போக்குவதும் நன்னீர். ப்ராணனைக் காப்பதும் நன்னீர். இதுபோல் பலபல அம்சங்களில் முதன்மை ஸ்தானம் வகிப்பது உயர்ந்த ஜலமேயாகும்; அரிசி நொய்யினால் கூழ்காய்ச்சலாம் என்று நீங்கள் சொன்னீர்களே, அந்தக் கூழுக்கும் முக்யமானது நன்னீர் என்பதை மறந்துவிட்டீர்கள். ஆகையால், நான் ஏக மனதாக ஸ்ரீமதி கங்காதேவியை (ஜலத்தை) தலைமை வகிக்கத் தேர்ந்தெடுக்கும்படி வேண்டுகிறேன் என்றார். கரகோஷத்துடன் ஆமோதிக்கும் சத்தம் வானைப் பிளந்தது.

---



வந்தவர்:—ஏனய்யா, டமோட்டா செடியும் போட்டு அதற்கு வெயிலில்லாமே நிழல் கட்டும்படி துணிகளையும் உணத்தியிருக்கே?

வீட்டுக்காரர்:—எனக்கு எந்த இடம் பிடிக்குமோ அந்த இடம் தான் என் சம்சாரத்துக்கும் பிடிக்கும.

வந்தவர்:—அப்படீன்னா அந்தச் செடிகள் அப்படியே அழுகி அழிந்தல்லவா போகும்?

வீட்டு:—எது எப்படி போனாலும் எனக்கும் என் சம்சாரத்துக்கும் அவ்வளவு ஒற்றுமை சார்!

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## 1919-ம் வருஷம்

1919 நவம்பர் 25-ந் தேதி, வைஸ்ராயின் மனைவி லேடி செம்ஸ்போர்டும், சென்னை கவர்னர் மனைவி லேடி வில்லிங்டனும் பாடசாலைக்கும் ஐஸ்ஹௌஸுக்கும் விஜயம் செய்தார்கள். இந்த விஜயத்தை முன்னிட்டு பாடசாலைத்தலைவி மிஸ் பிரேஜரும், இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸஸ் டிரைஸ்டேலுமாக வந்திருந்து 2 வாரங்களாக ஏற்பாடுகள் செய்தார்கள். அவர்களுக்கு எதுவுமே அரைகுறையாக இருக்கக்கூடாது. மூலைமுடுக்குகளில் ஒரு தூசுதுரும்புகூட இருக்கக்கூடாது. எல்லாம் துப்புரவாய் சுத்தமாய் இருக்கவேண்டும். சாமான்கள் பண்டங்கள் படங்கள் யாவும் ஒழுங்காய், அலங்காரமாய் வைக்கப்பட்டிருக்கவேண்டும். வெண்கலம் பித்தளை பாத்திரங்களில் புஷ்பங்களையும் அழகிய பசிய தழைகளையும் அலங்காரமாக ஆங்காங்கு வைக்கவேண்டும். அன்று ப்ரத்யேகமாக பங்களூரிலிருந்தும் நீலகிரியிலிருந்தும் நிறைய உயர்ந்த ஜாதி புஷ்பங்களும் நீண்ட காம்புடன்கூடிய தாமரைப் புஷ்பங்களும் வருவித்து, தாமரைப்புஷ்பங்கள் 8, 10 சேர்த்து அவற்றின் நீண்டகாம்புகளைச் சேர்த்து ஒரு அழகிய நாடாவினால் கட்டி வைஸ்ராய் மனைவிக்குக் கொடுக்கப்பட்டது. சாதாரணமாக எல்லாருக்கும் கொடுக்கும் ரோஜாச்செண்டைவிட, தாமரை புஷ்பம் அவர்களுக்கு இன்னும் பிடித்ததாயிருந்தது.

## பூவரசம்புஷ்பமும் மோர்க்குழம்பும்

இந்த சந்தர்ப்பத்தில் என் தகப்பனார் சொன்ன ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. கும்பகோணத்தில் அவர் படித்துக்கொண்டிருந்தபோது அந்த ஊருக்கு கவர்னர் விஜயம் செய்தாராம். அந்த ஊர் ப்ரபுக்கள் எல்லாரும் எலுமிச்சம்பழமும், ரோஜாச் செண்டும் மாலையும் கொடுத்து அவரைப் பேட்டிகண்டார்களாம். ஒருவர் மாத்திரம் அபூர்வமாய் பூவரசம் புஷ்பச்செண்டும், ஒரு சீசாவில் சேப்பங்கிழங்கு மோர்க்குழம்பும் எடுத்துக்கொண்டுபோய் கவர்னருக்குக் கொடுத்தாராம்! அதனால் கவர்னரது கவனம் கவரப்பட்டு அவற்றின் விசேஷத்தைப்பற்றிக் கேட்டாராம். புஷ்பங்களுக்குள் அரசபுஷ்பம் பூவரசம் புஷ்பம் என்றும், எந்த விசேஷ விருந்துகளிலும் தென் இந்தியர்களுக்கு மோர்க்குழம்பு விசேஷமென்றும் கேட்டுக்கொண்டு, அன்று தன் சாப்பாட்டில் மோர்க்குழம்பை ரஸித்து சாப்பிட்டாராம். நிற்க,

வைஸ்ராய் மனைவிக்கும் கவர்னர் மனைவிக்கும் அன்று தாமரைப் புஷ்பச்செண்டும், வெல்லம், உளுந்து, எள் இவற்றால்செய்த பூர்ண குழக்கட்டைகளும் தயாரித்துக் கொடுத்தோம். வீடு முழுவதும் மாக்கோல அலங்காரம், இத்யாதி. கும்மி கோலாட்டம். ஒரு இடத்தில் தாமரைமேல் லக்ஷ்மிதேவி போலவும் ஒரு இடத்தில் ஸரஸ்வதிதேவி போலவும் (Tableaux) கண்காட்சிகள். இப்படியாக மிகவும் விமரிசையாகப் பெரியவர்களின் விஜயம் நடந்தது.

மறுநாள் கவர்மெண்ட் ஹௌஸில் "The Women's Work Exhibition" பெண்மக்களின் கைத்தொழில் காட்சியொன்றை வைஸ்ராய் மனைவி திறந்துவைத்தார். அதில் எங்கள் பாடசாலையிலிருந்து "பூர்விக சென்னை நகரம்" "Old Madras" என்பதைப்பற்றி, அதாவது சென்னைநகரத்தின் வளர்ச்சியைப்பற்றி, படங்கள், மிகுந்த பிரயாசையுடனும் ஆராய்ச்சியுடனும் தயாரித்து அனுப்பியிருந்தோம். ஐஸ் ஹவுஸ் மாணவி ஒருத்தி உடைந்த கற்சட்டித் துண்டுகளைக்கொண்டு ஒருஸெட் சமையல் பாத்திரங்கள். அடுப்பு, உரல், யந்திரம் இவைகள்செய்து அனுப்பினாள். இவைகளுக்கெல்லாம் பதக்கம், பரிசுகள் கிடைத்தன. இப்படியாக, 1919-ஆம் வருஷம் பூர்த்தியாக கிறிஸ்துமஸ் விடுமுறையும் முடிந்து 1920-ஆம் வருஷம் பிறந்தது.

## 1920-ம் வருஷம்

1920-ஆம் வருஷம் ஆரம்பத்தில் கல்வி இலாக்காவில் பெண்கல்வி அபிவிருத்தியைக் கவனிப்பதற்கு டெப்புடி டைரெக்டர்களில் ஒருவர் ஒரு பெண்மணியாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்து, அப்படி ஒரு புதிய வேலையை ஏற்படுத்தி அதற்கு மிஸஸ் டிரைஸ்டேலை (Mrs. Drysdale) நியமித்தார்கள்:— (Deputy Directress) பாடசாலைத் தலைவியாயிருந்த மிஸ் பிரேஜர் இன்ஸ்பெக்டரஸ் ஆக மாற்றப்பட்டாள்.

## ராஜத்தின் அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும்

மார்ச்சு மாதத்தில் ராஜம் என்னும் ஒரு பெண் வந்துசேர்ந்தாள். அவள் புருஷன் யுத்தத்தில் ஸேவைசெய்து இறந்துபோனான். ராஜத்துக்கு 12 வயது இருக்கும். மிஸஸ் டிரைஸ்டேல், இந்தப் பெண்மேல் மிகுந்த அபிமானத்துடன், நமது ஆச்ரமத்தில் வந்துசேர்ந்த முதல் "War Widow"-யுத்தத்தினால் ஏற்பட்டுவந்த கைம்பெண் என்ற பெருமையுடன் முயற்சிசெய்து, அந்தப் பெண்ணுக்கு ஒரு கவர்மெண்ட் பென்ஷன் வாங்கிக்கொடுத்தாள். மாதம் 10 ரூபாய் என்று ஞாபகம். இது கிடைத்தவுடன் ராஜத்தின் ஏழைதகப்பனார் இந்த 10 ரூபாய்க்கு ஆசைப்பட்டுக்கொண்டு அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டே போய்விட்டார். எங்களுக்கெல்லாம் அவர்மேல் அசாத்தியமான கோபமும், அந்தப் பெண்மேல் அனுதாபமும். ஆனால் அவருடைய பிடிவாதத்தை மாற்றவே முடியவில்லை. அந்தப் பெண் மேல் படிப்பு படித்திருந்தால் இந்த 10 ரூபாயல்ல, 100 ரூபாய்வரைக்கும் சம்பாதித்திருப்பாள் என்பதை பெண்ணின் தகப்பனார் உணரவேயில்லை. இது இருவருடைய துரதிருஷ்டம் என்றேதான் சொல்லவேண்டும்.

## பூர்ணம்மாளின் பூர்ண படிப்பு

தெலுங்கு ஜில்லாவிலிருந்து பூர்ணம்மாள் என்ற 10 வயதுப் பெண் வந்து சேர்ந்த 6 மாதத்திற்கெல்லாம், அவள் தாயார் வந்து...பூர்ணம்மாளின் புருஷன் வீட்டுப்பேரிடமிருந்து ஜீவனாம்சமாக 100 ரூபாய் கிடைக்கவேண்டுமென்றும், அதற்கு அந்தப் பெண்ணையே அழைத்துக்கொண்டுபோய் வக்கீல் வைத்து கோர்ட்டில் வழக்காடவேண்டுமென்றும், உடனே அந்தப் பெண்ணை அவளுடன் சேர்த்து அனுப்பிவிடவேண்டுமென்றும்...பிடிவாதம் செய்தாள். பரம ஏழைக் குடும்பம். 100 ரூபாய் என்பது அவர்களுக்கு ஒரு பெரிய ஸம்பத்தாகத் தோன்றிய நிலைமையில் இருந்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் அந்தம்மாளுக்கு புத்திமதி சொல்லி, கோர்ட்டு காரியங்கள், ஏழைகள் விஷயத்தில் கொஞ்சத்தில்

முடியாதென்றும், அது நீடித்துக்கொண்டேபோனால் இந்தப் பெண்ணின் படிப்பு ஒரு வருஷம் வீணாகிவிடுமென்றும், இவள் படித்து முன்னுக்கு வந்தால், மாதம் 100 ரூபாய்வரைக்கும் இவளே சம்பாதிப்பாள் என்றும் சொன்னதை அவள் நம்பவே மறுத்துவிட்டாள். ஆயினும் அவளுக்கு மேல் பிடிவாதமாயிருந்த என் பேச்சை தட்டமுடியாமல் வேண்டாவெறுப்பாகவே திரும்பி ஊர்போய்ச் சேர்ந்தாள். பூர்ணம்மாளுக்குத் தன் தாயாருடன் போகாமல் தங்கிவிட்டதில் சந்தோஷமே. பி. ஏ. எல். டி. முடித்து, அவள் 150 ரூபாய் வரைக்கும் சம்பாதித்து வயதான பெற்றோர்களைக் காப்பாற்றி தம்பிகளைப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவந்தாள், பிற்காலத்தில். நிற்க,

பிப்ரவரிமாதம் சிவராத்திரிக்கு என் பெற்றோர்கள் ஸ்ரீசைலத்துக்குப் போய்வந்தார்கள். போகவேண்டுமென்று எனக்கு நிரம்ப ஆவல். ஆனால் வேலைகளையெல்லாம்விட்டு லீவு எடுத்துக்கொண்டு போகமுடியவில்லை. மார்ச்சுமாதம் 16-ந் தேதி விஜயநகரம் மகாராணி ஆச்ரமத்துக்கு விஜயம் செய்தார்கள். பெண்களின் ஆடல் பாடல்களையெல்லாம் பார்த்து சந்தோஷித்தார்கள்.

## S. S. L. C. பரீக்ஷைக்கு மூவர்

இந்த வருஷம் S. S. L. C. பரீக்ஷைக்கு ஆச்சிரமத்துப் பெண்கள் மூன்றேபேர்தான் ஆஜரானார்கள். அதில் ஒருத்தி டி. கே. ராஜம் என்பவள் மேரி ராணி கல்லூரியில் சேர்ந்து B. A. L. T. முடித்து புதுக்கோட்டையில் ராணிஹைஸ்கூல் தலைவியாக 20 வருஷங்களாக இருக்கிறாள். மற்ற இருவரும் (Secoudary Training) எடுத்து உபாத்தியாயினிகளாய் இருக்கின்றனர்.

## கேலியும் பரிகாசமும்

இந்த வருஷம் செகன்டரி டிரெயினிக்கு முடித்த ராஜலக்ஷ்மி என்பவள், பிற்பாடு M. A. முடித்து, மேரியரசி கல்லூரியில் தெலுங்கு பேராசிரியையாக இப்போது இருக்கிறாள். கிரிலக்ஷ்மி என்னும் தெலுங்கப்பெண் விதவைக்கோலம் பூண்டவள், சிவப்புப்புடவை கட்டிக்கொண்டவள்; லோயர் எலிமெண்டரி டிரெயினிங் முடித்து குடியாத்தத்தில் ஒரு எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயினியாகப் போனாள். அந்தக் காலத்தில் இந்தமாதிரி விதவைக்கோலம் பூண்டு வெள்ளைப்புடவையோ சிவப்புப் புடவையோ கட்டிக்கொண்டு வயதான பெண்கள்கூட ஆச்ரமத்தில் வந்து சேர்ந்து பாடசாலையில் படித்து முடித்து முன்னுக்கு வந்தார்கள். பாடசாலையிலும் வெளியிலும்கூட இதைப்பற்றி கேலியும் பரிகாசமும் உண்டு. ஆச்சிரமத்துப் பெண்கள் எந்த வேஷமானாலும் சரி, என்ன வயதானாலும் சரி, ஏற்கனவே படித்திருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, அவர்கள் வயதுக்குத் தகுந்தபடி கூடியமட்டும் பெரிய வகுப்புகளிலேயே சேர்த்துவிடவேண்டியது. அப்பிலே கிடையாது'' என்று பாடசாலை உபாத்திமார்களுடைய பரிகாசப் பேச்சு எனது காதுகளுக்கு எட்டும். ஆசிரமத்துப் பெண்களும் இவற்றைக் கேட்டுக்கொண்டு ரோசத்துடன் என்னிடம் வந்து முறையிடுவார்கள். ''கர்மமே கண்ணாக'' உடையவர், இவற்றை எல்லாம் கவனிக்கக்கூடாது என்று அவர்களைச் சமாதானப்படுத்துவேன். காலம் செல்லச்செல்ல கைம்பெண் கோலம் செய்வதே குறைந்துவருகிறது. ஆக, அப்படிப்பட்டவர்கள் வருவதும் குறைந்தது. அப்படி யிருந்தும் ஐந்தாறு வருடங்களுக்கு முன் கோவை ஜில்லாவிலிருந்து கோலம்பூண்ட சுமார் 25 வயதான

ஒரு கைம்பெண் மீனாட்சி என்பவள் வந்தாள். அந்த வருஷம் கோடை விடுமுறையில் என் வீட்டிலேயே சுமார் 20 பேருக்கு ஏற்படுத்தியிருந்த பிரத்தியேக வகுப்பில் இவளும் சேர்ந்து படித்தாள். பிறகு ஜூன் மாதம் மாம்பலத்தில் வித்தியாலயத்துக்கு இவளை யனுப்பினேன். அப்போது ஸ்கூல் மானேஜராயிருந்த காலஞ்சென்ற பூஜ்யர் ஸ்ரீ வாஸுதேவாசாரிய ஸ்வாமிகள் இவளைப் பார்த்துவிட்டு சற்று பிரமிப்படைந்து "என்னம்மா, இந்தமாதிரி கோலம்பூண்ட பாட்டிமார்களைக்கூட நீங்கள் சேர்த்துப் படிக்கவைக்கின்றீர்களா? இதைப்பற்றி கல்வி இலாகா அதிகாரிகள் ஒன்றும் ஆக்ஷேபிக்கவில்லையா?" என்று வியப்புடன் கேட்டார். "நம் ஜனசமூகத்தில், வீட்டிலும் வெளியிலும் கோவில் குளங்களிலும் எல்லா இடங்களிலும் இந்தக் கோலம்பூண்ட, 12 வயது முதல் 100 வயது வரைக்குமுள்ள 'பாட்டி' மார்களைப் பார்ப்பது நம் ஜனங்களுக்கு ஸகஜந்தானே. கிறிஸ்தவர்களில் கன்னியா ஸ்திரீகளைப்போல இவர்களும் உபாத்தியாயினிகளானால் குழந்தைகளுக்கு இந்த ஸந்நியாசினிகளிடம் ஒரு மதிப்பும், பக்தியும் ஏற்படக்கூடுமல்லவா? உண்மையில் இவர்கள் ஸந்நியாஸினிகள்தானே, இவர்களுக்கு உபாத்திமைத் தொழில் பொருத்தமான உகந்த தொழிலல்லவா?" என்று நான் விளக்கினபோது அவர்களும் சிரித்துக்கொண்டு நான் சொன்னதை ஒருவிதமாக ஆமோதித்தார்.

1920-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 5-ஆந் தேதி புதிதாக வந்திருந்த கவர்னர் மனைவி லேடி கோஷன், அவர் புதல்வியுடன் ஆச்ரமத்தை வந்து பார்த்து சந்தோஷமடைந்தார். ஏப்ரல் 30-ஆந் தேதி கோடை விடுமுறைக்காக ஸ்கூல் மூடப்பட்டது. அநேகம் பெண்கள் ஊருக்குப் போனார்கள். வழக்கம்போல "விடுமுறை வகுப்பு" புதிய பெண்களுக்காக நடந்தது. ஆகவே ஆச்ரமம் மூடப்படவில்லை. ஸ்ரீமதி அம்ருதம்மாள் ஆச்ரமத்தைப் பார்த்துக்கொள்ள ஒப்புக்கொண்டபடியால் என் சித்தியம்மாள், நான் இருவருமே இந்த வருஷம் கோடை விடுமுறையில் பெற்றோர்கள் சகோதரிகளுடன் இலங்கைக்குப்போகத் தீர்மானித்தோம். என் சகோதரி சாவித்திரி அவள் குழந்தைகளுடன் பங்களூரில் அவள் கணவரிடம் இருந்தாள்.

அடுத்த இதழில்:—இலங்கை வாசம்

யோகி சுத்தானந்த பாரதியார்

இயற்றிய

**காந்தி கீர்த்தனம்**

350 பக்கங்கள். ரு. 3-8-0.

உயரிய கிளேஸ் பதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
ஷை பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க இலவசச்
சம்பள நிதிக்கே!

**தாரணை நந்தவனம்**
(700 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த ருதுமலர் மாலை ரூ. 9.

வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1-4. 3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1-8.
2. மதமா, மனமா? 1-4. 4. ராணி லீலாவதி 1-0.

# "சித்திரைவதை"

லக்ஷ்மி:—என்ன ஸரஸ்வதி! இத்தனை ஆழ்ந்த கருத்துடன் கடிதம் படிக்கிறாய்? எங்கிருந்து வந்தது?

ஸரஸ்:—என் சிநேகிதை கலாவதி எழுதியிருக்கிறாள். கடிதத்தைப் படிக்கப்படிக்க இப்படியும் உலகில் நடக்குமா என்று வியப்பாக இருக்கிறது லக்ஷ்மி! கலாவதியின் தங்கைக்கு இந்த வருஷந்தான் கல்யாணமாயிற்று.

பார்வதி:—சரிதான் புரிந்துவிட்டது. தலைதீபாவளிக்கு மாப்பிள்ளை வராமல் முடுக்கிக்கொண்டானா? அல்லது சிலரைப்போல் ஜாபிதா தயார் செய்து அனுப்பிவிட்டார்களா? இதோ பார் ஸரஸா! கலாவதியின் தங்கையைக் கல்யாணமாகிய மறுநாள் அவர்கள் அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள். இனி மருமகப்பிள்ளை சாவிகொடுத்த பொம்மைமாதிரி குதிக்கட்டுமே!

லக்ஷ்மி:—பார்வதி! நீ அப்படி வெகு சுலபமாய்ச் சொல்லிவிடுகிறாய். முதல்முதல் புக்ககத்திற்குப் போன பெண்ணை சிலர் நம்வீடும் அவளுக்குத் தாய்வீடு போன்றதுதான் என்கிற முறையுடன் நடத்துவதே இல்லை. அம்மாதிரி இருப்பவர்களிடம் பிறந்தகத்தினரும் முரண்டிக்கொண்டால் அந்த பெண் என்ன செய்யும் பாவம்!

ஸரஸ்:—லக்ஷ்மீ! இப்போது நான் சொல்கிற விஷயம் இதேமாதிரிதான். மறுநாளே அழைத்துப்போனதுமன்றியில் 'அதைக்கொண்டா இதைக்கொண்டா' என்று ஜாபிதா கொடுத்ததோடு தீபாவளிக்குப் பெண்ணையும் பிள்ளையையும் அனுப்பாது சித்திரைவதை செய்கிறாளாம்...

பார்வதி:—பேஷ்! ஸரஸ்வதி! லக்ஷ்மியிடம் அகப்பட்டுக்கொண்டாய். பழமொழிகளை லக்ஷ்மி எதிரில் ஜாக்ரதையாகச் சொல்லவேண்டும். சித்திரைவதையாவது வைகாசிவதையாவது? லக்ஷ்மீ! இதற்கு என்ன அர்த்தம் சொல்லம்மா? இது சரியில்லை என்றுமட்டும் எனக்கும் தெரிகிறது. ஆனால், சரியான பதம் எது என்று புரியவில்லை.

லக்ஷ்மி:—பழக்கத்திலேயே இதுபோல் வந்துவிட்டால் எப்படிப் புரியும்? இதன் சரியான வார்த்தை சித்திரைவதையல்ல—சஸ்திரவதை. சஸ்திரம் என்றால் ஆயுதம் கத்தி அம்பு பாணம் முதலிய எதையும் குறிக்கும் பொதுப்படையான பெயர் இருக்கவேண்டும். கட்டி, கிழங்கு புறப்பட்டுள்ள நோயாளிக்கு டாக்டர் என்ன செய்கிறார்?. சஸ்திரப்யோகம் செய்து குணப்படுத்துகிறார். அம்மாதிரி செய்யும்போது எத்தனைபாதை உண்டாகி உயிர் துடிக்கிறது. அந்தப் பொறுக்கமாட்டாத வேதனைக்கு ஒப்பாகத் துன்பத்தைக் கொடுத்துப் படுத்துகிறார்கள் என்கிற அர்த்தத்தில் இந்தப்பழமொழி பிறந்திருக்கிறது. சஸ்திரவதை என்பதற்கு சித்ரவதை என்று குறுகித்திரிந்து சிதைந்துவிட்டது. யுத்தகளத்திலும் அஸ்த்ர சஸ்திரங்கள் உபயோகித்துச் சேதப்படுத்துகிறபோது எத்தனை விபரீத வலியும் அங்க ஊனமும் உண்டாகிவிடுகிறது. அவர்களுடைய தவிப்புக்கு ஒப்பாகச் சில சம்பவங்களைக் கூறுவதில் இந்தப் பதம் உபயோகமாகிறது. இதைச் சரியாய் உபயோகித்தால்தானே...

ஸரஸ்:—அட ராமசந்திரா! சஸ்த்திரவதை என்பதா சித்திரைவதை என்று ஆகிவிட்டது! நான் என்ன நினைத்தேன் தெரியுமா? சித்திரை வதை என்றபதம் தப்பு, விசித்திரவதைதான் சரியானது என்று நீ சொல்லப்போகிறாய் என்று எண்ணினேன்... சஸ்திரவதை என்று சொல்லவேண்டுமா!

# வீராங்கனை

## வை. மு. கோ. 48-வது நாவல்

## 9

ஆனை அருகில்வரும்போதே பயந்து நடுங்கி ஓடிய சிறுமியர் அரசம்பட்டி கிராமத்தை யடைவதற்குள், ஓடும் ஓட்டத்திலும் வெகுநேரம் ஆய்விட்டதுபோல் தோன்றியது. தலைதெறிக்க ஓடி வந்து "வள்ளியம்மா!...வீராயிவை ஆனை மிதிச்சிடுச்சு...வீராயி செத்துட்டா...வீராயிவை ஆனை கொண்ணுப்புட்டுது"...என்று மூச்சுத்திணறச் சொல்லிய வார்த்தைகள் காதில் பட்டதுதான் தாமதம்—வள்ளி மூர்ச்சையேபோய் விழுந்துவிட்டாள். அந்த ஊரே ஒன்றுதிரண்டுவிட்டது. "ஐயோ பாவமே! இத்தனை நாட்கள் கழித்துப் பிறந்த குழந்தையின் கதி இப்படியா ஆகவேண்டும்! இந்தக் காட்டில் ஆனை எங்கிருந்து வந்தது?"...என்று எல்லோரும் அலறியவாறு வள்ளியைத் தூக்கி மூர்ச்சை தெளியச்செய்து அதே காட்டுக்கு ஓடிவந்தார்கள்.

சற்று தூரத்தில் வரும்போதே ப்ரம்மாண்டமான யானையும் அதைச்சுற்றி மனிதர்களும் கும்மாளத்துடன் நிற்பதும் மேளதாள முழக்கங்கள் ஒலிப்பதும் கண்டும் கேட்டும் ஒன்றுமே புரியாது ஓட்டஓட்டமாக ஓடிவந்து பார்க்கும்போது சாக்ஷாத் தெய்வக் குழந்தையைப்போல் முகத்தில் தனிப்பட்ட தேஜஸூ ஜ்வலிக்கச் சர்வாபரணபூஷிதையாகக் காட்சியளிக்கும் வீராயியைக்கண்டு எல்லோரும் ப்ரமித்து, "வீராயி! வீராயி!"...என்று கத்தி அவளைக் கட்டித்தழுவினார்கள். வேலனும் வள்ளியும் எத்தகைய ஆனந்தத்தை யடைந்திருப்பார்கள் என்பதை எழுதச் சாத்யமாகுமா? "என் கண்ணே! வீராயி!...வீராயி!" என்று ஒரேமுகமாய்க்கூவி அவளைத் தூக்கிக்கொண்டு குதித்தார்கள். இன்னதென்று விவரிக்க இயலாத பேரின்ப உணர்ச்சி அவர்களின் சரீரம் பூராவும் பரவிக் கொந்தளித்தது. வீராயியின் சந்தோஷமும் கரைபுரண்டது.

திவானையும் மற்றவர்களையும் பார்த்து, கம்பீரமான த்வனியில் "இவர்கள்தான் என் பெற்றோர்கள்; இவர்கள் எங்கள் கிராமவாஸி களே. இதோ இவர்கள் அடுத்த கிராமங்களின் வாஸிகள்" என்று சொல்லும்போது, வள்ளியின் எதிர்வீட்டுக்கிழவி 'வீராயியை யானை மிதித்துவிட்டது' என்ற அதிர்ச்சியான விஷயத்தைக்கேட்டு "வீராயி! என் கண்மணீ!" என்று கத்திக்கொண்டே ஓட்ட ஓட்டமாக ஓடிவருவதை முதலில் வீராயி பார்த்துவிட்டதும் "பாட்டீ! பாட்டீ! வா! இதோபாருஎன்ன ஆச்சரியம்!" என்றுகூறிய வாறு பாட்டியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள். வீராயியின் அத்தையும் இந்த அதி ஆச்சரியத்தைக் கண்டு ப்ரமித்து நின்றாள்.

"சேற்றில் செந்தாமரை பூத்ததுபோல் இந்த கிராமத்தில் பாமர ஏழைகளின் வயிற்றில் இந்த மகா பாக்யசாலியான மகாராணி எப்படித்தான் பிறந்தாளோ தெரியவில்லையே! இடைச்சேரியில் சாக்ஷாத் கிருஷ்ணன் பிறந்ததுபோலல்லவா இருக்கிறது!" என்று திவான் இந்த ஜனங்களின் ஆரவாரத்தையும் குதூகலத்தையும் கண்டு தனக்குள் எண்ணி வியக்கும்போது வீராயி திவானைப் பார்த்து கம்பீரமாகச் சொல்லியதைக்கேட்டு புன்சிரிப்புடன் "மகாராணீ! உங்கள் பெற்றோர்கள் இவர்கள்தான் என்பதைப் பார்க்கும்போதே தெரிந்துகொண்டேன். இவர்கள் மகா பாக்யசாலிகள். ...மகனீயர்களே! நமஸ்காரம்...எங்கள் சமஸ்தான பிரஜைகளும், எங்கள் அரசவம்சமும் செய்த பாக்யம் இந்த மகாராணியை எங்களுக்கு கஜேந்திரன் தேடிக்கொடுத்தான்..."

என்றதைக் கேட்டவுடனே முதலில் எதிர்வீட்டுக் கிழவிக்கு வீராயி பிறந்தஅன்று ஒரு பயித்தியக்காரச்சாமியார் சொல்லிய வார்த்தைகள் பளிச்சென்று நினைவுக்கு வந்ததும் "வள்ளீ! வேலா! வீராயி பிறந்தஅன்று சாமியார் ஒருவர் வாழ்த்தி சுபவார்த்தைகள் சொன்னாரே; நினைவிருக்கிறதா? அப்போது அதை எல்லோரும் கேலிசெய்து சாமியாரை கோரகவே கைகொட்டிச் சிரித்தார்களே! பெரிய மகான்களின் வாக்கு எப்போதும் பலித்தே தீரும் என்பதை இப்போது பார்த்தீர்களா?...ஐயா! இந்த விஷயங்கள் எனக்கொன்றுமே புரியவில்லை. ஏதோ மகாராணீ என்றீர்களே! அதை விவரமாகச் சொல்லக்கோருகிறேன்" என்றாள்.

திவான்:—தாயே! எங்கள் நாட்டிற்கு கஜேந்திரபுரி என்று பெயர். இங்கிருந்து அந்த ஊர் சுமார் 50 மைலுக்கப்பால் இருக்கிறது. எங்கள் ஊர் சுதந்தரமான சாம்ராஜ்யம். அதன் ஸ்தல புராணம் ஒரு விநோதமாகும். மூன்று தலைமுறைக்கொருதரம் எங்கள் சமஸ்தான கஜராஜன்தான் அரசசிம்மாசனத்திற்கு ஏற்ற அரசனையோ, அரசியையோ நியமிக்கவேண்டும் என்பது சம்பிரதாயமான முறையாகும். மூன்று தலைமுறைக்குப் பிள்ளைவழியில் அரசர் சமஸ்தானத்தை ஆளுவார். மூன்றுவதரசருக்குச் சந்ததியே இல்லாது போய்விடும். அப்போது அரசபதவிக்கு யானைதான் தேர்ந்தெடுத்துவருவது வழக்கம். அதேபோல் பல தலைமுறைகளுக்குமுன்பு இவ்வாறே கஜேந்திரபுரிக்கு இந்த யானையின் முப்பாட்டன் ஒரு பெண் குழந்தையைத்தான் தேர்ந்தெடுத்துக் கொடுத்ததாம். அந்தக்குழந்தை வெகுமேன்மையாக வளர்ந்து 89 வயதுவரை ராஜ்யபரிபாலனம்செய்துவராளமான ஸந்ததிகளைப் பெற்று மிக்க புகழுடன் பிரஜைகளின் தாய்போல் அரசாட்சி புரிந்து பின் மறைந்தாள். அவர்களுக்குப்பிறகு எங்கள் கஜேந்திரபுரியை ஆண்மக்கள்தான் இதுவரையில் ஆண்டுவந்தார்கள். அந்த அரசி மறைந்து சரியாக 100 வருஷங்களாகிவிட்டன. அதற்குப் பிறகு அதேபோல் இந்த அரசி எங்களுக்குக் கிடைத்துள்ளது கஜேந்திரபுரியின் பாக்யமாகும். அந்த மகாராணிதான் உங்கள்

மூலம் பிறந்து தன்னுடைய பழைய சிம்மாஸனத்திற்கு வந்துவிட்டதாகத் தோன்றுகிறது. அவர்களுடைய பெயர் வீரலக்ஷ்மி என்பதாகும். ஆகையால் இந்த மகாராணிக்கும் அதே பெயரைத்தான் இட்டு வழங்கப்போகின்றோம். தயவுசெய்து இனி வீராயி என்று யாரும் அழைக்காதீர்கள். 'வீரலக்ஷ்மி மகாராணி! "என்று அழையுங்கள். இனி காலதாமதம் செய்யக்கூடாது. உடனே எங்கள் ஊருக்குப் போகவேண்டும். அரசியின் சொந்தக்காரர்கள் கூடவே வரவேண்டும். மற்றவர்கள் தயவுசெய்து போய் விடவேண்டும்...தாயே மகாராணி! நீங்கள் உங்கள் பெற்றோர்களுடன் அதோ அந்த முத்துப்பல்லக்கில் அமருங்கள். நேரமாகிறது—என்றார்.

இந்த ஆச்சரியத்தைக் கேட்ட பொதுமக்கள் அடைந்த பல வித உணர்ச்சிகளில் சந்தோஷம், ஆச்சரியம், பொறாமை, சாமியார் சொல்லிய ஜோஸியம் பலித்ததால் அதில் நம்பிக்கை முதலிய பல பலவிதம் காணப்பட்டன. இந்த வார்த்தையைக் கேட்டதும் வீராயி தன் தோழிமார்களை ஒருதரம் பார்த்தாள்; திவான் முகத்தையும் பார்த்தாள்.

இந்தக் கருத்தறிந்த திவான் வெகு சந்தோஷத்துடன். "மகாராணி! உங்கள் விருப்பத்தை நான் அறிந்தேன். ஆனால் அம்மாதிரி எல்லோரையும் உங்களுடன்கூட அரண்மனைக்கு அழைத்துச்செல்வது சரியில்லை. நம் அரசாங்கத்தின் சட்டமும் இல்லை. முதலில் நீங்கள் கிளம்புங்கள். பிறகு பார்க்கலாம்." என்றார்.

வீராயி திவானைப்பார்த்து "ஐயா! நான் வெகு ப்ரேமையுடன் மேய்த்துவரும் பசுமாடுகளும் எருமைகளும் என்னுடன்கூட அழைத்துச்செல்ல அனுமதியளிக்கவேண்டும். என் வீட்டில் நான் விளையாடும் பொம்மைகள் இருக்கின்றன; அதையும் நான் கூட எடுத்துக்கொண்டு வருவதற்கு உத்திரவிடவேணும்" என்றாள். உடனே வேலன் ஓட்டமாக ஓடி அந்த பொம்மைகளையும் சொப்புகளையும் கொண்டுவந்தான். மாடுகளையும் ராஜ தூதர்களே ஓட்டிச் செல்ல முன்வந்தார்கள்.

முத்துப் பல்லக்கில் ஜம்ஜம் என்று வேலன், வள்ளி, வீராயி, கன்னியம்மாள் ஆகியவர்கள் ஏறி உட்கார்ந்த காட்சி எதிர்வீட்டுக் கிழவியை ஆனந்தசாகரத்தில்ஆழ்த்தியது. வீராயியைச் சேர்த்துக் கட்டி முத்தமிட்டு த்ருஷ்டிகழித்துப் பின் "வீரலட்சிமீ! அன்று ஸ்வாமிகள் சொல்லியபடி உன் செங்கோல் உலகமே மெச்சக்கூடிய நிலைமையில் ராமராஜ்யம்போல் நடந்து அழியாப் புகழ்பெற்று வாழவேண்டும். என் கண்மணீ! மகாராணீ! நாட்டுக்கு அரசியானாலும் வீட்டுக்கு என்றும் குழந்தைதான். ஆகையால் நீ இந்தக் கிழவியை என்றும் மறக்காதே....வள்ளீ! எத்தகைய உயர்ந்தபதவியை அடைந்தாலும் உன் பழைய வாழ்நாளின் நினைவை மறக்காதே. சிலர் புதுப் பணம்படைத்துவிட்டால் தலைகால் தெரியாது துள்ளுகிறார்களே அப்படி நீ துள்ளிவிடாதே. உன் பழைய

கண்ணியத்தையும் வாழ்வின் அமைதியையும் இழக்காதமுறையில் உன் மகாராணியைக் காப்பாற்று. உன் வயிறுசெய்த மகா பாக்யத்தினால் இத்தகைய அதிர்ஷ்டதேவதையைப் பெற்றாய். அந்த பாக்யத்தைக் கைநழுவவிடாது ஜாக்ரதையாய்ப் புதிய உலகத்தில் காலை வை...வேலா! உனக்கு நான் சொல்லவேவேண்டாம். நீ பரம பக்தசிகாமணி; ஏற்கெனவேஉள்ள ஒழுக்கமும் சீலமும் நீ இழக்கமாட்டாய். எல்லோரும் சகல ஸௌபாக்யங்களுடனும் க்ஷேமமாயிருக்க ஆண்டவன் அருள்புரியட்டும்'' என்றுகூறி ஆசீர்வதித்தாள்.

எல்லோரும் ப்ரமிப்புடன் பார்த்துநிற்கையில் பல்லக்கு கிளம்பி விட்டது. "கஜேந்திரபுரி மகாராணிக்கு ஜே! மகாராணிக்கு ஜே" என்று பேராரவாரம் செய்தவாறு சகலமான சைனியங்களுடன் கிளம்பிவிட்டார்கள். மாட்டுக்காரப் பசங்களும் வீராயியின் தோழிகளும் கண்ணீர் துளிர்க்க "வீராயி! வீராயி! நீ எங்களை எல்லாம் விட்டுவிட்டுப் போய்விடுகிறாயே! எங்களை மறக்காதே; வீராயி! எங்களை ஞாபகம் வெச்சுக்கோ! வீராயி!" என்று புலம்பிக்கொண்டே சொன்னார்கள். வீராயியும் அவர்களைப்பார்த்து கையை ஆட்டி அமர்த்திக் கண்ணீர் பெருக "உங்களை நான் மறக்கவே மாட்டேன். நான் போய்வருகிறேன்" என்று கூறினாள்.

"அடாடா! அத்ருஷ்டம் என்றால் இதுவன்றோ அத்ருஷ்டம்! இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்ததாக நாம் சரித்திரங்களில் படித்திருக்கிறோமேயன்றிப் பார்த்ததில்லை. வீராயியின் தசை யாருக்கு வரும்!" என்று அரசம்பட்டி க்ராமமும் அதைச் சுற்றியுள்ள க்ராமங்களும் ஒரேவாயாகப் பேசி வியப்புக்கடலாடின. எதிர் வீட்டுக் கிழவி, தான் அம்ருதம் பருகிய அமரர்போல் காணப் பட்டாள். அவள் உள்ளம் பூரித்தது. "வீராயிக்கு தீர்க்காயுளையும் சகல க்ஷேமங்களையும்கொடுத்து ரக்ஷிக்கவேணும்பகவானே" என்று உள்ளன்புடன் ப்ரார்த்தனை செய்தாள். அவளுடைய கண்களில் வீரலக்ஷ்மியின் புனர்ஜென்மத் தோற்றமே காட்சியளித்து மகிழச் செய்தது.

## 10

மாடுமேய்த்து விளையாடிக் கொண்டிருக்கையில் திடீரென்று தான் அரசிஆய்விட்டதை எண்ணிஎண்ணி சின்னஞ்சிறு உள்ளம் விவரிக்க இயலாது பூரிக்கிறது. தான் கூழும், கஞ்சியும், பழையதும், சமைத்த சுடுசாதமும் அன்றாடும் நிலைமைக்குத் தகுந்தபடி சாப்பிட்டிருக்கிறாளேயன்றி பஞ்சபக்ஷ்யபரமான்னத்தை அவள் கண்ணால்கூடப் பார்த்ததில்லை. கஜேந்திரபுரிக்குப் போய்ச் சேருவதற்குள் ராஜபோஜனத்தைச் சாப்பிடும்போது உண்மையில் வீராயி தன் சினேகிதைகளைத்தான் நினைத்து வருந்தினாள்...."நாம் இத்தகைய உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்திருக்கிறோமே.

இத்தகைய ராஜபோஜனத்தைப் புசிக்கிறோமே. அவர்களுக்கு ஒன்றும் இல்லையே!"....என்று சின்னஞ்சிறு உள்ளத்தில் தோன்றியதால் சற்று அசைவற்று நின்றுவிட்டாள். பிறகு "கடவுளே! என் சிநேகிதர்களுக்கும் இதேபோல் சகலமும் கொடுப்பாயா?" என்றும் வேண்டினாள்.

ஒரே ஏழ்மை நிலைமையில் மூழ்கிக்கிடந்த நால்வருக்கு ஒரே சமயத்தில் சுக்ரதசையடித்துவிட்டது. அவர்களுடைய மனோபாவமும் விசித்திரமாகவே காணப்பட்டது. வீராயியின் நினைப்பு மேலே சொல்லியபடியிருந்தது. வள்ளியின் நினைப்போ, "நம்மைப் போன்ற பாக்யசாலிகள் உண்டா! நம்மைப்போன்று மகாராணியைப் பெற்ற நிகரற்ற அதிர்ஷ்டம் வேறு யாருக்காவது கிடைக்குமா?" என்று தன்னைப் பார்த்தே தான் கர்வங்கொள்ளத் தொடங்கினாள்.

வேலனோ "பகவானே! குசேலருக்கு அருள்புரிந்ததுபோல் இந்த ஏழைக் குழந்தைக்கும் இதைச்சார்ந்த எனக்கும் அருள் புரிந்திருக்கிறாய். இந்த சம்பத்தைக்கண்டு செருக்குற்று உன்னையே மறந்துவிடும்படியான ஒரு புத்தியைமட்டும் எனக்குக் கொடுத்துவிடாதே; சதா உன்னை பஜித்து இன்பமடையும் சக்தியைக் கொடு" என்று வேண்டினான்.

கன்னியம்மாளின் நினைவு பூராவும் தன் செல்வ வீராயியைக் கண்டு களிக்கும் ஆனந்தத்தில் மூழ்கிவிட்டதேயன்றி வேறு எந்த நினைப்பும் உண்டாகவில்லை. மகாராணியின் விஜயத்தை முன்னிட்டு அந்தத் தேசத்தைச் சார்ந்த சிறுசிறு க்ராமங்களில்கூட பேராரவாரத்துடன் வரவேற்பும் மரியாதையும் காணிக்கை சமர்ப்பிப்பதும் தடபுடலாக நடந்தது.

க்ராமத்தில் தரித்திரத்தில் அடிபட்ட வள்ளிக்கு அப்பொழுது பார்க்கும் பணமும் பொருளும் மிகமிக ப்ரமிப்பை உண்டாக்கிவிட்டதால், அவைகளை வாரிவாரித் தன் மடியில் கட்டிக்கொள்ளத் தொடங்கினாள். இதைக்கண்ட வேலன் "சீ...இதென்ன அநாகரீகச் செய்கை! சகல சொத்தும் நம் கண்மணி வீரலக்ஷ்மியினுடையது தானே! நீ எதற்காக இப்படி மூட்டைகட்டுகிறாய்? இதைப் பார்த்து அவர்கள் சிரிக்கிறார்களே!" என்று கண்டித்தான்.

சிறிய புத்தியில் பெரிய யோசனைக்கும் செய்கைக்கும் இடம் ஏது? வழிப்ரயாணத்தை முடித்துக்கொண்டு கஜேந்திரபுரியின் எல்லையை அடையும்போது அந்த தேசத்தின் ப்ரஜைகளுக்குண்டாகிய சந்தோஷத்தை அளவிட்டுக் கூறமுடியாது. அந்த ஆரவாரத்தையும் அவ்வூரின் அலங்கார அழகையும் மாடமாளிகை கூட கோபுரம் முதலிய ப்ரம்மாண்டமான கட்டிடங்களையும் ஆங்காங்குள்ள அத்புதமான பூங்காவனங்களையும், கஜேந்திரபுரிகோட்டையின் கோபுரத்தையும் அதில் பறக்கும் கஜாராஜ உருவமும் சத்யமே ஜயம், என்றவாக்யம் பொறிக்கப்பட்ட அழகியகொடியையும் பார்க்கப்பார்க்க வீரலக்ஷ்மியின் உள்ளத்தில் இன்னதென்று விவரிக்க

முடியாத புதிய உணர்ச்சியும் கட்டுக்கடங்காத ஆனந்தமும் உண்டாகும்வேகத்தில், மின்ஸாரத் தாக்குதலில் பளிச்சென்ற தெளிந்த ஞானமும் அவளையறியாமல் வயதிற்கும் அனுபவத்திற்கும் எட்டாத—மீறிய—ஒரு நூதன சக்தியும், முகத்தில் அபரிமித மான தேஜஸ்ஸும் உண்டாகிப் பார்வையில் அத்புத ஜோதியொன்று தோன்றியது.

இந்த ஆச்சரியமான வசீகர காம்பீர்ய சோபையைக் கண்டு திவானின் உள்ளம் பூரித்துப் புலகிதமடைந்தது. எந்தெந்தபொருள் எந்தெந்த இடத்தில் இருக்கவேண்டுமோ அங்கு இருந்தால் அதற்கோர் தனித்த அழகுவெள்ளம் உண்டாகி ப்ரமிக்கச் செய்கிறதல்லவா? நல்ல சிறந்த ஒரு விக்ரகம் குப்பையில் கிடக்கையில் அதைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். அதே விக்ரகத்தை நன்றாக மெருகிட்டுக் கோயிலிலோ, பூஜாக்ரகத்திலோ, பஜனை கூடத்திலோ அலங்காரமாக வைத்து, தீபாலங்காரங்கள் புஷ்பாலங்காரங்கள் சந்தனம் முதலிய பரிமளங்களுடனும்கூடக் காணும்போது அதே விக்ரகத்திற்குத் தனிச்சிறப்பும் தனிசக்தியும் உண்டாகி ஜனங்களுக்கு பக்தியும் சிரத்தையும் ஒருவிதமான உணர்ச்சியும் உண்டாக்கிவிடுகிறது. இது உலகமறிந்த விஷயம். அதே போல் காட்டில் மாடுமேய்த்துக் குடிசையில் கூழ்குடித்துத்திரிந்த அதே வீராயி இன்று வீரலக்ஷ்மியாய் மகோன்னதச் சிறப்புடன் காணும்போது யார்தான் இவளைக்கண்டு பிரமிக்கமாட்டார்கள்?

கஜேந்திரபுரியின் குடிமக்கள் பெருமிதமான சந்தோஷத்தையடைந்து போட்டிமேல் போட்டியிட்டுக்கொண்டு மகாராணியின் தரிசனத்திற்கு ஓடிவந்து தம்தம் சக்திக்கு ஏற்றவாறு காணிக்கைகளைச் சமர்ப்பிப்பதும் தமக்குத் தெரிந்த வாசகங்களைக்கொண்டு தோத்திரம் செய்வதும், வாழ்த்துவதுமாகத் தமது உத்ஸாகத்தைத் தெரிவித்தார்கள்.

குடிஜனங்களில் சிலர் "தாயே! மகாராணி! குடிஜனங்களாகிய எங்களைக் காப்பாத்துங்க. எங்க கொறையைத் தீர்த்து எங்களுக்கு ஒபகாரம் செய்யுங்க." என்று முறையிட்டார்கள். இவைகளைப் பார்க்கப்பார்க்க, கேட்கக்கேட்க வீரலக்ஷ்மியின் உற்சாகம் விவரம்புரியாது எல்லைமீறிக் கரைகடந்தது. எல்லோரையும் பார்க்கும் பார்வையில் ஜ்வலித்த வீரமும் கருணையும் திவானையே பிரமிக்கச் செய்தது.

மொட்டுக்குள் மறைந்துள்ள புஷ்பம் விகசிதமாகிய உடனே அதன் அபூர்வ அழகும் பரிமளமும் வர்ணவிவர சோபையும் எப்படி வசீகரமாக இருக்கிறதோ அதேபோல் காட்டில்கிடந்த வீராயி வீரலக்ஷ்மியாய்க் காட்சியளிக்கும் அத்புதத்தைப் பார்க்கப்பார்க்க திவானின் சந்தோஷமும் அடங்காத ஆச்சரியமும் காட்டுவெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

அதிகம் சொல்லுவானேன்? கஜேந்திரபுரியை அடைந்ததும், வீரலக்ஷ்மி வீரலக்ஷ்மியாகவே வீராங்கனையாகவே சகலருடைய

கண்களுக்கும் காட்சியளித்தாள். ஊர் பூராவும் ஒரே குதூகலம்! "சுமார் 100 வருஷங்களுக்குமுன்பு இம்மாதிரி ஒரு வீரலக்ஷ்மியை கஜராஜன் கொண்டுவந்து அபிஷேகம் செய்து பட்டமேற்றி அரசிபாக்கினனும். அந்த மகாராணி வெகுவெகு அத்புதமாய் அரசாட்சி செய்தாளாம். அதேபோல் இந்த மகாராணியும் அரசாட்சி செய்யவேண்டும். அந்த மகாராணி பெயர் சிலாசாசனமாயிருப்பதுபோல் இந்த மகாராணியும் பவித்திரப்பதுமையாய் விளங்கி தயாநிதியாய் வாழ்க்கை நடத்தி சுடர் விளக்காகப் பிரகாசித்துப் புகழ்மாலை சூடி குடிமக்களின் ஜீவநாடியாய் வாழவேண்டும்" என்று பலரும் வாழ்த்திவரங்கொடுத்தார்கள்.

திடீரென்று உண்டாகிய ராஜயோகத்தின் ராஜபோகத்தைக் கேட்கவேண்டுமா? வீரலக்ஷ்மியை சிம்மாசனாதிபதியாய் விளங்கச்செய்வதற்காக பட்டாபிஷேக மகோத்ஸவம் வெகு அத்புதமாக நடந்தது. அனேக அரசர்கள் இந்த வைபவத்திற்கு வந்திருந்தார்கள்.

பட்டாபிஷேக மகோத்ஸவம் முடிந்த மறுநாளே வீரலக்ஷ்மிக்கு முறையே படிப்பு, சங்கீதம், வில்வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம் முதலிய சகலவிதமான வித்தைகளையும் போதிக்க உபாத்யாயர்களை நியமித்து, திவான் ராஜ்யபாரத்தைப் பார்த்துக் கொண்டுவந்தார்.

அரசியின் பெற்றோர்களாகையினால் அவர்களும் கல்வியறிவு பெற்று நன்றாக இருக்கவேண்டி வேலனுக்கும் வள்ளிக்கும்கூட உபாத்தியாயர்களை நியமித்துக் கல்விபோதிக்கலானார்கள். அத்ருஷ்ட தேவதையின் கடாட்சம் பரிபூர்ணமாயிருக்கையில் அறிவுக் கடவுளும் தன் திருவருளை பிரயோகிக்காமலிருப்பாரா? வாணியின் கருணை, மடைதிறந்த வெள்ளம்போல் பெருகிவிட்டதால், வீரலக்ஷ்மியின் கல்வியறிவு மிகமிகத் துரிதமாகப் பெருகிக்கொண்டுவந்தது.

எனினும், இந்த ராஜபோகத்தின் நிர்ப்பந்தமும் இதன் தோரணையும் வீரலக்ஷ்மியின் மனத்தை எவ்வளவு வசீகரப்படுத்தினும் காலாற மாடுமேய்த்துத் தன் சகாக்களுடன் திரிந்து விளையாடிய இன்பத்தை மறக்கவும் முடியவில்லை. அதையே அவள் மனது மீண்டும் காண ஆசையுங் கொண்டது. தான் மேய்த்த பசுமாடுகளே இன்று அரண்மனை மாட்டுக்கொட்டிலில் இருக்கின்றன எனினும், தான் நினைத்தபோது தாராளமாய் அங்குச் சென்று அந்த மாடுகளுடன் விளையாடவிடாமல், கூடவே தாதிகள் தோழிகள் புடைசூழ்ந்திருப்பதுடன் "மகாராணி அவ்வாறெல்லாம் செல்லக் கூடாது...அது மரியாதைக்கும் அந்தஸ்திற்கும் குறைவு" என்று சட்டம் வேறு போட்டுவிட்டார்கள்.

"நாம்மட்டும் இத்தனை பெரிய போகத்தில் இருக்கிறோமே. என் சினேகிதைகள் என்ன நிலைமையில் இருக்கிறார்களோ? அவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு வேளைகூட சாப்பாடு வயிறு நிரம்ப கிடைப்பது அரிதிலும் அரிதாக இருக்கிறதே!" என்று சில சமயம் வருத்தப்படுவாள். ஒரு தினம் வீரலக்ஷ்மியின்முன்பு தட்டுத்தட்

டாகப் பழவகைகளும் பக்ஷணவகைகளும் இடைவேளை டிப்பனுக்காக வைத்திருந்ததைப் பார்த்ததும், அந்த சின்ன உள்ளத்திலும் ஒரு மின்வெட்டுச் சக்தி தோன்றி "அடாடா!...என் ஒருத்திக்கு இத்தனை திண்பண்டங்களா! இதை என் சினேகிதைகளுடன் சாப்பிட்டால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்?" என்று எண்ணும் போது கண்ணீர் வந்துவிட்டது.

இதைப் பார்த்த திவான் "மகாராணீ! ஏன் கண்ணீர் வருகிறது? என்ன விஷயம்?" என்றார். வீரலக்ஷ்மி சற்றும் பயப்படாமல் "இத்தனை ஆகார வகைகளையும் நான்மட்டும் சாப்பிடுகிறதா? என்னுடன் ஆடிப்பாடிய சினேகிதைகளுக்கு ஒன்றுமே இல்லையே என்று நினைத்தேன்; வருத்தமாக இருக்கிறது. அவர்களை நான் பார்த்து எத்தனை மாதங்களாகிவிட்டன! பார்க்கவேண்டும்போல் இருக்கிறது" என்று வருத்தத்துடன் கூறினுள்.

இதுகேட்ட திவான் சிறுமியின் உயர்ந்த குணத்தைக்கண்டு சந்தோஷித்துப் பின் "மகாராணீ! உங்களுடைய அன்பை நான் மிகவும் மெச்சுகிறேன். எனினும், அவர்களுடன் நீங்கள் பழைய படி பழகுவது சரியில்லை. உங்கள் அந்தஸ்திற்கும் அவர்களுடைய நிலைமைக்கும் வெகு வித்யாசம் உண்டாகிவிட்டது. வேண்டுமானல் ஒருதினம் நீங்கள் அவர்களை வரவழைத்து விருந்து நடத்திப் பின் அனுப்பிவிடலாம். அதற்குவேண்டுமானல் நான் ஏற்பாடு செய்கிறேன்" என்ருர்.

இதைக் கேட்டுக்கொண்டுவந்த வள்ளியம்மாள் தன் மகளை அடக்கி மிரட்டி "இதென்ன அசட்டுத்தனம்? அந்தப் பிகாரிகளையும் அநாகரீக தரித்திரங்களையும் கூப்பிடுவதாவது விருந்து வைப்பதாவது அதெல்லாம்வேண்டாம்...ஐயா! குழந்தை ஏதோ உளறுகிருள்; அதை நீங்கள் கவனிக்கவேண்டாம். அந்தப் பட்டிக்காட்டு ஜனங்கள் மிகமிகக் கெட்டவர்கள். பொருமைக்காரர்கள். குழந்தையின் அழகையும், சுறுசுறுப்பையுமே கண்டு வயிறெரிந்தவர்கள். இத்தகைய ராஜ பதவியையும் அவளுடைய அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷ வைபவத்தையும் கண்டு வயிறெரிந்து குழந்தையைக் கொன்றுவிடவும் துணிவார்கள். அல்லது மந்திரம், மாயம், சூனியம் முதலியவைகளால் குழந்தையை நாசம் செய்துவிடுவார்கள். குழந்தையின் க்ஷேமத்தையும் எதிர்காலத்தின் வளர்ச்சியையும் கோரி நடத்தவேண்டியவர்கள் நாமேயன்றி அதற்கென்ன தெரியும்? அதிலும் பட்டிக்காட்டில் பரம தரித்திரர்களுடன் வாஸம் செய்ததால் உலக விஷயமே அறியாத நிலைமையில் அவள் பேசுகிருள். நீங்கள் இதற்கெல்லாம் இடங்கொடுக்காதீர்கள்" என்று வெகு அழுத்தமாகக் கூறினுள்.

இந்த வார்த்தை மிகவும் உண்மையாயும் சரி என்றும் தோன்றியதால் அதையே ஆமோதித்ததோடு "மகாராணீ! தாங்கள் சிறிய குழந்தை. ராஜ்யபாரத்தின் விவகாரம் தெரியாது பேசுகிறீர்கள். எப்போதும் ராஜாங்கத்தைச்சரிவர நடத்துமபொறுப்பு மந்திரிக்கும்

திவானுக்குத்தான் தெரியும். ஆகையால் தாங்கள் கவலைப்படாம லிருங்கள். நாங்கள் சகலத்தையும் பார்த்துக்கொள்கிறோம்'' என்று கூறி வீரலக்ஷ்மியைச் சாப்பிட வைத்தார்.

திவான் மதியூகத்தினால், வீரலக்ஷ்மிக்கு நல்ல ராஜாங்க அறிவும் அனுபவமும் உண்டாவதற்காக ப்ரதிதினமும் மாலைநேரத்தில் அவளை உயர்ந்த பூங்காவனத்தில் ஓடியாடி விளையாடச்செய்வதோடு பலபல சரித்திரக் கதைகளை அவள் விரும்பிக்கேட்டு இன்புறும் வண்ணம் சொல்லிக் கேள்விஞானத்தை வளர்த்து, பல வீர ரமணி களின் சரித்திரங்களை நெஞ்சில் பசுமரத்தாணிபோல் பதிய வைத்தார்.

கதை கேட்பதென்றால் சாதாரணமாக மக்களுக்குப் பெரும் ஆவல் உண்டு. அதிலும் உயர்ந்த சரித்திரக் கதைகளைக்கேட்ப தென்றால் அலாதி ப்ரீதி உண்டாவது சகஜம். வீரலக்ஷ்மி திடீரென்று அரசியாகிவிட்டதனாலோ, அல்லது ஜென்மாந்திர வாஸனையின் தொடர்பினாலோ, அவளுக்கு இத்தகைய கதைகளைக் கேட்கக்கேட்க மனதும் அந்த வழியில் அதிக உறுதியுடன் பதிந்து, அதில் ஓர் தனித்த இன்பத்தைக் கண்டாள். திவானைக் கதைகள் சொல்லும்படி சதா அழைத்து ப்ரார்த்திப்பாள். அதில் அபரிமித மான ருசி உண்டாகிய பிறகு மற்ற விஷயங்களைச் சற்று மறந்து தானும் அத்தகைய வீராங்கனையாய், பரிபாலனம்செய்து உலகத்தை ப்ரமிக்கச்செய்யவேண்டும் என்ற ஒரு உணர்ச்சி இதயபாதாளத்தில் வேரூன்றியது.

## 11

அரசம்பட்டி க்ராமத்து ஜனங்கள் சில மாதங்கள் வரையில் வீராயிக்கு உண்டாகிய அபாரமான அதிர்ஷ்டத்தையே பேசி மகிழ்ந்தார்கள். எந்த விஷயத்திற்கும் தூஷணை பூஷணை இரண்டும் பொதுமக்களால் கிடைப்பதுமட்டும் நின்றுவிடாது.

வீராயியுடன் விளையாடி மகிழ்ந்த சிறுமிகள், பாவம்! சதா 'வீராயி, வீராயி' என்று பிதற்றுவதும், அவளுடைய அன்பைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதும் விடவே இல்லை. மாடுமேய்க்கச் செல்லும்போது தம்முடன் வீராயி இல்லாத குறையை அவர்கள் நன்றாக உணர்ந்து ஏங்குவார்கள்.

சிலதினம் இவர்களுக்குள்ளேயே ஒருத்தியை வீராயி என்று தீர்மானிப்பதும், இவர்களில் ஒருவன் யானையைப்போல் தவழ்ந்து வருவதுமாக தாம் வீராயியின் விஷயமாக நேரில் பார்த்ததை எல்லாம் அப்படியே நடத்தி விளையாடி மகிழ்வார்கள். அதில் அந்த ஏழைச் சிறுமிகளும் சிறுவர்களும் அபாரமாய் இன்புற்றார்கள்.

வீராயியைவைத்து வள்ளிகல்யாணம் நடத்தியபோது அவ ளுக்கு திடீரென்று அதிர்ஷ்டம் வந்துவிட்டதால், மறுபடியும் தாங்

களே வள்ளிகல்யாணத்தைப்போட்டால் தமக்குக்கூட அதுபோல் அத்ருஷ்டம் வந்துவிடும் என்று பிரமைப்பட்டு அதையும் நடித்துப் பார்த்து ஏமாற்றமடைவார்கள்.

பெரியவர்களில் சிலர் இச்சிறுவர்களும் சிறுமிகளும் வீராயியின் நினைப்பாகவே இவ்வாறு விளையாடிப் பேசி இன்புறுவதைக் கண்டு சந்தோஷிப்பதுடன் நீங்களும் அவளைப்போல் ராணியாகிவிடுவீர்கள் என்று கூறி உத்ஸாகத்துடன் பரிகஸிப்பார்கள்.

பின்னும்சிலரோ வள்ளியையும் வேலனையும் வயிறெரிய வைவதிலும், "எதடா! நமக்கு இத்தகைய பதவியும் போகமும் கிடைக்கவில்லை என்று வந்துவிட்டதே!. இதற்கு முன்னிருந்த சகல நிலைமையையும் இப்படி அடியோடு மறந்துவிடுவது தர்மமா" என்ற நினைப்பாவது அவர்களுக்கிருக்கிறதா? இந்த ஜனங்களுடைய நன்மைக்கு ஏதாவது உதவி செய்யலாமே என்கிற எண்ணமாவது உண்டாகிறதா? பாவிகள்! படுபாவிகள்..." என்று சதா திட்டியவாறு சாபமிடுவதில் திருப்தியடைந்தார்கள்.

"முன்பு வந்த ஜோஸியம் சொல்லிய சாமியார் மறுபடியும் வரக்கூடாதா? அவரிடம் ஜோஸியம் கேட்டு நாமும் நமது எதிர்கால அத்ருஷ்டத்தைத் தெரிந்துகொள்ளலாமே. அந்த சாமியாரைப் பயித்தியமென்று தூற்றியும் அவமானப்படுத்தியும் அனுப்பிவிட்டோமே! அவர் சொல்லிய வார்த்தைகளல்லவா உண்மையாயிற்று. என்னவிருந்தாலும் வள்ளியைப்போல் பாக்யசாலிகள் யாருமேயில்லை" என்று ஆதியில் அவளைக் குளக்கரையில் பரிகாஸம் செய்த வம்பர்மாகசபையின் அங்கத்தினர்கள் இப்போதும் குளக்கரையில் வள்ளியைப்பற்றியே பேசிக்கொண்டார்கள்.

வள்ளியின் எதிர்வீட்டுக் கிழவியட்டும் அன்றிருந்த அன்பில் அணுவளவும் குறையாமல் தினேதினே வீரலக்ஷ்மிடம் அதிகரித்த ப்ரேமையுடன் அவள் க்ஷேமத்தைப்பற்றி ப்ரார்த்தனை செய்தபடியே இருந்தாள்.

மாதங்கள் ஓடிமறைந்து ஒரு வருஷத்தைக் கடந்துவிட்டன. வள்ளியும் வேலனும் வெகு மும்முரமாகப் படித்துத் தாமே எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டுவிட்டார்கள். உயர்ந்த நூல்களைப் படிக்கப்படிக்க வேலன் வியப்பும் உள்ளக் களிப்பும் பெருமிதமும் அடைந்து பூரித்தான். அவனுடைய அறிவு விசாலமாக ஆக, ஞானக்கண் திறந்து, பக்தியும் உயர்ந்த குணத்தில் போக்கும் வளர்ந்து சிறந்த முறையில் பலனைக் கொடுத்தது.

வள்ளியம்மாளுக்குப் படிப்பு நன்றாக வந்தவுடனே, பல தேசத்து சரித்திரங்களைப் படித்து ராஜாங்க விஷயங்களையும், பல அரசிகள் அரசர்கள் முதலியவர்களின் வாழ்க்கை வரலாறுகள் முதலியவைகளையும் அறிந்துகொண்டாள். அந்த அனுபவத்தில் அவள் தன்னைத்தானே ஒரு மகாராணியாக எண்ணிவிட்டாளேயன்றி சாதாரண அரசம்பட்டி க்ராமத்தின் ஒரு உழவாளி என்பதை அடியோடு மறந்துவிட்டாள். எத்தனைக்கெத்தனை ஆதியில் அடக்க

ஒடுக்கமாயும் பெரியாரிடம் அன்பு பக்தி முதலிய சிறந்த குணக் குன்றாயும் வாழ்க்கை நடத்தினளோ அதற்கு நேர்விரோதமாய் மாறிப்போய்விட்ட விசித்திரத்தை வேலனால் நம்பவேமுடியவில்லை.

ஏற்கெனவே தன்மகளைப் படிக்கவைப்பதற்காகப் பட்டண வாஸத்திற்குப் போகவேண்டும் என்று பிடிவாதம் செய்த முறையில் அபிப்ராய பேதமும் அன்புக் குறைவும் மனஸ்தாபங்களும் உண்டாகியிருந்ததையே வேலன் வெறுத்தான். பட்டணவாஸம் செய்து பெண்ணை மேதாவியாக்க ஆசைப்பட்டதற்குப் பதினுயிரம் மடங்கு அதிகரித்ததும், கனவிலும், கருதாததுமான அதிர்ஷ்டம் அடித்துவிட்டதால் அவளுடைய ஆசை பூர்த்தியாகிப் பழையபடியே நன்றாக இருப்பாள் என்று எண்ணினான். இவன் எண்ணத்தில் மண்ணைப்போடுவதுபோல் வேலனை மதித்துப் பேசுவதோ, அவனுக்குத் தான் அடங்கி நடக்கவேண்டிய மனைவி என்ற நினைப்போ அற்றுப்போய்ப் புதிய பதவி, புதிய பணம், புதிய பட்டம், முதலியவைகளில் மூழ்கிப்போய்த் தான் மகாராணியின் தாயார், உயர்ந்த பெரிய மகாராணி என்ற நினைப்புடன் சதா அலங்கரித்துக்கொள்வதும், ஓயாது உயர்ந்த பண்டங்களைத் தின்பதும் தன் கடமையாக எண்ணி நடக்கவாரம்பித்தாள்.

இந்த மாறுதலின் விபரீத வேகத்தில் வீரலக்ஷ்மிக்காக நியமித்துள்ள தாதிகளை அதிகாரம் செய்யவும் திட்டவும் நாகரீகமற்ற முறையில் தனது அசட்டு ஆட்சியைச் செய்யவும் துடங்கினாள். இதனால் அந்த வேலைக்காரிகளுக்கெல்லாம் இவள்மீது அலட்சியமும் அவமரியாதையும் உண்டாகி, சிலர் கண்மறையத் திட்டுவதும், சில வாயாடிகள் எதிரிலேயே தூக்கிக் கவிழ்த்துப் பேசுவதுமாக ஆரம்பித்தார்கள். இதனால் ஒரு அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய கண்ணியமும் அமைதியும் குலைந்துபோய் வெறும் பட்டிக்காட்டு நாகரீகமற்ற மனிதர்களிடம் காணப்படும் ரஸாபாஸமும் சண்டையும், அடிக்கடி ஆள்களைமாற்றுவதும், புதியபுதிய ஆட்கள் வருவதில் புதியபுதிய சண்டைகளும், திருடு புரடுகள் உண்டாவதுமாக இருப்பதைக் கண்ட அரசவம்சத்தவர்கள் சிரித்து ஏளனம் செய்தார்கள்.

இந்த நிலைமையில் நாட்கள் மாதங்களாகி, ஒரு வருஷத்தைக் நடத்திச்சென்றன. வீரலக்ஷ்மியின் அறிவுவளர்ச்சியுடன் கம்பீரமும் பெருந்தன்மையும் கூடவே வளர்ந்துவந்தது எனினும் தான் சிறுமி, தன் வார்த்தை ஒங்காது என்கிற வரையில் அவள் நன்றாக உணர்ந்திருந்தாள். தன் தாயாரின் அசட்டுத்தனமும் அவளுக்குத் தெரியாமலில்லை. தெரிந்து என்னசெய்வது? ரகஸியத்தில் தாயை அடக்கிப்பார்த்தாள். அதுவும் பலிக்காததால் தனது தாதிகளிடம் தானே ப்ரத்யேக அன்பைக் காட்டி அவர்களை நிலைக்கும்படிக்குச் செய்துவந்தாள்.

அன்று வேலன் தனது பூஜை புரஸ்காரங்களை முடித்துக் கொண்டு வெகு விசனத்துடன் உட்கார்ந்திருந்தான். அவனுவடைய

இதயம் சந்தோஷமென்கிற பசையற்று வரண்டு கிடந்ததை அவன் முகமே எடுத்துக்காட்டியது. வீரலக்ஷ்மி காலை வேளையில் சங்கீதமும் படிப்பும் முடிந்ததும், நந்தவனத்தில் ஓடி விளையாடி, புஷ்பங்களை ஏராளமாகப் பறித்துக்கொண்டு தன் பிதா இருக்கும் இடத்திற்கு ஓடிவந்தாள்.

வழக்கம்போல் தன் பிதா புத்தகமோ பத்ரிகையோ படிக்காமல் ஏதோ மாதிரி உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் சிறுமி திடுக்கிட்டவளாய்த் தந்தையை உற்றுப்பார்த்துப் பின்புறமாக வந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு "அப்பா! ஏன் இப்படி ஏதோ மாதிரி உட்கார்ந்திருக்கிறாய்? உடம்பு சரியாயில்லையா?" என்று அன்பொழுகக் கேட்டாள்.

தன்னருமை மகளுடைய அதிர்ஷ்டத்தைக் கண்டு பூரித்துப் புலகிதமுறும் சந்தோஷத்தில் அந்தச் சிறுமியின் மனது கோணும்படி எத்தகைய விதமும் நடக்கக்கூடாது, யாருமே அவ்வாறு நடக்கக் கூடாது என்பது அவன் முடிவு. ஆகையினால் தன்னுடைய விசனத்தை அந்தக் களங்கமற்ற இதயத்தில் படாது மறைக்க எண்ணியும், அது தெரிந்துவிட்டதே என்ற வருத்தத்துடன் மெல்ல சமாளித்துக்கொண்டும் சமயத்திற்கு ஏற்றபடி ஒரு பொய்யைச் சொல்லத்துணிந்து "ஒன்றுமில்லை கண்ணா! தேள் கொட்டிவிட்டது. அதனால் வலி தாங்காமல் சற்று முகம் சுண்டிவிட்டது. நீ பயப்படாதே ராஜாத்தி!" என்று வாரியணைத்து உச்சிமுகந்து முத்தமிட்டான்.

தேள் கொட்டியது என்றதைக்கேட்டதும் "ஐயையோ! தேளா அப்பா கொட்டிவிட்டது? நீ ஏன் அதற்கு வைத்யம் செய்யவில்லை? அப்போதே நமது வைத்யரிடம் காட்டக்கூடாதா! நான் இப்போதே போய் அழைத்துவருகிறேன்" என்று ஓடவாரம்பித்தாள்.

வேலன், அவளை இழுத்துத் தடுத்து நிற்கவைத்து, "கண்மணீ! தேள் கொட்டும் நட்டுவாக்காலி கடியும் என்போன்ற உழவனுக்கு சர்வசகஜமாயிற்றே! வயலில் வேலைசெய்யும்போது எத்தனையோ தரம் சிறுபாம்பு சுருட்டைப்பாம்பு நீர்ப்பாம்பு தேள் முதலியன கடித்திருக்கின்றன; அதையெல்லாம் நானா லட்சியம் செய்பவன்? உடனே ஒரு பச்சிலையை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு வேலை செய்யப் போய்விடுவேன். "விறகுகட்டுக்காரனுக்கு உடம்புக்கு வந்தால், விரகுச் சுமையுடன் தீர்ந்துவிடும்" என்பது பழமொழி. அதுபோல்தேள்கொட்டுஎல்லாம் எனக்குக்கொசுக்கடிபோலல்லவா கண்ணா! ஏதோ நான் செய்தமகத்தான புண்ணியத்தின் பலனாய்க் கிடைத்தற்கரிய மாணிக்கமாகிய உன்னைப் பெற்றிருக்கிறேன். இந்த ஒரு சந்தோஷம் போதும் கண்ணா! நீ ஒன்றும் கலபை செய்யாதே....இன்று பாடம் படித்தாயிற்றா?" என்றுவார்த்தையைத் திருப்பினான்.

குழந்தை சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்தபடி "ஓ! அப்பவே ஜோராய்ப் படித்துவிட்டேனே! வாத்தியார் என்னைத் தட்டிக்

கொடுத்து மிகவும் புகழ்ந்து பேசினாரப்பா!... அப்பா!... அது கிடக் கட்டும். என்னை எம்பா வெளியிலேயே விடமாட்டேன் என்கி றார்கள்? நான் எதற்காக இந்த ஒரு கோட்டைக்குள்ளேயே அடை பட்டுக் கிடக்கவேண்டும். நான் இந்த ஊரைச் சுற்றிப்பார்க்க ஆசைப்பட்டு திவானைக் கேட்டேன். "தாங்கள் மகாராணீ! வெளியே போகக்கூடாது. அப்படிப் போனால் அது கவுரவமா காது. சாதாரண ஜனங்களுக்கும் தங்களுக்கும் வித்யாஸமில்லாது போய்விடும். இன்னும் தாங்கள் பெரியவர்களானால் பவனிவரும் வேளையில் ஊரைப் பார்க்கலாம்" என்று கூறிவிட்டார்.

எனக்கென்னவோ இதே இடத்தில் சுற்றிச்சுற்றி வருவது பிடிக்கவே இல்லை. 'நமது அரசம்பட்டி க்ராமத்தைப் பார்க்கவேண் டும். என் சகாக்களைப் பார்க்கவேண்டும்' என்று ஆசை பறக்கிறது. என்னையும் அங்கு அனுப்பமாட்டேன் என்கிறார்கள். அவர்களையும் இங்கு வரவழைக்க மறுக்கிறார்கள். நான் மாடுமேய்த்த காட்டைக் கூடப் போய்ப் பார்க்கக்கூடாதாம் அப்பா!....ராஜாங்கம் என்றால் இப்படியா இருக்கும்! நாம் நினைத்தபடி நினைத்த இடத்திற்கு ஏன் போகக்கூடாது?" என்று படபடத்துக் கேட்டாள்.

வேலனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. க்ராமாந்திரங்களில் தெருக்கூத்துப் போடுகிறபோது வேலனும் பலதரம் வேஷங் கட்டிக்கொண்டு ஆடியிருக்கிறான். அவன் ஒருதரம் சகுனியாயும் ஒருதரம் துச்சாசனனாயும், ஒருதரம் கர்ணனாயும், பல பாகங்களில் வேஷம் போட்டிருக்கையில் நாடகம் முடியும் வரையில்கூட, தான் வேலன் இல்லை என்ற நினைப்பு உண்டாகாமல் திண்டாடியிருக் கிறான். வாத்தியார் "டேய் நீ இப்போ கர்ணன் தெரியுமா! வேலன் இல்லேடா...நறய வாரி வழங்கு" என்று சொல்லிய பிறகுதான் தானம் செய்வதில் தாராளத்தைக் காட்டினான். அந்த விஷயம் இப் போது நினைவுக்கு வந்துவிட்டது. அதனால்தான் சிரிப்பு வந்தது. நாட்டுப்புறத்தில் பிறந்து தன்போக்காகத் தனிக்காட்டு ராணி போலும் சுதந்திரப்பறவைபோலும் திரிந்துகொண்டிருந்த காலத் தின் நினைவு மறக்குமா? பூர்வஜன்மாந்திரத்தின் வாஸனையினால் இத் தலைகய அதிர்ஷ்டம்வந்து வலுவில் ஸ்வீகரித்துக்கொண்டபோதிலும், பழய வாஸனையின் பாசம் விடவில்லை பாவம்...என்று தனக்குள் தானே நினைத்துக்கொண்டான் :

இதற்குள் வீரலக்ஷ்மி மறுபடியும் பேசத் தொடங்கி "எம்பா! பேசாமல் மவுனமாயிருக்கே? நிஜமாய் நான் சொல்கிறேன். அரசம்பட்டி க்ராமத்தையும் எதிர்வீட்டுப் பாட்டியையும் என் சிநேகிதர்களையும் கட்டாயம் பார்க்கவேண்டும் என்கிற ஆசை என்னை வாட்டுகிறது. அதனால் மறுபடியும் திவானைக்கேட்டு இதற்கு ஏற்பாடு செய்யப்போகிறேன். நீயும்சொல்லு."

என்று கூறும்போது வள்ளியம்மாள் கடுங்கோபத்துடன் அங்கு வந்து "இங்கேயா இருக்கிறாய்? நாட்டிய வாத்தியார்வந்து காத்திருக்கிறார்: அதை மறந்து இங்கென்ன குலாவல்? பட்டிக்

காட்டுக்குப் போகவேண்டுமாம். அந்த தரித்திர மூதேவிகளைப்
பார்க்கவேண்டுமாம். இதென்ன ஆசை? சீதை மறுபடியும் வன
வாஸம் செய்ய ஆசையாயிருக்கிறது என்று சொன்னாளாம்; அதன்
பலன்தான் திரும்பிவராத காட்டிற்கே வயிறும் பிள்ளையுமாய்ப்
போய்விட்டாளாம். அந்த கதையை நேற்றுத்தான் படித்தேன்.
அதுபோல் உன் கதியும் ஆகவேண்டுமா என்ன? குழந்தைதான்
சொல்கிறதென்றால் நீங்களுமா அதற்குப் புத்தி சொல்லி அனுப்
பாமல் தாளம்போடுகிறீர்கள்? எந்த ஜென்மத்தில் நான் செய்த
பாக்யமோ இந்த ஜென்மத்தில் நான் ஒரு மகாராணியைப்பெற்று
இன்புறும் அதிர்ஷ்டம் அமைந்திருக்கிறது. அதைக் குட்டிச்சுவ
ரடிக்க ஆசைப்படுகிறீர்களா?'' என்று ஒரு கர்ஜனை செய்தவாறு
பெண்ணைத் தாதரவென்று இழுத்துக்கொண்டு போய்விட்டாள்.

குழந்தை உண்மையில் நடுங்கிப்போய் பதுமைபோல்சென்றாள்.
எற்கெனவே மனது உடைந்திருக்கும் வேலனுக்கு இச்செய்கை
பின்னும் அபாரமான அதிர்ச்சியையே கொடுத்தது.

## 12

நாட்டிய வாத்தியார் மிக்க பயபக்தியுடன் மகாராணி என்ற
முறையில் வெகு நன்றாகக் கற்றுக்கொடுக்கும்போதும், வள்ளியம்
மாள், தான் மகாராணிக்கும் தாயார் என்ற அதிகார தோரணையில்,
நாட்டியக் கலையின் அகராதி இன்னதென்று தெரியாமலேயே, அவ
ரிடம் தனது அட்டகாஸத்தைக் காட்டி அதிகாரம் செய்வதை
நிறுத்தவில்லை.

அன்றும் கணவனிடமிருந்து வீரலக்ஷ்மியை இழுத்துக்
கொண்டுவந்து உபாத்யாயரின் முன்பு தள்ளுவதுபோல் தள்ளி
விட்டு "ஓய்! நீர் சொல்லிக்கொடுக்கும் அழகுபோலத்தான் இந்த
சனியனும் ஆடுகிறது. உமது நாட்டியத்தில் சாரமேது? ருசி ஏது?
வீதியில் குருவிக்காரர்கள்கூட இன்னும் அழகாக ஆடிப்பாடு
கிறார்கள். எப்போது பார்த்தாலும் "தக்கதிம்மி தாங்கித்தித்தாம் தைந்
தத்தைம்"...என்று கதறுவது சற்றும் பிடிக்கவில்லை. நல்லதாகப்
பாட்டுக் சொல்லிக்கொடுத்து நாட்டியமாடச் சொல்லும்.

என்று சொல்வதைக்கேட்டு அரசகுடும்பத்துப் பெண்மணிகள்
கொல்லென்று சிரித்துவிட்டார்கள். இக்கலையின் லக்ஷணமே அறி
யாமல் இவள் பேசுவது யாருக்குத்தான் சிரிப்புவராது? வாத்தி
யாருக்கும் உள்ளுக்குள்சிரிப்பும் அவளுடைய மவுட்டீகத்தனத்தைக்
கண்டு அருவருப்பும் உண்டாகியது. எனினும் மகாராணியின்
தாயாராயிற்றே! என்ன சொல்லமுடியும்? "உம். நாயைக் கழுவி
நடுவீட்டில் வைத்தால் அது என்ன செய்யும்?...கிராமாந்திர வாழ்க்
கையில் அந்த முறைக்கு ஏற்றாப்போல் சீராகவும் அடக்கமாகவும்
நடந்திருக்கலாம்...இத்தகைய சமஸ்தானத்தையும் கனவிலும் கண்
டறியாத பதவியையும் திடீரென்று அடைந்துவிட்டதனால் பிரமிப்

பும் குழப்பமும் ஒன்றாகூடி பேராசையிலும் அசட்டு அதிகாரத்திலும் அல்ப ஜம்பத்திலும் கொண்டுவிட்டுவிட்டது பாவம்! உம். இந்த சமஸ்தானம் செய்த பாக்யம் இந்த மகாராணி அபாரமான சமர்த்தாயும் அறிவாளியாயும் இருப்பது ஒன்றே போதும். இந்த அஸமஞ்சனத்தைப்பற்றி யார் லட்சியம் செய்யப்போகிறார்கள்?'' என்ற நீண்ட விமர்சனத்தைத் தானே தனக்குள் செய்துகொண்டு தன் கடமையைச் செய்யவாரம்பித்தார்.

தன் தாயார் பேசியதற்கு எல்லோரும் சிரிக்கும்போது வீரலட்சுமியின் பச்சைத் தளிர்போன்ற உள்ளத்தில் பளிச்சென்று தைத்தது தாயாரை உற்றுப்பார்த்தாள். பிறகு ஆடவாரம்பித்தாள். நாட்டியம் கற்றுக்கொண்டிருக்கையில் அந்த உப்பரிகையின் வெளிப்புறம் உள்ள தோட்டத்திலிருந்து "வீராயி! வீராயி!... இதோ பாரு எங்களேமறக்கமாட்டேன்னு சொன்னீயே! ஒன்னே பாக்கணும்னு நாங்க ஆசையா ஓடியாந்தோம். இப்பிடி வா! வீராயீ! வீராயீ! எதிர் ஊட்டுப் பாட்டி ரொம்ப சாகக்கெடக்கராங்க. ஒன்னேபாக்கணும்னு உசிரா பேசராங்க... இப்பிடி வா... வீராயி'' என்ற பெரிய கூக்குரல் கேட்டதும் நாட்டியத்தை விட்டுவிட்டு வீரலட்சுமி உப்பரிகையின் வராண்டாவில் வந்து நின்று பார்த்தாள்.


அவ்வளவுதான்! அவளுடைய உடலே பூரித்து இதயத்தில் ஆனந்தம் ஊற்றெடுத்தது. தான் ஒரு மகாராணி என்பதையும் தன்னுடைய நிலைமையும் அவர்களுடைய நிலைமையும் மலைக்கும் மடுவுக்கும் இருக்கிறது என்பதையும் அடியோடு மறந்துபோய் ..."காத்தாயீ! கருப்பாயி.......குப்பீ......செல்லாத்தா...சின்னக்கண்ணு...வக்தீர்களா! வாருங்கள்"...என்று பெரிய கூச்சலிட்டுக் கையை ஆட்டி ஆரவாரம் செய்யும் வேகத்தில் உயரவிருந்து குதித்து விடுவள்போல் தள்ளுகிறாள் "நீங்கள் எல்லோரும் சவுக்யமா....பாட்டிக்கா உடம்பு சரியில்லை?"என்று இவள் கூச்சலிட்டுப் பேசும் குரலையும் வெளியில் கத்தும் கூச்சலையும் கேட்டு வள்ளியம்மாள் ஓடிவந்து தன் மகளைத் திட்டியவாறு கடுங்கோபத்துடன் கையைப்பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு "சீச்சீ! தரித்திரப் பிணங்களா! இங்கு உங்களை யார்விட்டது? மூதேவிகளை அடித்துத் துரத்தடா! காவல்காரா!'' என்று திட்டியவாறு உள்ளே சென்றுவிட்டாள். வீரலட்சுமியின் உள்ளம் சுக்கல் நூறாக உடைந்துவிட்டது.

தாயாரின் கையிலிருந்துத் திமிரிக்கொண்டு மறுபடியும் பால்கனிக்கு ஓடிவந்து "சினேகிதைகளே! கோபிக்காதீர்கள். போகாதீர்கள். அம்மா அப்படித்தான் சொல்லுவாள்; நீங்கள் அங்கேயே இருங்கள். இதோ நான் ஓடிவருகிறேன்'' என்று வீராவேசத்துடன் இவள் கத்துவதைத் தடுத்து வள்ளியம்மாள் தோட்டக்காரனைக் கடுமையாகக் கோபித்துக்கொண்டு, அந்த சிறுமிகளையும் சிறுவர்களையும் துரத்திபடிக்கச்சொல்லிவிட்டு வீரலக்ஷ்மியை இழுத்துக்

கொண்டு கதவை 'படார்' என்று சாத்தித்தாளிட்டுப் பின் உள்ளே வந்தாள்.

"சாதாரண மனிதர்கள்விட்டுப் பெண்மணிகள்கூட இத் தகைய கேவலமாக நடந்துகொள்ளமாட்டார்கள். இதென்ன பிசாசுகுணம்!" என்று தோட்டக்காரன்கூட எண்ணியபடியே அந்த கிராமத்து ஜனங்களைத் துரத்தவாரம்பித்தான்.

உள்ளே இழுத்துச்சென்ற வள்ளியம்மாள் மறைவிடத்தில் வீரலக்ஷ்மியை தடார் புடார் என்று அடித்து ஒரு கட்டிலில் தள்ளினாள். ஐயோ பாவம்! வீரலக்ஷ்மிக்கு உண்மையில் துக்கம் பீறிக் கொண்டு வந்தது. தன் தாயாரின் மவுட்டீகத்தனத்தை அந்த நிமிஷம் அவள் உள்ளம் மிகவும் நன்றாக உணர்ந்தது. தாயாரைத் திமிரிக்கொண்டு அழுதபடியே எழுந்து தன் சகாக்கள் நிற்கும் தோட்டத்திற்கு ஓடினாள்.



இதற்குள் திவான் ஓடிவந்து வீரலக்ஷ்மியைச் சமாதானப்படுத்தி அழைத்துவந்தார். வள்ளியம்மாளின் செய்கையை அவரும் வெறுத்து "அம்மணீ! கேவலம் சாதாரண மக்கள் செய்வதுபோல் தாங்கள் இம்மாதிரி ஒரு மகாராணியை நடத்துவது சற்றும் பொருத்தமில்லை. இது அரசாங்கத்தையே அவமதித்ததுபோலாகும். இனி இம்மாதிரி செய்யாதீர்கள். அரசவம்சத்தைச் சேர்ந்தவர்கள் இச்செய்கையை மிகவும் வெறுத்து இகழ்ந்துப்பேசி வருந்துகிறார்கள். இதோடு இச்செய்கையை தயவுசெய்து நிறுத்திக் கொள்ளுங்கள்" என்றார்.

இந்த அதிர்ச்சியைத் தாங்காததும் தான் வெகு நாட்களாகப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்த தன் சினேகிதைகள் தாமாகவந்தும் தான் பார்க்கமுடியாது செய்துவிட்ட விசனமும் ஒன்றுகூடி ஜுரம் வந்துவிட்டது. சிறிய குழந்தையாதலால் பெரியவர்களைவிட தன் சகாக்கள்மீது பாசம் அதிகம் வைத்து நேசிப்பது இயல்பு. ஒருவருடகாலமாய் மிகவும் சுகுமாரமாய்வளர்க்கப்பட்டுவருவதால் ஆதியிலிருந்த தேகநிலைமைகூட மாறி புஷ்பம் போல் அதிர்ச்சிகளைத் தாங்காத மிருதுத்தன்மை உண்டாகியது.

ஜுரம் அதிகரித்து, தன் சினேகிதைகளைப் பார்ப்பதுபோலும், அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதுபோலுமாக, "கருப்பாயீ? காளியாத்தா" என்று அழைத்தாள். "எதிர்விட்டுப் பாட்டியா சாகக் கிடக்கிறாள்? ஐயோ! அவளைப் பார்க்கவேண்டுமே! அவள் எனக்கு எத்தனையோ அன்பாய் கதைகள் சொல்லுவாள்; பாட்டுகள் சொல்லிக்கொடுப்பாள்; பட்சணங்கள் செய்துகொடுப்பாள்,

எங்கே அந்தப் பாட்டி?...ஐயோ! என்னை விடுங்களேன். நான் போய் பாட்டியைப் பார்த்துவிட்டு வருகிறேன்...மகாராணியுமாச்சு மண்ணாங்கட்டியுமாச்சு........கருப்பாயீ!...காத்தாயி! இரு....இரு நான் ஓடிவருகிறேன்." என்று அதே பிதற்றலாகப் பிதற்றியவாறு எழுந்து எழுந்து ஓடவாரம்பித்தாள்.

இதைக்கண்ட சமஸ்தான வைத்தியர்கள் திவானிடமும் மந்திரியிடமும் தனித்துச்சென்று "பிரபோ! குழந்தை மிகச் சிறியவளானாலும் அவர்களுடைய அன்பு எல்லைமீறி இருக்கிறது. ஆதிமுதல் பழகிய பாசத்தை சிலர் விலக்கிவிடுவார்கள். சிலரால் விலக்க முடியாது. இது மனித சுபாவத்தின் தர்மம். இதே காரணத்தினால் இதயம் பலவீனப்பட்டு பிராணனே போனாலும் போய்விடலாம்; அல்லது மூளைக்கு இந்த அதிர்ச்சியால் சேதமேற்படலாம். ஆகையால் மகாராணியின் க்ஷேமத்தைக்கோரி அவர்களுடைய சகாக்களையும் கிழவியையும் இங்கு அழைத்துக்கொண்டு வரச் சொல்வதுதான் தற்சமயம் அபாயமற்ற முறையாகும்.

மகாராணியின் தாயார் இந்தசமயம் முரட்டுத்தனம் செய்வது சரியல்ல. மகாராணியின் மனங்களிக்க அவர்களைக் காட்டிப் பின்னர் வேணுமானால் அனுப்பிவிடலாம். எங்களுக்கு இதுதான் தோன்றுகிறது. பிறகு அபவாதத்திற்கு ஆளாகாதிருப்பதை முன்னெச்சரிக்கையாகச் செய்வதே நலம்" என்று அழுத்தமாகக்கூறி விட்டார்கள். இதைக்கேட்ட மந்திரியும் திவானும் இதைமறுக்கமுடியாது உடனே குதிரை வீரனை யனுப்பிக



கிழவியை அழைத்து வரச் செய்துவிட்டு, தோட்டத்திற்கு ஆளை யனுப்பி வீரலக்ஷ்மியின் தோழிகளை அழைத்துவரச்சொன்னார்கள்.

வள்ளியின் இறுமாப்பு வார்த்தைகளைக்கேட்டுத் தோட்டக் காவல்காரனும் மற்ற சேவகர்களும் அந்த கிராமத்துச் சிறுவர் சிறுமிகளை அடித்துத்துரத்தி அட்டகாசம் செய்கையில், அவர்களில் ஒரு பையனுக்கு நன்றாக அடியும் பட்டுவிட்டது. அந்த பையன் வேறுயாருமில்லை. ஆதியில் வீராயியுடன் வள்ளி கல்யாணத்தில் வேலனைக் கடித்த மாட்டுக்காரப்பையன் சுப்ரமண்யனே யாவன். அவன் காலில் அடிபட்டு ரத்தம் ஒழுகுவதையும் அவன் அழுதுகொண்டே "வீராயி! வீராயி! நான் உன்னைப் பார்க்கணும்னு வந்தா என்னெ கொன்னுப்புட்ராங்களே! இதுதானு ராஜாங்கம்? இதுதானு பட்டாபிஷேகம்? இதுதான் ஒங்க ஊரு நாயமா!" என்று கத்துவதையும் கேட்டு திவானே பயந்துவிட்டார்.

திவான் நேராக வருவதைக்கண்ட காவல்காரன் நடுங்கிப்போய் நமஸ்காரம் செய்து மரியாதையாய் தூரநின்று "எஜமான்! மகாராணியின் தாயாருடைய ஆக்கினைப்படி நாங்க நடந்துகொண்டோம்" என்று முடிப்பதற்குள், அவனை திவான் தடுத்து "போதும் நிறுத்து.......சிறுவர்களே! சிறுமிகளே! உள்ளே வாருங்கள். எங்கள் மகாராணி உங்களை அழைக்கிறார்கள். நீங்கள் வெகு வெகு நேரமாய் இங்கு போராடிக்கொண்டு நின்றதால் களைத்திருக்கிறீர்கள்... அப்பா! நீ கவலைப்படாதே. எங்கள் டாக்டரிடம் நான் மருந்துபோடச் செய்கிறேன்.......காவல்காரா! ஒரு கிழவியை நம் சேவகர்கள் அழைத்துவருவார்கள். ஆட்சேபணையின்றி உள்ளே விடு" என்று உத்திரவிட்டுப் பின் அந்த சிறுவர்களையும் சிறுமிகளையும் முதலில் நன்றாக ஸ்நானம் செய்வித்துப் புதிய உடைகள் கொடுத்துப்பின் அந்தப்புரத்திற்கு அழைத்துச்சென்று...."மகாராணி! இதோ உங்கள் சிநேகிதர்கள்... இதோ பாருங்கள்" என்றார்.

என்ன ஆச்சரியம்! பட்டிக்காட்டுக் குட்டிச்சுவரையும் பனைமரத்தையும் பொட்டல்காட்டையும் தவிர வேறு ஒன்றுமே கண்டறியாத இந்த ஏழைமக்கள், இந்த ப்ரம்மாண்டமான அரண்மனையின் அழகையும், அழகுக்கு அழகுசெய்ததுபோல் பிரகாசிக்கும் செயற்கையழகையும் கண்டு, நடக்கக்கூடத்தெரியாது பிரமித்து ஆங்காங்கே நின்று சகலத்தையும் பார்த்துத் தமக்குள் அதிக பிரமிப்புடன் பேசியபடியே வீரலக்ஷ்மி இருக்குமிடத்திற்கு வந்தார்கள்.

அவள் படுத்திருக்கும் அழகுகூட அந்த ஏழைகளுக்கு வெகு ஆச்சரியமாயிருந்தது. "வீராயி! வீராயி!"....என்று பெரிதாகக் கத்தியவாறு சிறுமிகள் ஓடி அவளைக் கட்டிக்கொண்டார்கள்...

இதுவரையில் இந்த ஏழைகள் இங்கு வரப்போவதை யறியாத வள்ளிக்கு இவர்களைக் கண்டதும், எங்கிருந்தோ கோபமும் பொருமையும் இதயத்திலிருந்து ரௌத்ராகாரமாய்ப் பீறிக்கொண்டு வந்தன. "தரித்திர மூதேவிகளே! உங்களை யார் இங்கு விட்டது? அந்த மடையன் காவல்காரனுக்குப் புத்தி இருக்கிறதா? இல்லையா?

அவன் வயிற்றுக்கு சோறு தின்கிறானா? மண்ணைத் தின்கிறானா? இந்த அல்பப் பதர்களை, அனாதைப்பேய்களை யார் இங்கு வரச் செய்தது?" என்று தாறுமாறாகத் திட்டியவாறு இவர்களை இழுத்துத் தள்ளப்போவதற்குள், திவான் சற்று காகரத்த குரலில் "அம்மணீ! மன்னிக்கவும். மகாராணியின் தாயாயிற்றே என்று நான் பார்க்கிறேன். அதிகமாக எதையும் பேசிவிடவேண்டாம். இந்த சமஸ்தானத்தின் க்ஷேமத்தையும், பொறுப்பையும், நிர்வாகத்தையும் நடத்திச்செல்பவர்களில் நானும் ஒரு முக்யஸ்தன். நான்தான் எங்கள் மகாராணியின் சந்தோஷத்திற்காக இவர்களை அழைத்து வந்தேன். தாங்கள் சற்று விலகியிருக்கலாம்..."

என்று அழுத்தமாகக் கூறியதைக் கேட்டதும், எரிகிற அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோலாகிவிட்டது. ஏதோ வாயைத் திறக்க வந்தாள். இதற்குள் அவள் நாத்தனாராகிய கன்னியம்மாள் அவளை பலவந்தமாக அழைத்துச் சென்றாள்.

வீரலக்ஷ்மிசிறுவர்களின் குரலைக்கேட்டதும் "ஹா! காத்தாயீ! சின்னகண்ணா! கருப்பாயீ! பொன்னீ! வாருங்கள். வாருங்கள்... இப்படி உக்காருங்கள்... திவான் ஸார்! இவர்களுக்குச் சாப்பாடு போடுங்கள்... கருப்பாயீ! சுப்ரமண்யா! நான் இப்போ படிக்கக்கத்துண்டு ஜோரா படிக்கிறேன்; பாட்டுகத்துக்கிறேன். டான்ஸ்கூட கத்துக்கிறேன். ஜோரா ஆடுவேன். நீங்கள்கூட படிக்கக் கத்துக்கிறீர்களா...நான் எப்போதும் உங்களையே நெனைச்சிண்டிருக்கேன்...எங்கம்மா நல்லவள்...ஒன்றுமேசொல்லமாட்டா"....என்று படபடவென்று கூறிய ஆயாஸத்தினால், மறுபடியும் சாய்ந்தாள்.

வைத்தியர்கள் சொல்லிய உண்மையை திவான் ப்ரத்யட்சமாகத் தெரிந்துகொண்டு வீரலட்ச்மியின் சந்தோஷத்தையும் உக்ஸாகத்தையும் கண்டு பரமசந்தோஷத்தையடைந்தார். வீரலட்ச்மியின் இஷ்டப்படியே அவர்களுக்கெல்லாம்வயிறார ஆகாரத்தைப் போடச் செய்துப் பின்..."மகாராணீ! இனிமேல் நீங்கள் சற்று ஓய்வெடுத்துக்கொள்ளும்படி டாக்டர் சொல்லுகிறார். நாளைக் காலையில் இவர்களைச் சந்திக்கலாம். நிம்மதியாகப் படுத்துத் தூங்குங்கள்." என்றுகூறி அவர்களை எல்லாம் வேறு இடத்திற்கு அனுப்பினார்.

இரவு வெகு நிம்மதியாக வீரலட்ச்மி தூங்கினாள். எனினும் நடுநடுவே "திவான் சார்! எங்கள் பாட்டியைப் பார்க்கவேண்டுமே. அவள் செத்துப் போய்விட்டாளா...அவளை அழைத்துவர முடியுமா! அவளைக் கட்டாயம் பாக்கணும் சார்!" என்று வாய்ப்பிதற்றவும் நேரில் கேட்கவும் ஆரம்பித்தாள்.

"மகாராணீ! கவலைப்படவேண்டாம்மா! கிழவியை உடனே அழைத்துவர ஆள் போயிருக்கிறான். கிழவி வந்துவிடுவாள், நிம்மதியாகத் தூங்குங்கள். நாளையே சரியாகிவிடும்" என்றார்...

குதிரைமீதுசென்ற வீரன் திரும்பிவந்து திவானைக் கண்டு, "ப்ரபோ! கிழவி இடத்தைவிட்டு வரக்கூடிய நிலைமையில் இல்லை. உடம்பு அதிகமாயிருப்பதால் சதா "வீரலட்ச்மீ! வீரலட்ச்மீ!

என் கண்ணே! என்னுயிர் போவதற்குள் உன்னைப் பார்ப்பேனா! ராஜாத்தி! நீ சகல ஐச்வர்யங்களுடனும் சந்தோஷமாயிருக்கவேண்டும்" என்று பிதற்றிக்கொண்டே இருக்கிறாள்." என்றதும்,

திவான் "இங்கு மகாராணிக்கும் உடல்நலம் சரியாயில்லை; அந்த கிழவியும் சாகக்கிடக்கிறாள். எப்படி இவர்களைச் சங்கிக்கச் செய்வது!" என்று குழம்பிக்கொண்டிருக்கையில் "மகாராணி படுக்கையைவிட்டு எழுந்து ஓடுகிறார்கள். வாருங்கள்" என்று தாதிகள் ஓடிவந்து திவானை யழைத்தார்கள்.

திவான் அலறிக்கொண்டே ஓடி மகாராணியை மடக்கி அப்படியே தூக்கிக்கொண்டுவந்து மறுபடியும் கட்டிலில் படுக்க வைத்து "மகாராணீ! நீங்கள் உடம்பை அலட்டிக்கொள்ளாமல் படுத்திருங்கள். இன்றே அக்கிழவி வந்துவிடுவாள். உங்கள் சினேகிதர்களை இங்கு அனுப்பிவைக்கிறேன். அவர்களுடன் தமாஷாகப் பேசியும் விளையாடியும் மகிழ்ந்திருங்கள். உடம்பு தானாகச் சரியாகிவிடும்" என்றுகூறிவிட்டு ஒரு ஆளை யனுப்பி அந்த ஏழைச் சிறுவர் சிறுமிகளை அழைத்துவரும்படி உத்திரவிட்டார்.

ஓட்டஓட்டமாகச் சென்ற ஆள் திரும்பிவந்து திவானிடம் ரகஸியமாய், "ப்ரபோ! அந்த ஏழைகளை அரண்மனையில் விட்டதே மகாபிசகு. அவர்களுடைய இழிவான குணத்தைக் காட்டி விட்டார்கள். அரண்மனையிலிருந்த உயர்ந்த பொருள்களில் சிலவற்றை ஆளுக்குக் கொஞ்சமாகத் திருடிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிட்டார்களாம், அங்குள்ளவர்கள் பயந்து எஜமானுக்கு என்ன சொல்வது என்று நடுங்குகிறார்கள். ராணியின் தாயாரோ, இந்த அல்பநாய்களை உள்ளே சேர்க்கக்கூடாது என்று நான் சொல்லியதை யாராவது கேட்டார்களா? வேண்டும். நன்றாகவேண்டும். ஆதிகாலம்முதல் நான் அந்த தரித்திர மூதேவிகளைப் பார்த்துப் பார்த்து அவர்களுடைய குணத்தை நன்றாக அறிந்திருக்கிறேனே. அந்த அல்பங்களுக்கா இத்தகைய இடத்தில்காலை வைக்க யோக்யதை உண்டு? அகோடுவிட்டார்களே. மகாராணியை எங்கே கொன்றுவிடுவார்களோ! என்று நான் பயந்து நடுங்கியது எனக்குத் தெரியும்' என்று அழுகிறார்கள்!"...

என்று சொல்வதைக்கேட்ட திவான் திடுக்கிட்டார். தன்னை இப்படியா ஏமாத்திவிட்டார்கள்? என்று நினைக்கும்போது கோபம் அவருக்கு பீறிக்கொண்டு வந்தது. மகாராணியை இப்போது எப்படி சமாதானம் செய்வது என்கிற குழப்பம் உண்டாகியது.

---


| ஜகன்மோகினி | இந்தியா, ஸிலோன். | பர்மா. | வெளிநாடு |
|---|---|---|---|
| தனிப் பிரதி | அணா 4. | 0—4—6. | 0—5—0 |
| வருடச் சந்தா | 3-0-0. | 3—8—0. | 3-12—0 |

# சிவலோகத்தில் சிவராத்திரி

## ஸ்ரீமதி ரா. லக்ஷ்மி

15--2--1950 நள்ளிரவில் வெள்ளிமலைமேல் சிவபெருமான் பார்வதி தேவியுடன் கொலுவிருந்தார். அவர் திருக்கரத்தில் ஒரு சிறு புஸ்தகம் திகழ்ந்தது.

அருமைப் புதல்வர்களான ஆனைமுகத்தானும் ஆறுமுகத்தானும், மகாலட்சுமியோடு மகாவிஷ்ணுவும், ஸரஸ்வதிதேவியோடு பிரம்மதேவரும், இந்திரன் முதலான தேவர்களும், நாரதர் வசிஷ்டர் வியாசர் முதலான வடமொழி முனிவர்களும், அகத்தியனார் முதலான தமிழ் முனிவர்களும் ஆஜராயிருந்தார்கள். இந்தத் திருக்கூட்டத்திலே நாம் எப்படி வந்து சேர்ந்தோம் என்று எனக்கு அதிசயமாயிருந்தது.

ஆறுமுகத்தான் தன் பன்னிரண்டு கண்களையும் மூடிமூடித் திறப்பதைப் பிள்ளையார் தமது சிறிய யானைக்கண்களால் கண்டு அம்மாவுக்குக் காட்டி, 'தம்பிக்குத் தூக்கம் வருகிறது' என்று கொட்டாவி விட்டுக் கொண்டே சொன்னார். தேவி புன்னகையுடன் பிள்ளைகளை நோக்கி, 'நீங்கள் இருவரும் கண்விழிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. சிவராத்திரிக்குத்தான் இங்கே இத்தனை தேவர்களும் முனிவர்களும் கண் விழிக்கிறார்களே; போதாக்குறைக்குப் பூலோகத்திலிருந்து பொன்னியும் வந்திருக்கிறாள்' என்று சொல்லி, என்னையும் சிரித்துக்கொண்டே நோக்கினாள்.

'தாயே, தந்தையே! நமஸ்காரம்; மன்னிக்கவேணும்; நான் எப்படி இங்கே வந்து சேர்ந்தேன்? என்றேன் நான். 'அதை நீயல்லவா சொல்ல வேண்டும்' என்றாள் தேவி, மறுபடியும் சிரித்துக்கொண்டே.

பிறகு தேவி என்னிடம் வந்து என்னை ஒரு புறமாக அழைத்துக் கொண்டுபோய்'சிவராத்திரியில் கண்விழிக்கிறாயோ, இல்லையோ?'என்றாள்.

'பூலோகத்தில் சென்னை அடையாற்றுக் காந்திநகரில் அல்லவோ கண்விழிக்கிறேன்? இங்கே சிவலோகத்திற்கு எப்படி வந்துவிட்டேன்?'

'இந்தக்கேள்விக்கு நான் பதில்சொல்வதற்குமுன் நீ ஒரு கேள்விக்குப் பதில்சொல்லவேணும். உன் வீட்டில் உன்னைத் தவிர வேறு யார் கண்விழித்தாரோ?'

தேவியின் இந்தக் கேள்விக்கு நான், 'தனித்திருந்தேன், விழித்திருந்தேன்' என்று ஒரு சூத்திரம் போல் பதில் சொன்னேன்.

'சரி, சரி. உன் வீட்டில் மற்றவர்களெல்லாம் தூங்கிக்கொண்டிருக்க, நீ மாத்திரம் கண்விழித்துக்கொண்டிருந்த பலன்தான், இப்போது உனக்குக் கிடைத்திருக்கும் இந்தத் தேவதரிசனமெல்லாம். இருக்கட்டும்: விழித்திருப்பதைவிடக் கஷ்டமல்லவா தனித்திருப்பது இந்தக் காலத்திலே? ஒரு புஸ்தகத்தின் தோழமையாவது பொழுதுபோக்கத் தேவையாயிருக்கிறதே! ஏதோ திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த நாவல் கீவல் படித்துக்கொண்டிருக்கவில்லையா ?

'நாவல் கீவல் சீவல் ஒன்றும் இல்லாமலே கண்விழிக்கத் துணிந்துவிட்டேன்;

'எப்படித்தான் முடிந்ததோ பொன்னி?'

இதற்கு நான் பதில் சொல்வதற்குள்ளே தேவி மறுபடியும் பேசத் தொடங்கி, 'சிவபெருமானது அருமைத் திருக்கரத்தை அழகு செய்கிறதே ஒரு புஸ்தகம், அதை நீ கவனித்தாயல்லவா?' என்று கேட்டாள்.

அந்தச் சிறு புஸ்தகம் ஹஸ்த பூஷணமாக மட்டும் அமைந்திருக்கவில்லையென்று தோன்றியது. 'ரயில்பிரயாண காலத்தையும், உறக்கம் வராத இராக்காலங்களையும் சிலர் துப்பறியும் நவீனங்களுக்கிடையே போக்குவதுபோல் சிவபெருமானும் சிவராத்திரியைக் கழிக்க உத்தேசித்திருக்கவேண்டும். ஆனால் தேவர் கூட்டமும் முனிவர் கூட்டமும் தரிசனத்திற்கு வந்து தொந்தரவு கொடுப்பதுபோலக் காண்கிறது' என்பதுபோன்ற சிந்தனைகளில் அமிழ்ந்து, தேவி கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டேன். 'சிவபெருமான் கையில் இருப்பது என்ன நாவலோ?' என்றும் அறிய ஆவலாயிருந்தேன்.

தேவி ஒரு புஸ்தகத்தை வாசிப்பதுபோல் என் உள்ளத்தை வாசித்துக்கொண்டாள். "அந்தப் புஸ்தகத்திலிருந்து ஸரஸ்வதி பாடப்போகிறாள். சிவபெருமானும் நாங்களும் கேட்டுக்கொண்டிருப்போம். குதூகலமாய்ச் சிவராத்திரி கழியும். இங்கே "தனித்திருந்தேன், விழித்திருந்தேன்." என்று ஒருவரும் பெருமை பாராராட்டுவது கிடையாது. அதனால்தான் உன்னையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி வரவழைத்துக் கொண்டோம்" என்றாள்.

சிவபெருமான் கையை அலங்கரித்த புஸ்தகம் நாவல் அல்ல, ஏதோ ஒரு பாட்டுப்புஸ்தகம் என்று தெரிந்துவிட்டது. ஸரஸ்வதிதேவியே வாய் திறந்து பாடுவதைக் கேட்கலாமே. பூலோகத்துச் சங்கீத ஸரஸ்வதிகளுடன் ஒப்பிட்டும்பார்க்கலாம் என்ற குதூகலமும் ஏற்பட்டது. அதே சமயம் 'அது என்ன பாட்டுப்புஸ்தகமோ?' என்று அறியவும் ஆவல் அதிகரித்தது.

அப்போது தேவி, 'அது சிறிய கையடக்கமான அழகிய புஸ்தகம் என்பதைக் கவனித்தாயல்லவா? அது திருவாசகம். உங்கள் உலகத்திலே பாடும் பக்தமணிகளில் மகானுபாவராயிருந்த மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம்தான்' என்றாள்.

எனக்கு முதல்முதல் ஆச்சரியமாகத்தான் இருந்தது. பிறகு, 'சிவராத்திரியில் கண்விழிக்கத் திருவாசகத்தைப் பாடிக்கொண்டிருப்பது நல்லது' என்று என் தாயார் சொன்ன புத்திமதி ஞாபகத்திற்கு வந்தது. கடைசியாக, 'சிவபெருமானும் தனிமை கழிக்கத் திருவாசகமும் கையுமாயிருப்பது பொருத்தம்தான்' என்று தோன்றியது. 'பாட்டுக்கு உருகும் பரமசிவம் அல்லவா? திருவாசகம் போன்ற இன்னிசைத் தமிழ்ப்பாடல்களைக்கொண்டுதான் சிவபெருமானும் பொழுதுபோக்கவேண்டியிருக்கிறது! இது தெரிந்தால் தமிழன்பர்கள் தமிழின் சிறப்பைக் குறித்தும் திருவாசகத்தின் சிறப்பைக் குறித்தும் இன்னும் எத்தனையோ பிரசங்க மழைகளைப் பொழிந்து தள்ளுவார்களே!' என்று எண்ணமிட்டேன்.

தேவி சிரித்துக்கொண்டே 'சிவபெருமான் இங்கிலீஷ் புஸ்தகங்களையோ, ஹிந்திபுஸ்தகங்களையோ படித்தாபொழுதுபோக்குகிறார்? திருவாசகம் என்ற தமிழ் வேதம் கிடைத்தபின் பழைய ஸம்ஸ்கிருத வேதங்களைக்கூட மறந்துவிட்டாரே! இவர் மாணிக்கவாசகருக்குக் குமாஸ்தாவாக அமர்ந்து திருவாசகத்திற்கு இரண்டு பிரதிகள் தயாரித்துக்கொண்டார் என்பது உனக்குத் தெரியாதா?' என்றாள்.

அந்தக் கதை எனக்குத் தெரிந்ததுதான். தாம் பாடப்பாடத் திருவாசகத்தை எழுதிப் பிரதி செய்துகொடுக்க ஒருவரும் இல்லையே என்று மாணிக்கவாசகர் கவலைப்பட்டார். அப்போது நடராஜா மாறுவேஷத்தில் வந்து திருவாசகத்திற்குப் பிரதிசெய்யத் தொடங்கினாராம். ஒரு பிரதி தான் ஆசிரியருக்குத் தேவை. பெருமானே இரண்டு பிரதிகள் தயார்

செய்தாராம். ஒரு பிரதியை ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு, ஒரு பிரதியைத் தாமே எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டாராம். திருவாசகத்தைச் சிறப்பிக்கும் ரஸமான கதை என்றுதான் நான் இதுவரை எண்ணியிருந்தேன்.

தேவியோ 'ஒரு திருவாசகப் பிரதியுடன் பெருமான் மறைந்தாரே அந்தப் பிரதிதான் இப்போது கைலாஸத்திலுள்ள திருவாசகம்' என்று, நாங்கள் நின்ற இடத்திலிருந்து சிவபெருமான் கையிலிருந்த புஸ்தகத்தைச் சுட்டிக் காட்டினள்.

'அது ஏடு; இது புஸ்தகம்போல் அல்லவா இருக்கிறது?' என்று எண்ணிக்கொண்டே உற்றுநோக்கினேன். 'ஒருவேளை நம் கவனக்குறைவு தானோ?' என்றும் நினைத்தேன்.

தேவியோ பளிச்சென்று என் கருத்தைத் தெரிந்துகொண்டு 'அதே பிரதிதான் அச்சுவாகனம் ஏறி உலாவுகிறது. சிவலோகத்தில் மட்டும் நாகரிக வளர்ச்சி கிடையாதா?' என்றாள்.

அதிசயமாகச் சிவபெருமான் வீற்றிருந்த திசையை உற்று நோக்கினேன். ஏதோ ஒரு மின்சார வெளிச்சத்திலே சிவபெருமான் திருவாசகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். 'அது மின்சார வெளிச்சமல்ல! சுயம்பிரகாசமாயிருக்கும் பரஞ்சோதிக்கு வேறு வெளிச்சமும் வேண்டுமோ?' என்றாள் தேவி.

'நல்ல வெளிச்சம், நல்ல பொழுதுபோக்கு, நல்ல சிவராத்திரி!'' என்று எனக்குள் நான் சொல்லிக்கொண்டேன். உதடு அசையாமல் சொன்ன இந்த வார்த்தையும் தேவி காதில் விழுந்துவிட்டது.

'சிவராத்திரிக்கு மட்டுமா இந்தப் பொழுதுபோக்கு? ஒரு மகா மகா சிவராத்திரி வரப்போகிறது. அது தான் கடைசியாக வரப்போகிற யுகப் பிரளயம். அப்போதும் நல்ல பொழுதுபோக்காக ஒரு புஸ்தகம் வேண்டுமல்லவா?' என்றாள் தேவி.

'அப்போதைக்கு இப்போதே மணிவாசகமாக ஒன்றைத் தேடி வைத்துக்கொண்டாரோ பெருமான்?' என்றேன்.

'ஆம், மாணிக்கவாசகரின் திருவாசகம் மணிவாசகம் தானே? அந்த மகாப் பிரளயம் என்ற கடைசி ஊழியில் தனிமை போக்குவதென்றால் லேசான காரியமா? இப்போது இங்கே உள்ள இந்தக் கூட்டமும் அப்போது இருக்கமுடியாதே! அந்தக் கடுமையான, கொடுமையான தனிமை கழிக்க எந்த நீண்ட நாவல்தான் பயன்படும்? பாடப்பாடத் தெவிட்டாத திருவாசகமல்லவா தேவை?' என்றாள் தேவி.

எனக்கு மனோன்மணீய நாடகத்தில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இது குறித்துப் பாடியிருப்பது பளிச்சென்று நினைவிற்கு வந்தது:

> கடை ஊழி வரும் தனிமை
> கழிக்க அன்றோ, அம்பலத்துள்
> உடையார் உன் வாசகத்துள்
> ஒரு பிரதி கருதியதே!

[கடை ஊழி - கடைசி ஊழிக்காலம். அம்பலத்துள் உடையார்-நடராஜா, சிவபெருமான்.]

'ஆம், அப்போதே முன் ஜாக்ரதையாக இரண்டு பிரதிகள் தயாரித்து வைத்துக்கொண்டார். கடைசி ஊழிக்காக அப்படிச் செய்தார் என்ற ரகசியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளைக்கும் தெரிந்துவிட்டது! ஆனால் இனிமேல்

ரதிகள் குறித்த கவலை இல்லை. உங்கள் உலகத்தில் போல் இங்கும் அச்சுவாகனம் வந்துவிட்டதே' என்றாள்.

'சிவபெருமானே தனிமை கழிக்கப் புத்தகம் தேடி வைத்துக்கொண்டிருக்க, நான் இந்தமகாசிவராத்திரியைப் புத்தகத்தோழமையும் இல்லாமல் கழித்துவிட்டேனே !' என்று சொன்னேன்.

'ஓஹோ, சித்திராதேவியின் தோழமையில்தான் சிவராத்திரியைக் கழித்துவிட்டாயோ பொன்னம்மா?' என்று சொல்லிக்கொண்டே வந்த என் அம்மா அன்னம்மாளின் குரல்கேட்டுத் திடுக்கிட்டேன்.

ஒருவகையாகச் சமாளித்துக்கொண்டு, 'என்ன அம்மா ! சிந்தனைகளின் தோழமையிலே சிவராத்திரி கழிந்தது. பொழுது கழிந்ததென்று தெரியாமலே கழிந்துபோயிற்று. அத்தனை ரஸமான சிந்தனைகள் !' என்றேன்.

'இரண்டொன்று சொல்லேன் மாதிரியாக' என்றாள்.

நான் சிவலோகத்திலே சிவராத்திரி கொண்டாடிய சிறப்பை முழுக்க முழுக்கச் சொல்லிவிட்டேன்!

---

183159

வை. மு. கோ. நாவல்கள் (தற்போது கைவசமுள்ளவை.)

| | | | |
|---|---|---|---|
| K 1. வைதேகி | ரூ. 4—8 | 65. அமுதமொழி (சாதா) | 2—0 |
| 7. கோபாலரத்னம் | 1—4 | „ (கிளேஸ்) | 2—8 |
| 11. விரவஸந்தா | 1—0 | 66. பிரதிக்ஞை | 1—0 |
| 15. நளினசேகரன் | 1—0 | 67. ஆசைப்ரவாகம் | 2—0 |
| 25. பக்ஷமாலிகா | 0-12 | 68. வாழ்க்கைத்தோட்டம் | 2—4 |
| 35. அனாதைப் பெண் | 1-12 | 69. அபராதி | 1—2 |
| 41. வானக் குயில் | 2—0 | 70. வெளுத்த வானம் | 2—0 |
| 42. உளுத்த இதயம் | 0—6 | 71. ப்ரதிபலன் | 1—8 |
| 43. மகிழ்ச்சி உதயம் | 1—4 | 72. பவித்திரப்பதுமை | 1—8 |
| 45. மாலதி | 1—0 | 73. பெண் தர்மம் | 1—0 |
| 46. வத்ஸகுமார் | 1—0 | 74. உண்மைச் சித்திரம் | 1—0 |
| 49. படகோட்டி | 1—2 | 75. தெய்வீக ஒளி | 2—0 |
| 50. ஆத்ம சக்தி | 2—0 | 76. சிலாசாஸனம் | 1-12 |
| 51. உணர்ச்சி வெள்ளம் | 2—8 | 77. புதுமைக்கோயில் | 1—4 |
| 52. சந்தோஷமலர் | 2—0 | 78. மனத்தாமரை | 2—0 |
| 53. கருணாலயம் | 2—0 | 79. தபால் விநோதம் | 1—0 |
| 54. புகழ்மாலை | 1-12 | 80. ஓவியப்பரிசு | 1—8 |
| 55. தயாநிதி | 2—4 | 81. இனிய முரசு | 1—0 |
| 56. சுடர் விளக்கு | 0-12 | 82. ஆண்டவனின் அருள் | 1—0 |
| 58. ஞானதீபம் | 2—4 | 83. இசைப்புயல் | 1—8 |
| 59. வாத்ஸல்யம் | 2—0 | 84. அமரத்யாகி | 2—0 |
| 61. மதுரகீதம் | 2—0 | 85. காலக் கண்ணாடி | 1—8 |
| 62. பிரார்த்தனை | 1—0 | 86. ஜெயபேரிகை | 1—8 |
| 63. இதய ஒலி | 1-12 | 87. ஜீவநாடி | 2—0 |
| 64. மலர்ந்த இதழ் | 2—8 | | |

(ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி.)

அன்று உண்டியில் வசூலான தொகை 23 ரூபாய். அதை மகாத்மாஜி சங்கத்தின் இலவசச் சம்பள நிதிக்காக நன்கொடையாய் பாலிகாகழகத்துத் தலைவி கொடுத்தார். மங்களத்துடன் விழா இனிது முடிவடைந்தது.

## சுதந்திரக் குடியரசு விழா

26-ந்தேதி காலை 8 மணிக்கு ஸ்ரீமதி A. ஸரோஜாபாய் கொடியேற்றி அழகாகப் பேசினார்கள். M. C. ஜானகியம்மாள். M. O. ஜானகியம்மாள் கனகம்மாள் ஜகன்னாதாசாரி. R. A. ஜானகியம்மாள். வை. மு. கோ. முதலியவர்கள் பலபல விஷயங்கள் பற்றி அத்புதமாய்ப் பேசினார்கள். மாலை 5 மணிக்கு பெரிய ஊர்வலம் நடந்தது. ஸ்ரீமதி C. ஸரஸ்வதிபாய் தலைமையில் மாலை ப்ரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடந்தது. அது சமயம் N. ஸீதாபாய் ப்ரார்த்தனை கீதம் பாடினார். குந்தலா, ராதா, சுபத்ரா, ஜெயலக்ஷ்மி, பண்டித ராமானுஜாசாரியர் முதலியவர்கள் வெகு முக்யமான விஷயங்களை ரஸமாய்ப் பேசினார்கள். தலைவியின் அபூர்வமுடிவுரையுடன் கூட்டம் முடிவடைந்தது. அகல் விளக்குகள் ஏற்றி தீபாலங்காரம் செய்திருந்த காட்சி அத்புதமாயிருந்தது.


27-ந் தேதியன்று வெள்ளிக்கிழமை உத்ஸவத்தை ஸ்ரீமதி கண்ணம்மாள ராஜகோபாலன் நடத்தினார்கள். குமாரி கமலா வெகு அத்புதமாகப்பாடி எல்லோரையும் பரவசமுறச் செய்தாள். A. ஸரோஜாபாய் பிடில் மிகவும் திறமையுடன் அனுஸரித்து வாசித்துப் புகழ்பெற்றார்.

30-ந் தேதி—மகாத்மாவுக்கு மிகவும் பிடித்தமானதும், அவர் பிரதி தினமும் பாராயணம் செய்துவந்ததுமான ஸ்ரீமத் பகவத் கீதையை நம்முடைய சங்கத்தில் முறையே ஒன்றரை வருட காலமாக நடத்தி இன்று 18-வது அத்யாயத்தைப் பூர்த்திசெய்து மகாத்மாவின் ஆத்மாவைக் களிக்கச்செய்த பெருமை கீதை உபாத்தியாயினியான ஸ்ரீமதி கனகம்மாள் ஜகன்னாதாச்சாரியைச் சேர்ந்ததாகும். கீதையின் 700 ச்லோகங்களுக்கும் 700 நெய்விளக்குகள் ஏற்றி பாராயணம் முடிந்ததும் தீபாராதனையும் மங்கள ஆரத்தியும்செய்த ஒரு அபூர்வ காட்சியைக் கொடுத்துவைத்திருந்தவர்கள்தான் காணமுடியும். காட்சியை வர்ணித்து எழுதிமுடியாது. சில பக்தர்கள் தட்டுதட்டாக தாம்பூலம், புஷ்பம் முதலியவைகளைக் கொணர்ந்து கொடுத்தார்கள். மாணவிகள முறையே ஆரத்தி செய்தார்கள். பிறகு கீதை உபாத்யாயினி ஸ்ரீ கீதாசாரியன் படங்களை அன்பளிப்பாக மாணவிகளுக்குப் பரிசு வழங்கினார்கள். ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய், திருவாலி ராமானுஜாசாரியர், கௌஸல்யா ஆகியோர் கீதையின் ப்ரபாவத்தையும் மகாத்மாஜியின் பெருமையையும் த்யாகத்தையும்பற்றிப் பேசினார்கள். பிரஸாதங்கள வழங்கி மங்கள கீதத்துடன் விழா முடிவடைந்தது.

பிப்ரவரி 3 உ வெள்ளிக்கிழமை உபயத்தை ஜகன்மோகினி தன் கைங்கர்யமாக நடத்தினாள். N. ஸீதாபாய், N. ராஜீ, ராதா மூவரும் அத்புதமான கீதவிருந்தளித்து உத்ஸவத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

பிப்ரவரி 10 உ ஸ்ரீமதி M. O. ஜானகியம்மாள் உபயத்தை நடத்தினார்கள். ஸ்ரீமதி கனகம்மாள் தயாரித்திருந்த அஷ்டபதிகும்மி, கோலாட்டம் முதலியவைகளை கொண்டாட்டமாய் நடத்தினார்கள். ஸ்ரீமதி ரங்கப்ரியை பேசினார்கள்.

பிப்ரவரி 17உ கஸ்தூரிபா தினம், குமாரி ராஜியின் ப்ரார்த்தனை கீதத்துடன் ஸ்ரீமதிவிசாலக்ஷி விச்வநாதன் (காசினி) அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தது. ஸ்ரீமதிகள். M. O. ஜானகியம்மாள், அலமேலு வெங்கட்ராமன், ரங்கப்ரியை, சிறுவன் விச்வநாதன ஆகியோர் அன்னையைப் பற்றிப் பேசினார்கள். ஜெயலட்சுமி துரைஸாமி அவர்கள் வெகு அத்புதமாக இசைவிருந்தளித்தார்கள். வழக்கம்போல் ஸ்ரீமதி சுபத்ரா பிடில் வாசித்தார். விழா இனிது முடிவடைநதது.




உயரிய பதிப்பு 10 படங்களுடன் ரூ. 2.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
*Managing Editor:* V. M. SRINIVASAN, M. A. B. L.